16-31 மார்ச் 2000 ரூ. 5.00

www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

வடமாநிலத் தேர்தல் முடிவுகள்: சாதி-கிரிமினல் கூட்டணிக்கே வெற்றி!

அரசியலமைப்புச் சட்டத் திருத்தம்:

## மறுகாலனி ஆதிக்கத்திற்காக மறுவார்ப்பு




படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## மாணவர்கள் தலையில் விழப்போகும் இடி

அரசாங்க சேவைகளுக்கான கட்டணம் உயர்த்தப்பட வேண்டும் என்ற ஐ.எம்.எஃப்.இன் கட்டளைக்குப் பணிந்து, பா.ஜ.க. அரசு கல்லூரி / பல்கலைக்கழகங்களின் மாதாந்திரப் பயிற்சிக் கட்டணத்தை உயர்த்தி விட முடிவெடுத்துள்ளது. இனி, பயிற்சிக் கட்டணம் குறைந்தபட்சமாக ஐம்பத்தைந்து ரூபாயில் இருந்து அதிகபட்சமாக இருநூறு ரூபாய் வரை உயரக் கூடும். பயிற்சிக் கட்டணம் பத்து ரூபாய், பதினைந்து ரூபாய் என்றிருக்கும் பொழுதே, நூலகக் கட்டணம், ஆய்வுக் கூடக் கட்டணம் என்றெல்லாம் தீட்டி, மாணவர்களிடமிருந்து வருடத்திற்கு இரண்டாயிரம் ரூபாய் வரை கல்லூரி / பல்கலைக்கழக நிர்வாகம் பிடுங்கி விடுகிறது. இப்பொழுது பயிற்சிக் கட்டணமே பல மடங்கு உயரும் பொழுது, வருடாந்திர மொத்தக் கட்டணம் எங்கு போய் நிற்கும்? தனியாருக்குப் போட்டியாக அரசாங்கமும் கல்விக் கட்டணத்தை உயர்த்தினால், ஏழை மாணவர்கள் உயர்கல்வி கற்பதைக் கைகழுவி விட வேண்டியதுதானா?

## தொழிலாளர்களின் குடிசை, நகரக் குப்பையா?

தில்லி நகரின் அழகுக்காக ஏற்கனவே தொழிற்சாலைகளை மூடச் சொல்லி தொழிலாளர்களின் வாழ்வைப் பறித்த உச்ச நீதிமன்றம், இப்பொழுது தில்லியைச் சுற்றியுள்ள குப்பங்களை இடித்து அப்புறப்படுத்தச் சொல்லி உத்தரவிட்டிருக்கிறது. இந்த உத்தரவு, தில்லி நகரில் கிடைக்கும் கூலி வேலையைப் பார்த்துக் கொண்டு வாழ்க்கையை ஓட்டிவரும் 30 இலட்சம் தொழிலாளர்களின் வாழ்க்கையையே கேள்விக்குறியாக்கி விட்டது. ஏனென்றால், இந்த உத்தரவு தொழிலாளர்களின் குடிசைகளை இடிப்பதோடு நின்று விடாது; அவர்களை தில்லி நகர எல்லையில் இருந்தே துரத்தியடிப்பதில் தான் முடியும்! "உலகின் மிகப்பெரிய சனநாயக நாட்டின் தலைநகர் இப்படி குப்பையும் கூளமுமாக இருக்கக் கூடாது" என வேதனைப்படுகிறது உச்ச நீதிமன்றம். நகரத்தின் அழகுக்குக் குப்பையை வாரிக் கொட்டினாலே போதும். ஆனால் இவர்களோ, குப்பைகளோடு தொழிலாளர்களையும் சேர்த்தல்லவா வாரிக் கொட்டுகிறார்கள்!

## கொட்டடிக் கொலையை மூடி மறைக்கும் 'நீதி' மன்றம்

தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த ராஜா என்ற சிறுவன், 1994-ஆம் ஆண்டு முத்தமிழ் முதல்வன் என்ற போலீசுகாரனால் எரையூர் போலீசு நிலையத்தில் அடித்துக் கொல்லப்பட்டு, பின்னர் அவனது சடலம் போலீசாரால் ஊத்தமலை எஸ்டேட்டுக்குக் கடத்திச் செல்லப்பட்டு எரிக்கப்பட்டது. இக்கொட்டடிக் கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டிருந்த முத்தமிழ் முதல்வன் உள்ளிட்ட நான்கு போலீசாரும் தற்பொழுது விடுதலை செய்யப்பட்டுள்ளனர். வழக்கில் சாட்சியமாகக் காட்டப் பட்ட அச்சிறுவனின் மிச்சம் மீதி எலும்புகளை 'நீதி' மன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த எலும்புகள் வேட்டைக் காரர்களால் கொல்லப்பட்டு எரிக்கப்பட்ட குரங்கினுடையதாகக் கூட இருக்கலாம் என்று எதிர்க்கட்சி வக்கில் வாதிட்டதை ஏற்றுக் கொண்டு, வழக்கை தள்ளுபடி செய்து விட்டது.




## போபால் விஷவாயு விபத்து: கேளிக்கைப் பொருளல்ல

போபாலில் இழுத்து மூடப்பட்டுக் கிடக்கும் யூனியன் கார்பைடு நிறுவனம், இந்திய மக்களின் உயிரை எத்துணை கிள்ளுக் கீரையாக அமெரிக்க ஏகாதிபத்தியமும், ராஜீவ் கும்பலும் மதித்தன என்பதற்கான உதாரணம். இப்படி மனிதப் பேரழிவுக்குக் காரணமாக இருந்தவற்றை நினைவுச் சின்னமாகப் பராமரிப்பது உலக வழக்கம். ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களில் அணுகுண்டு விழுந்த இடங்கள், ஐரோப்பாவில் நாஜிகளால் அமைக்கப் பட்டிருந்த சித்திரவதைக் கூடங்களை இதற்கு உதாரணமாகக் கூறலாம். பா.ஜ.க. அரசோ, போபாலில் உள்ள யூனியன் கார்பைடு தொழிற்சாலை உள்ள இடத்தில் கேளிக்கைப் பூங்கா ஒன்றினை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

## இவர்களா, மக்கள் தலைவர்கள்?

முன்னாள் பிரதமர் சந்திரசேகர், தனது பூனைப் படையோடு லிச்சவி துரித வண்டியில் தில்லிக்குச் சென்று கொண்டிருந்த பொழுது, உ.பி. மாநிலத்திலுள்ள சதத் என்ற புகை வண்டி நிலையத்தில், சில மாணவர்கள் சந்திரசேகர் பயணம் செய்த பெட்டியில் ஏற முயன்றனர். பூனைப் படையினர் மாணவர்கள் ஏற முயன்றதைத் தடுக்கவே; இரு தரப்பினருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது. இந்த மோதலால் வெறி பிடித்துப் போன பூனைப் படையினர் மாணவர்களை நோக்கிச் சுட்டதில், இரு மாணவர்கள் படுகாயமடைந்தனர்; சிறீகாந்த் என்ற மாணவன் இறந்தே போனான். மாணவர்களால், கிரிமினல் அரசியல் பேர்வழி சந்திரசேகருக்கு என்ன ஆபத்து ஏற்பட்டுவிடும்? இக்கிரிமினலை நாட்டு மக்களிடமிருந்து பாதுகாப்பதுதான் பூனைப்படையின் வேலை போலும்!

## சந்திரபாபு நாயுடு மேதாவியா? மோசடிப் பேர்வழியா?

ஆந்திரத் தலைநகர் ஐதராபாத் நகரில் தரகு முதலாளிகளின் சங்கமான சி.ஐ.ஐ. நடத்திய கூட்டமொன்றில், ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயடு "தொலைநோக்கு 2020" என்ற ஆவணத்தை வெளியிட்டார். இதில், ஆந்திர மாநிலத்தின் மொத்த உற்பத்தியை 2020-ஆம் ஆண்டுக்குள் ஏழு மடங்கு உயர்த்திக் காட்டுகிறேன் எனச் சவால் விட்டிருந்தார். இந்தியத் தரகு முதலாளிகள் நாயுடுவின் 'திறமை'யைப் புகழ்ந்து தள்ள, அக்கூட்டத்தில் கலந்து கொண்ட சுவிட்சர்லாந்து நாட்டின் அமைச்சர், "தொழில் வளம் மிகுந்த எனது நாட்டில் கூட இந்த ஏழு மடங்குச் சாதனை சாத்தியமில்லை. எனது நாட்டில் இப்படியெல்லாம் வாக்குறுதி கொடுத்தால், ஒன்று சிறைக்குள் தள்ளி விடுவார்கள்; இல்லையென்றால், ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்து விடுவார்கள்" எனக் கூறி நாயுடுவை ஒரு பிடிபிடித்தார். தகவல் தொழில்நுட்பப் புரட்சி மூலம் ஆந்திர மாநிலத்தை முன்னேற்றிக் கொண்டிருப்பதாக இந்திய மக்களிடம் கதை விட்டுக் கொண்டிருக்கும் சந்திரபாபு நாயுடு நிச்சயம் பைத்தியக்காரனல்ல!



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

**தொகுதி: 15**

**இதழ் 8 - 9**

1 மார்ச் 2000 - 31 மார்ச் 2000

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம் : கரோ

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்



புதிய ஜனநாயகம்
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


★ மருத்துவ மாணவர் போராட்டம் ★ வழக்கறிஞர் போராட்டம்

## துறை சார்ந்த போராட்டங்களின் வரம்புகள்

''தனக்கு வந்தால்தான் தெரியும் தலைவலியும் காய்ச்சலும்'' என்பார்கள். அதைப்போல, தலைவலியும் காய்ச்சலும் கண்டு அவதிப்படுகிறது நடுத்தர வர்க்கம்.

இந்த உலகமயம், தனியார்மயம், தாராளமயம் என்கிற புதிய பொருளாதாரக் கொள்கை, பொருளாதாரக் கட்டுமான மறுசீரமைப்பு நடவடிக்கைகள் இந்த நாட்டையும் மக்களையும் வெகுவாகப் பாதிக்கும் என்று கம்யூனிசப் புரட்சியாளர்களும், ஜனநாயக வாதிகளும் கடந்த பத்தாண்டுகளாகவே எச்சரித்து, அது பற்றி அறியாதவர்களிடமும் பிரச்சாரம் செய்து போராடி வருகிறார்கள்.

எந்தவொரு விசயத்தையும் எளிதில் அறிந்து கொள்ளும், புரிந்து கொள்ளும் வாய்ப்புடைய படிப்பாளிகள் நிறைந்த இந்த நடுத்தர வர்க்கமோ, அத்தகைய புதிய பொருளாதாரக் கொள்கைக்கு எதிரான பிரச்சாரத்தை வெறுப்போடு அணுகியது அல்லது பாராமுகமாக நடந்து கொண்டது. புதிய பொருளாதாரக் கொள்கையின் வரவால், தாம் மேட்டுக் குடிக்கு உயர்ந்து விடுவோம் என்கிற கனவு நடுத்தர வர்க்கத்துக்கு நிறையவே துளிர்த்தது.

படித்த தனது வர்க்கத்துக்கு மேலை நாடுகளில் ஏராளமான வேலை வாய்ப்புகளை உலகமயமாக்கம் வாரி வழங்கும் என்று எதிர்பார்த்தார்கள். அரசு அலுவலர்களின் சிகப்பு நாடா, இலஞ்ச ஊழலுக்கு மாறாக, தனியார் துறையின் சேவை பெருகும் என்று நம்பினர். தமது கொஞ்சநஞ்ச சேமிப்பையும் பங்குச் சந்தையிலும் நிதி நிறுவனங்களிலும் முதலீடு செய்தால் ஒன்றுக்குப் பத்தாய்ப் பெருகும் என்று கணக்குப் போட்டனர். ஆனால், விரைவிலேயே எல்லாம் கானல் நீராகிப் போகக் கண்டனர்.

ஊருக்குள் வெள்ளம் புகுந்த பின்னும், தாம் மேட்டுப் பகுதியில் குடியிருப்பதால் தம் வீட்டுக்கு வெள்ளம் வராது, அஞ்ச வேண்டியதில்லை என்கிற அலட்சிய பாவம் காட்டினர். ஆனால், ஒவ்வொரு வீடாக வெள்ளத்தின் மட்டம் உயர்ந்து வாசற்படிக்கு வந்தபோது அலறுகின்றனர். அதுபோன்றுதான் கடந்த பத்தாண்டுகளாக வெவ்வேறு ஆட்சியாளர்கள் மேற்கொண்டு வரும் சீர்திருத்தங்களால் பாதிப்பு ஏற்பட ஏற்பட ஒவ்வொரு பிரிவினராக அலறுகின்றனர். தனித்தனியே போராட்டத்தில் குதித்து, முட்டி மோதி சோர்வுற்று ஓய்ந்து போகின்றனர். புதிய சீர்திருத்தங்கள் என்கிற இராட்சத எந்திரம் எல்லோரையும் நசுக்கிக் கொண்டு முன்செல்லுகிறது.

இந்த வகையில் நாடு முழுவதும் வழக்கறிஞர்களும், தமிழகத்தில் மருத்துவக் கல்வி மாணவர்களும் நீண்ட போராட்டத்தில் குதித்தனர். மருத்துவக் கல்வி மாணவர்கள் தமிழக முதல்வருடன் நடத்திய பேச்சு வார்த்தையைத் தொடர்ந்து தமது போராட்டத்தை விலக்கிக் கொண்டனர். வழக்கறிஞர்கள் போராட்டமோ அடக்குமுறைகளை எதிர்கொண்டாலும் தொடர்கிறது. அரசின் நிலை பிடிவாதமாக இருப்பதால், வழக்கறிஞர் போராட்டம் அவ்வளவு விரைவில் முடிவுறாது; அவர்களது கோரிக்கைகளையும் அரசு ஏற்காது என்கிற நிலையே நீடிக்கிறது.

16 அம்சக் கோரிக்கையை முன்வைத்துத் தமிழக பயிற்சி மருத்துவர்கள், பல் மருத்துவர்கள் மற்றும் முதுநிலை மருத்துவ மாணவர்கள் பிப்ரவரி 15-ந் தேதி முதல் காலவரையறையற்ற போராட்டத்தில் குதித்தனர். பயிற்சி மருத்துவர்களுக்கு மாநில அரசு தற்போது வழங்கும் உதவித் தொகை ரூ. 2,250-லிருந்து மத்திய அரசு தரும் ரூ. 14,000 அளவுக்கு உயர்த்த வேண்டும்; தனியார் துறையில் மருத்துவக் கல்லூரிகள் திறப்பதையும், அனுமதியின்றி இயங்கி வரும் மருத்துவக் கல்லூரிகளையும் தடை செய்ய வேண்டும்; தமிழக மருத்துவமனைகளில் மிக மோசமாக உள்ள அடிப்படை வசதிகளை மேம்படுத்த வேண்டும் ஆகிய மூன்றும் அக்கோரிக்கைகளில் அடங்கும்.

இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி பயிற்சி மருத்துவர்களும் மாணவர்களும் செருப்புத் துடைப்பது, முடி திருத்துவது போன்ற ''புதுமை''யான போராட்டங்களை நடத்தினர். (இந்த வேலைகளின் மீது படித்த நடுத்தர வர்க்கத்தின் வக்கிரமான பார்வையை வெளிப்படுத்துவதாக அவர்களின் நடவடிக்கைகள் அமைந்துள்ளதை அவர்கள் ஏனோ உணரவில்லை.) இப்போராட்டம் ஓர் அரசியல் கட்சியின் தூண்டுதல் காரணமாக நடப்பதால் போராட்டத்தைக் கைவிட்டால்தான் பேச்சு வார்த்தை என மந்திரி வீராசாமி முரண்டு பிடித்தார். வேளாண் பல்கலைக்கழக மாணவியர் கொளுத்தப்பட்ட விவகாரத்தை அரசியலாக்கக் கூடாது என்று போலி மார்க்சிஸ்டுகள் உட்பட எதிர்த்தரப்பினரும், மருத்துவ மாணவர் போராட்டத்துக்கு அரசியல் கட்சிகள் ஆதரவளிக்கக் கூடாது என்று ஆளும் தரப்பினரும் கூறுகின்றனர். ஏன், அரசியலாக்கி அலசினால் என்ன தவறு? அப்பொழுதுதானே உண்மை விளங்கும்!

மருத்துவ மாணவரிடம் பேச்சு வார்த்தைக்கு ஒப்புக் கொள்ளாமல் இழுத்தடித்த கருணாநிதி, ஒரு தலையாக உதவித் தொகை அதிகரிப்பை மட்டும் அறிவித்தார்;

**தொடர்ச்சி 9-ஆம் பக்கம்**

படிப்பகம்

www.padippakam.com

## அரசியலமைப்புச் சட்டத் திருத்தம்

# மறுகாலனி ஆதிக்கத்திற்காக ஒரு மறுவார்ப்பு

எந்தவொரு அரசமைப்புச் சட்டத் திருத்தத்தையும் கூட நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு பலம் ஆளும் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கூட்டணி அரசுக்குக் கிடையாது. அதற்கே எதிர்த்தரப்பின், முக்கியமாகக் காங்கிரசின் ஆதரவு தேவை.

இருந்தபோதும், அரசுத் தலைவர் கே.ஆர். நாராயணனும், நாடாளுமன்ற எதிர்த்தரப்பு முழுவதும் "கடும் எதிர்ப்புக் காட்டிய போதிலும், துணிந்து" அரசமைப்புச் சட்டத்தை முழுவதுமாக மறு ஆய்வு செய்வதற்கான ஆணையம் ஒன்றை ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கூட்டணி அரசு நிறுவியுள்ளது.

1983 ஜனவரியில் சுவாமி முக்தானந்த் சரஸ்வதி எழுதிய "தற்போதைய அரசியலமைப்புச்சட்டம்" என்ற சிறு நூலில் அது "இந்திய அரசியலமைப்புச் சட்டமாக உள்ளது; ஒரு இந்து அரசியலமைப்புச் சட்டமாக இல்லை" என்று குறைபட்டுக் கொண்டிருந்தார். 1989 நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையில் "அதிகாரக் குவிப்புப் போக்குகளைத் தடுக்கும் வகையில் அரசியல் சட்டம் திருத்தப்படும்" என்ற வாக்குறுதியளித்தது பா.ஜ.க. 1993 சங்கராந்தி அன்று ஆர்.எஸ்.எஸ். அதிபர் ராஜேந்திர சிங் பையா ஒரு அறிக்கை வெளியிட்டார். அதில், "தற்போதைய கட்டமைப்பு இந்தியாவின் இன்றியமையாத் தேவைகளுக்கு, இதன் மரபுக்கு, பாரம்பரிய மதிப்பீடுகளுக்கு, தார்மீகப் பண்புகளுக்கு ஈடு கொடுப்பதாக இல்லை. நாடு விடுதலையடைந்தபோது, 1935 ஆம் ஆண்டு (ஆங்கிலேயர் கொண்டு வந்த) அரசியலமைப்புச் சட்டம் தான் சில சில்லறை மாற்றங்களோடு ஏற்கப்பட்டது. அவ்வப்போது தேவையையொட்டி திருத்தங்கள் செய்யப்பட்டன.

"இந்த நாட்டின் சில தனித்தன்மைகள் அரசியலமைப்புச் சட்டத்தில் பிரதிபலிக்க வேண்டும். இந்தியா அதாவது பாரதம் என்கிற இடத்தில் பாரதம் அதாவது இந்துஸ்தானம் என்றிருக்க வேண்டும். அதிகார பூர்வ ஆவணங்கள் பன்முகக் கலாச்சாரம் பற்றிக் குறிப்பிடுகின்றன. ஆனால் நமது கலாச்சாரம் நிச்சயமாக பன்முகக் கலாச்சாரமே கிடையாது. அடிப்படைக் கருத்தாகச் சொல்வதானால் நமது கலாச்சாரம் ஒப்பற்ற ஒருமையைக் கொண்டிருக்கிறது. பெட்டி பெட்டியாகப் பிரிந்துள்ள ஒரு நாடு நீடித்திருக்கவே முடியாது. இவையெல்லாம் நமது அரசியலமைப்புச்சட்டத்தில் மாறுதல்களின் அவசியத்தைக் குறிக்கின்றன. நமது நாட்டின் தார்மீகப் பண்புகள், அறிவுத் திறனுக்குப் பொருத்தமான வகையில் அரசியலமைப்புச்சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும்" என்று தெரிவித்தார்.

பா.ஜ.க.வின் அப்போதைய தலைவராக இருந்த முரளி மனோகர் ஜோஷி அடுத்த சில வாரங்களிலேயே சொன்னார், "தற்போதைய நிலைமைக்குக் காரணம் இந்துத்துவாவைப் புறக்கணித்ததுதான்." வேதகால இந்தியாவின் கீர்த்தியைப் பாடிய "அவர், அது புதுப்பிக்கப்பட வேண்டும்; அதற்காக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை புதிய நோக்கில் பார்க்க வேண்டும்" என்றார்.

1996-இல் சில நாட்கள் மட்டுமே பதவியில் இருந்த பா.ஜ.க. ஆட்சியில் சட்ட மந்திரியான ராம்ஜேத்மலானி ஒரு பொது சிவில் சட்டத்தை நிறைவேற்றுவதற்கான வாய்ப்புகளை ஆய்ந்தறியும் பணியைத் துவக்கி விட்டார். 1998-இல் உள்துறை மந்திரியான அத்வானி, "அரசியலமைப்புச் சட்டத்தை மறுஆய்வு செய்வதற்கான குழு அமைக்க வேண்டியதன் அவசிய"த்தை வலியுறுத்தினார்.

கடந்த ஜனவரி 26-ந் தேதி இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் பொன்விழா நாடாளுமன்ற அரங்கில் நடந்தது. அதில் பேசிய அரசுத் தலைவர் நாராயணனும் பிரதமர் வாஜ்பாயும் அரசியலமைப்புச் சட்ட மறுஆய்வு, திருத்தம் குறித்து முரண்பட்ட கருத்துக்களை வெளிப்படுத்தினர். "அரசியலமைப்புச் சட்டத்தால் நாம் தோல்வியடைந்தோமா, நம்மால் அது தோற்றுப் போனதா என்பதை முதலில் பரிசீலிக்க வேண்டும். நாடாளுமன்ற ஆட்சி முறைக்கு ஒடுக்கு எடுக்கும் வேலை செய்யக்கூடாது" என்று நாராயணன் எச்சரித்தார். "நாடாளுமன்ற ஜனநாயகம் என்ற சட்டகத்துக்குள் தான் மறு ஆய்வும் திருத்தமும் இருக்கும்" என்று அரசாங்கம் விளக்கமளித்தது.

காலனிய காலச் சட்டத்தோடு இந்துத்துவா கோட்பாடுகளும் கலந்து உருவாக்கப்பட்ட 'சுதந்திர' இந்தியாவின் புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தில் கையெழுத்திடும் நேரு



சட்டபூர்வ எதிர்த்தரப்பு எழுப்பும் சந்தேகங்களுக்கு இடமளித்திடாத வகையில் அரசியலமைப்புச் சட்ட மறு ஆய்வுக் குழுவின் அலுவல் குறிப்பை வரையறுத்து அரசாங்கம் அறிவித்துள்ளது.

"மாறிவரும் அவசியமாகிய ஒரு நவீன இந்தியாவின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கும் ஒரு திறமையான, பிரச்சினையற்ற, வலுவான ஆட்சி அமைப்புக்கும் ஏற்ற வகையில் அரசியலமைப்புச் சட்டம் எவ்வளவு சிறந்த முறையில் செயலாற்ற முடியும் என்பதை கடந்த 50 ஆண்டு அனுபவத்தின் அடிப்படையில் நாடாளுமன்ற ஜனநாயகம் என்ற சட்டகத்துக்குட்பட்டு பரிசீலனை



படிப்பகம்

www.padippakam.com

செய்வது; அரசியலமைப்பு சட்டத்தின் அடிப்படைக் கட்டுமானத்தில் தலையீடு செய்யாமல் அவசியமான மாறுதல்கள் ஏதாவது இருப்பின் பரிந்துரைப்பது''- இதுதான் சட்டமறு ஆய்வுக் குழுவின் அலுவல் பணியென அரசாங்கக் குறிப்பு கூறுகிறது.

ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பல் தமது சொந்தத் திட்டத்தை ஒதுக்கி வைத்துவிட்டு இப்படிப் பொத்தாம் பொதுவான அலுவல் குறிப்பை அறிவித்துள்ளதால், இதில் ஏதோ உள்நோக்கம் இருக்கிறது என்று சட்டபூர்வ எதிர்த்தரப்பு கருதுகிறது.

1976-இல் அவசரநிலை பிரகடனம் செய்த இந்திரா தலைமையிலான காங்கிரசு அரசாங்கம் கூட இதுபோன்ற அரசியலமைப்பு மறு ஆய்வுக் குழுவை சுவரண்சிங் தலைமையில் அமைத்தது. அதன் பரிந்துரை அடிப்படையில் சட்டத்தின் முகப்பில் ''சோசலிச மதச்சார்பற்ற குடியரசு'' என்கிற பெயர் உரிச்சொற்கள் சேர்க்கப்பட்டன. இப்போது கூட மறுஆய்வை எதிர்க்கும் காங்கிரசு, அலுவல் குறிப்பு குறித்து அரசாங்கம் அனைத்துக் கட்சிகளிடமும் கலந்தாலோசிக்க வேண்டும்; சமூக ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் பின்தங்கிய மக்கள் நலனுக்கான எந்தத் திருத்தத்தையும் ஆதரிப்போம் என்கிறது.

''நாடாளுமன்றம் மட்டுமே மறுஆய்வை மேற்கொள்வதற்குத் தகுதியானது. நிர்வாகப் பிரிவு அத்தகைய முடிவெடுப்பதற்கு உரிமையற்றது. தனிப்பட்ட திருத்தத்தில் இருந்து ஒட்டுமொத்த மறுஆய்வு தேவையற்றது'' என்று போலி மார்க்சிஸ்ட் கட்சி அறிவித்துள்ளது.

''இது, அரசியலமைப்புச் சட்டத்தைச் சிதைத்து, அதன் குடியரசு தன்மையின் மீது சந்தேகத்தை உருவாக்கும் உள்நோக்கம் கொண்டது; இந்த முயற்சியை ஒத்தி வைத்து நாடாளுமன்றத்தின் முன்பு விவகாரத்தை வைக்க வேண்டும்'' என்கிறது போலிக் கம்யூனிஸ்டு கட்சி.


முன்னாள் முதல்வர்களான வி.பி.சிங், குஜரால், தேவகவுடா ஆகியோரும் கூட பா.ஜ.க.வுக்கு உள்நோக்கமிருப்பதாகவும், பா.ஜ.க. அரசுக்கு மறு ஆய்வு செய்வதற்கான உரிமையில்லை என்றும் கூறுகின்றனர்.

காங்கிரசு, போலிக் கம்யூனிஸ்டுகள், தலித் அமைப்புகள் தற்போதைய அரசமைப்புச் சட்டம் மாற்றப்படுவதை எதிர்ப்பது வேடிக்கையானது.

தற்போதைய சட்டத்தைப் புனிதமானது எனப் போற்றும் காங்கிரசுதான் இந்திரா காந்தியின் ஆட்சியில் மொத்தமாக இடைநீக்கம் செய்துவிட்டுத் தனது பாசிசக் கொடுங்கோலாட்சியை நிறுவியது. அப்போது இந்தியாவின் எந்தவொரு குடிமகனும் உயிர்வாழும் உரிமையைக்கூட கோர முடியாது என உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்தது.

இதே காங்கிரசுதான் எண்பதுக்கும் மேற்பட்ட தடவை அரசமைப்புச் சட்டத்தைத் திருத்திக் கந்தல் கந்தையாக்கியது. அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் மூலம் நாட்டின் ஜனநாயகத் தன்மை பறிக்கப்பட்டு எதேச்சாதிகார அரசியலமைப்பை கொண்டு வருவதுதான் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கூட்டணி அரசின் நோக்கம் என்று சாடும் காங்கிரசுதான் நூற்றுக்கும் மேற்பட்ட தடவை 356வது சட்டப்பிரிவை ஏவி ஜனநாயகத்தைக் கேலிக் கூத்தாக்கியது.

இந்தியப் போலிக் கம்யூனிஸ்டுகளின் சித்தாந்தக் குரு ஈ.எம்.எஸ். சங்கரன் நம்பூதிரி, தற்போதைய அரசமைப்புச் சட்டத்தை அடியோடு தூக்கியெறிய வேண்டும் என்று தனது அதிகாரபூர்வமான



**அரசியல் அமைப்புச் சட்ட மறு ஆய்வுக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள இந்துத்துவவாதி வெங்கடாசலையா**

தேசாபிமானி ஏட்டில் எழுதினர். அதற்காக அவர்மீது அரசியல் சாசன அவமரியாதை வழக்குத் தொடரப்பட்டு அவரும் மன்னிப்புக் கேட்டார். தண்டனையில் இருந்து தப்பிப்பதற்காக இப்படிச் செய்தாலும் தற்போதைய அரசமைப்புச் சட்டம் நீடிக்கக் கூடாது என்பது தான் கட்சிக்குள் அவர்கள் பேசிவந்தது. ஆனால் இப்போதோ இதன் புனிதத்தைக் காப்பதற்கு வரிந்து கட்டிக் கொண்டு நிற்கிறார்கள்.

தற்போதைய அரசியலமைப்புச் சட்டத்தின் முன்வரைவுக் குழுத் தலைவராக இருந்து, அதை அரசியல் நிர்ணய சபையில் வாதாடி நிறைவேற்றியவர் அம்பேத்கர். அவர் தங்கள் சாதியைச் சேர்ந்த தலைவர் என்கிற காரணத்துக்காக, கேடுகெட்ட இந்த அரசியலமைப்புச் சட்டத்தைத் தம் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடும் தலித் இயக்கத்தினர், சட்டமேதை என்றும் அம்பேத்கரைப் போற்றுகின்றனர். இந்த அரசியலமைப்புச் சட்டத்தின் பிற்போக்குத்தனம், தலித்துக்கள் உட்பட இதன் மக்கள் விரோதத் தன்மை, ஆளும் வர்க்கங்கள் - சாதிகளுக்கு சார்பான அடிப்படை ஆகியவற்றை நாம் எடுத்துக் காட்டும்போது ''இவை அம்பேத்கருக்கே தெரியும். எனவேதான், இந்த அரசமைப்புச் சட்டத்தைக் கொளுத்துவது என்றால் அப்படிச் செய்யும் முதல் ஆளாக நானிருப்பேன் என்று அவரே சொன்னார்'' என வாதிடுகின்றனர் தலித் அமைப்பினர்.

எந்த அரசியலமைப்புச் சட்டத்தை இப்படிக் கொளுத்தப்படவேண்டியது பற்றி தாமும், தாம் பூஜிப்பவரும் சொன்னார்களோ, அதையே மாற்றக் கூடாது, பாதுகாக்கவேண்டும் என்கிற நிலையை இப்போது தலித் அமைப்பினர் எடுத்துள்ளனர்.

அரசியலமைப்புச் சட்ட மறுஆய்வையும், திருத்தத்தையும் எதிர்க்கும் அனைத்துத் தரப்பினருமே, அது ஆர்.எஸ்.எஸ்.- பா.ஜ.க. கண்ணோட்டத்தில் செய்யப்படும் என்கிற காரணத்தை முன் வைக்கின்றனர்.

அவர்கள் முக்கியமாக இரண்டு இனங்களைச் சுட்டிக் காட்டுகிறார்கள். தற்போதைய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையான மதச்சார்பின்மையை அகற்றிவிட்டு இந்துத்துவ - வகுப்புவாத அடிப்படை புகுத்தப்படும்; இரண்டாவதாக தற்போதைய நாடாளுமன்ற ஆட்சி முறைக்குப் பதிலாக அதிபர் (ஜனாதிபதி) ஆட்சி முறை புகுத்தப்படும் என்று அஞ்சுகின்றனர். இவற்றோடு ஆர்.எஸ்.எஸ் - பா.ஜ.க.வின் வேறு இரண்டு கொள்கைகளாகிய காசுமீருக்குச் சிறப்புரிமை வழங்கும் 370-வது சட்டப்பிரிவு நீக்கப்படும், மதச்சிறுபான்மையினருக்குள்ள சிவில் சட்ட உரிமைகளைப் பறிக்கும் வகையில் பொது சிவில் உரிமைச் சட்டம் கூட புகுத்தப்படும் என்று எச்சரிக்கின்றனர். இந்த நோக்கங்களுக்கு ஊழியஞ்செய்யும் வகையில் அரசியலமைப்புச் சட்ட மறு ஆய்வு ஆணையத்திற்கான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பது அவர்களின் குற்றச்சாட்டுமாகும்.

அமைக்கப்பட்டுள்ள சட்ட மறுஆய்வுக் குழுவின் பெண் உறுப்பினர் பா.ஜ.க.வின் முன்னாள் எம்.பி. சுமித்திரா குல்கர்னி. இன்னொரு உறுப்பினரான நாடாளுமன்ற முன்னாள் பொதுச் செயலாளர் சுபாஷ் கஸ்யாப் ஆர்.எஸ்.எஸ். ஆதரவாளர். மற்றொரு உறுப்பினர் அந்நிய நாட்டவரான சோனியா பிரதமர் ஆவதை எதிர்த்து ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கொள்கையை ஏற்று காங்கிரசிலிருந்து பிரிந்து போய் தனிக்கட்சி வைத்த சங்மா. இவர்களை விட மறுஆய்வுக் குழுத் தலைவர் வெங்கடாசலையா, உச்சநீதி மன்றத்

www.padippakam.com

தலைமை நீதிபதியாக இருந்தபோது அயோத்தி பாபரி மசூதி இடிப்புக்குத் துணைபோகும் தீர்ப்புகளை வழங்கியவர். அவர் ஓய்வு பெற்றவுடனே, "எனது அபிப்ராயத்தில் மதச் சார்பின்மை என்பது பெரும்பான்மைக்கு எதிர்ப்பு அல்ல" என்று சொல்லி தான் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.வின் இந்துத்துவக் கோட்பாட்டிற்கு உடன்பாடானவர்தான் என்பதை வெளிப்படுத்தியவர். எனவே இந்த சட்ட மறுஆய்வுக்குழு ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. அரசுக்கு சார்பான முடிவுகளையும் பரிந்துரைகளையும் தான் தரும் என்று சட்டபூர்வ எதிர்த்தரப்பு கணிக்கிறது.

*சட்டபூர்வ எதிர்த்தரப்பின் இந்தக் கணிப்பிலும் வாதத்திலும் ஓரளவுதான் உண்மையிருக்கிறது. அதைவிட அதிகமான பொய் இருக்கிறது.*

அதாவது, நியமிக்கப்பட்டிருக்கும் சட்ட மறு ஆய்வுக் குழுவின் தலைவர் உட்பட ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.வின் கைக் கூலிகளாகவே பலரும் செயல்படுவர் என்பதில் சந்தேகமில்லை. அரசியலமைப்புச் சட்ட மறுஆய்வையும், திருத்தத்தையும் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பல் தனது கண்ணோட்டத்தில் செய்யவே முயலும் என்பதிலும் சந்தேகமில்லை.

ஆனால் சட்டபூர்வ எதிர்த்தரப்பின் வாதத்தில் உள்ள பொய்கள் என்னவென்றால்,

✱ தற்போதைய அரசியலமைப்புச் சட்டம் மதச் சார்பற்றது என்பது உண்மையல்ல. எடுத்துக்காட்டாக தற்போதுள்ள சட்டத்தின் முகப்பில் "இந்தியா அதாவது பாரதம்" என்றுள்ளதை "பாரதம் அதாவது இந்துஸ்தானம்" என்று மாற்றி விடுவார்கள் எனப் பயப்படு கின்றனர். ஏற்கனவே பாரத ஸ்டேட் வங்கி, இந்துஸ்தான் பெட்ரோலியம், இந்துஸ்தான் ஃபோட்டோ பிலிம், பாரத் ரயில்வே, இந்துஸ்தான் மெஷின் டூல்ஸ், இந்துஸ்தான் ஏரோநாட்டிகல்ஸ் என்று ஆயிரக்கணக்கான அரசு நிறுவனங்கள் இந்துமதத்தைக் குறிக்கும் பெயர்களிலேயே உள்ளன. தற்போதுள்ள சட்ட முகப்பிலும், அரசு வானொலி - வானொளி அறிவிப்புகளிலும் அரசு ஆவணங்களிலும் காணப்படும் "பாரதம்" என்பதே ஆரிய - பார்ப்பன சனாதன முனிவனான "பாரத்"தின் பெயரால்தான்! பார்ப்பனரல்லாதார் அர்ச்சகராக முடியாது என்றும் தாய்மொழியில் அர்ச்சனை கூடாது என்றும் தடுக்கப்படுவதும் இந்த சட்டத்தின்படிதான். இராமன் என்பது கற்பனையல்ல - இந்த நாட்டின் வரலாற்று நாயகன் என்றும், இந்தச் சட்டம் ஏற்கிறது. இந்துமுறைப்படி அரசு அலுவலகங்களில் பூசைகளும் வழிபாடுகளும் நடப்பதை நியாயப்படுத்துவதும் இந்தச் சட்டப்படி தான். இராணுவம், போலீசு, நீதிமன்றம் என அரசு அங்கங்கள் எல்லாம் இந்துமுறைப்படி செயல்படுவதையும் நிருபிக்கமுடியும்.

✱ தற்போதுள்ள அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் உள்ள நாடாளுமன்ற ஆட்சிமுறை ஜனநாயகபூர்வமானது, வரப்போகும் அதிபர் ஆட்சிமுறை ஜனநாயக விரோதமாக இருக்கும் என்பதும் உண்மையல்ல. மாறப்போவது ஆட்சி முறைதான். அரசு அமைப்பு அல்ல. அரசு அமைப்பு - அதாவது அதிகார வர்க்கம், போலீசு, இராணுவம், துணை இராணுவம், சிறைத்துறை, நீதிமன்றம் ஆகிய அரசு உறுப்புகள் எப்படியும் மக்கள் விரோத, ஜனநாயக விரோத அமைப்புகளாகவே நீடிக்கும். தற்போதைய அரசியலமைப்புச் சட்டத்தின்படிதான் நூறுக்கும் மேற்பட்ட முறை மாநில ஆட்சிகள் கலைக்கப்பட்டன. இந்த அரசியலமைப்புச் சட்டத்தின்படிதான்

> **அரசியல் அமைப்பு என்பது அரசு என்கிற நிரந்தர நிர்வாக அமைப்பும், அரசாங்கம் என்கிற ஆட்சி அமைப்பும் அடங்கியது. பல கட்சி நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சி முறையானாலும், அல்லது அதிபர் ஆட்சி முறையானாலும் அரசும், அதன் ஆளும் வர்க்கத் தன்மையும் மாறப் போவதில்லை.**

மிசா, மினிமிசா, டி.ஐ.ஆர். தடா, பொடா, எஸ்மா, என்.எஸ்.ஏ, 120-அரசு துரோகச் சட்டம் போன்ற இருண்ட சட்டங்கள் இயற்றப்பட்டு மனித உரிமைகள் பறிக்கப்படுகின்றன. கடைசியாக இந்த அரசியலமைப்புச் சட்டத்தையே இடைநீக்கம் செய்து மனிதர்களின் உயிர்வாழும் உரிமையும் கூட பறிக்கப்பட முடியும் என்று நிருபணமாகி விட்டது.

✱ தற்போதைய அரசியலமைப்பு சட்டத்தின் கீழ் உள்ள ஆட்சி முறை மற்றும் ஜனநாயக உரிமைகளை விட மோசமானவை ஏதாவது இருக்குமானால் அது அப்பட்டமான பாசிச ஆட்சி முறையாக மட்டுமே இருக்க முடியும். படிப்படியாக மாநில உரிமைகள் பறிக்கப்பட்டு, கொஞ்ச நஞ்சமிருந்த கூட்டாட்சி (Federal) உரிமைகள் நசுக்கப்பட்டு, ஒற்றை ஆட்சி அமைப்பு (Unitary) முற்றாக நிறுவப்பட்டு விட்டது. நாட்டின் பெரும்பான்மையான பகுதிகள் இராணுவம் அல்லது துணை இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுவிட்டன. அண்டை நாடுகளுக்கு எதிராக யுத்த வெறியைத் தூண்டி இராணுவத்தைப் பெருக்குவது, ஆயுதங்களைக் குவிப்பது, போர் தொடுப்பது; தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை மறுத்து அவற்றின் போராட்டங்களுக்கு எதிராக அரசு பயங்கரவாதத்தை ஏவுவது; தீவிரவாத எதிர்ப்பு என்கிற பெயரில் மதச்சிறுபான்மையினரையும் கம்யூனிசப் புரட்சியாளர்களையும் ஒடுக்குவது ஆகியவற்றில் போலி கம்யூனிஸ்டுகள் உட்பட சட்டபூர்வ எதிர்த் தரப்பு ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. அணியிடமிருந்து அணுகுமுறையில் மட்டும்தான் வேறுபடுகிறது. இந்த நிலையில் ஜனநாயகத்தையும் மதச்சார்பின்மையும் பாதுகாக்கவே அரசியலமைப்புச் சட்ட மறுஆய்வையும் திருத்தத்தையும் எதிர்ப்பதாகக் கூறுவதும் உண்மையல்ல.

போலி கம்யூனிஸ்டுகளைப் பொருத்தவரை இன்னொரு பித்தலாட்டமும் செய்கிறார்கள். தற்போதைய நாடாளுமன்ற ஜனநாயக முறையை நீக்கிவிட்டு அதிபர் ஆட்சி முறையைக் கொண்டு வர ஆர்.எஸ்.எஸ், - பா.ஜ.க. கும்பல் முயலுகிறது என்பதை வலியுறுத்திப் பிரச்சாரம் செய்கின்றனர். அதன் மூலம் தற்போதைய ஆட்சி முறையைப் பாதுகாக்கும் புனிதப் பணியை மேற்கொண்டுள்ளனர்.

அரசியல் அமைப்பு என்பது அரசு என்கிற நிரந்தர நிர்வாக அமைப்பும், அரசாங்கம் என்கிற ஆட்சி அமைப்பும் அடங்கியது. பலகட்சி நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சி முறையானாலும் அதற்கு மேலாக அதிபர் ஆட்சி முறையானாலும் அரசும், அதன் ஆளும் வர்க்கத் தன்மையும் மாறப் போவதில்லை. நடைபெற்று வரும் அரசியலமைப்புச் சட்ட மறுஆய்வு மற்றும் திருத்த விவகாரத்திலும் ஆட்சிமுறை மாற்றம் வந்துவிடும் என்று எச்சரித்து அரசியல் பிரச்சாரம் செய்யும் போலிக் கம்யூனிஸ்டுகள் "எந்தவொரு அரசியலமைப்புச்சட்டமும் வர்க்கத்தன்மை உடையது, ஆட்சிமுறை மாற்றம் என்பது அரசு மற்றும் அதன் வர்க்கத் தன்மையை மாற்றிவிடாது, ஆட்சிமுறை எதுவானாலும் அரசு என்பது வர்க்க சர்வாதிகாரப் பண்புடையதுதான்" ஆகிய அரசியல் பற்றி கம்யூனிச அடிப்படை கண்ணோட்டத்தை மூடி மறைக்கின்றனர். நாடாளுமன்ற செக்கு மாடுகளாக மாறிவிட்ட போலிக் கம்யூனிஸ்டுகள் அதைக் காப்பதே தாம் பிறவியெடுத்ததன் நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்றனர்.

சட்டபூர்வ எதிர்த் தரப்பின் வாதங்களை



படிப்பகம்

முறியடிக்கும் எச்சரிக்கையுடனே இந்தப் பிரச்சினையை ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. அரசு அணுகியுள்ளது.

தான் மட்டுமே ஆட்சியைத் தனித்துக் கைப்பற்ற முடியாது என்ற நிலையில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக பிரச்சாரம் செய்து வந்த அயோத்தியில் ராமன் கோவில் கட்டுவது, காசுமீரின் 370-வது சட்டப்பிரிவு நீக்கம், பொது சிவில் சட்டம் ஆகிய கொள்கைகளை ஒதுக்கி வைத்து விட்டு கூட்டணி அமைத்து ஆட்சியை ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பல் கைப்பற்றியது. அதேபோல அரசியலமைப்புச் சட்டம் மற்றும் திருத்தம் விவகாரத்திலும் தனது கொள்கைகளை ஒதுக்கி வைத்துவிட்டு ஆளும் கூட்டணிக்கு ஏற்புடைய வகையில்தான் அதைச் செய்வதாக அறிவித்துள்ளது. ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கொள்கை திட்டம் வேறு, கூட்டணி ஆட்சிக்கான கொள்கை - திட்டம் வேறு என்கிற அணுகுமுறையையே இதிலும் கடைப்பிடிப்பதாகக் காட்டிக் கொள்கிறது.


மறு ஆய்வுக் குழு, அதற்கான அலுவல் குறிப்பு ஆகியவற்றுக்கு ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணி மற்றும் அமைச்சரவையின் ஒரு மனதான ஒப்புதல் பெற்றுள்ளது. அலுவல் குறிப்பினை வரையறுப்பதிலும் மறு ஆய்வுக் குழு அமைப்பதிலும் கூட ஒற்றைச் சார்பில்லை, நாட்டு நலனே முன்னிறுத்தப்படுகிறது என்ற தோற்றத்தை உருவாக்குவதில் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. வெற்றி பெற்றுள்ளது.

வேறு வகையில் சொல்வதானால், காலத்தின் தேவைக்கும் அனுபவத்துக்கும் ஏற்ற வகையில், நாடாளுமன்ற ஆட்சி முறையில் நீடித்து வரும் நிலையற்ற தன்மை - நெருக்கடியைக் கலையவும் இப்படி ஒரு மறு ஆய்வும் திருத்தமும் அவசியமாக உள்ளது என்று வாதிட்டு தான் தான் ஒரு முற்போக்கு சக்தி; கம்யூனிஸ்டுகள் உட்பட சட்டபூர்வ எதிர்தரப்பு முழுவதும் பழைமைவாதிகள் - நிலை இருப்புவாதிகள், பிற்போக்காளர்கள் என்று காட்டிக் கொள்வதில் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. வெற்றி பெற்றுள்ளது.

சட்டபூர்வ எதிர்த்தரப்பின் ஒத்துழைப்பு இல்லையானால் அரசியலமைப்புச் சட்ட மறுஆய்வும், திருத்தமும் நிராகரிக்கப்பட்டு விடும் என்பது உறுதி. நாடாளுமன்ற கீழவையில் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கூட்டணி அரசுக்கு மூன்றில் இரண்டு பங்கு பலமில்லை. மேலவையிலோ பெரும்பான்மை பலம் கூட கிடையாது.

இந்த நிலையில் அரசியலமைப்புச் சட்ட மறு ஆய்வு மற்றும் திருத்த முயற்சியில் இவ்வளவு வேகமாக, அக்கறையோடு, உறுதியாக, ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பல் ஈடுபடுவதன் நோக்கம் என்ன? அதுவும் நாடாளுமன்ற ஜனநாயகம் என்ற சட்டகத்துக்குட்பட்டு, அடிப்படைக் கட்டுமானத்துக்கு பாதிப்பு எதுவும் ஏற்படாமல் காரியமாற்றப் போவதாக உறுதி கொடுக்கிறதே அது உண்மையாக இருக்குமா? இந்துத்துவமயமாக்குவது நாடாளுமன்ற ஜனநாயக உரிமைகளைப் பறிப்பது, அதிபர் ஆட்சி முறையைக் கொண்டு வருவது போன்ற அதன் திட்டத்தை இரகசியமாக வைத்துக் கொண்டு உள்நோக்கத்துடன் செயல்படுகிறதா?

இல்லை, சட்டபூர்வ எதிர்த்தரப்பின் ஆதரவின்றி எந்த சட்டத்திருத்தமும் சாத்தியமில்லை, மேற்கண்ட நோக்கங்களை மறைமுகமாகப் புகுத்த முயன்றால் கூட




காங்கிரசும் கம்யூனிஸ்டுக்களும் எதிர்ப்பார்கள் என்று தெரிந்தும் இந்தக் காரியத்தைச் செய்வது, அடுத்த தேர்தல் பிரச்சாரத்துக்கான தயாரிப்பா?

இந்த இரண்டையும் விட மிக முக்கியமான வேறு ஒரு காரணத்துக்காக, நோக்கத்துக்காகத்தான் அரசியலமைப்புச் சட்ட மறுஆய்வு மற்றும் திருத்தம் செய்வதில் இந்த அரசு அக்கறையும் அவசரமும் காட்டுகிறது. இதற்கு ஆளும் வர்க்கத்தின் ஒரு மனதான ஆதரவு கிட்டும்; அதுமட்டுமல்ல, இப்போது சட்டபூர்வ எதிர்த்தரப்பினர் காட்டும் எதிர்ப்பும் பின்னாளில் பிசுபிசுத்துப் போக்கும்; பின்னாளில் அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் என்று வரும்போது முற்றாக ஆதரிக்காவிட்டாலும் பெரும்பாலான பிரிவுகளுக்குப் பெரும்பான்மையான எதிர்த்தரப்பும் கூட ஆதரவு தெரிவிக்கும் என்று ஆளும் கூட்டணி எதிர்பார்க்கிறது.

*ஏற்கனவே இருக்கும் அரசியலமைப்பு சட்டத்தை அப்படியே வைத்துக் கொண்டு, தற்போது அரசும் ஆளும் வர்க்கமும் மேற்கொள்ளும் உலகமயம், தனியார்மயம், தாராளமயமாக்கும் புதிய பொருளாதாரக் கொள்கையை மேலும் தீவிரமாக அமலாக்குவது எளிதாக இல்லை. அமலாக்கப்படும் பொருளாதார சீர்திருத்தத்துக்கு, பொருளாதாரக் கட்டுமான மறுசீரமைப்புக்குப் பொருத்தமாக அரசியலமைப்புச் சட்டத்தை மறுவார்ப்புச் செய்வது அவர்களுக்கு அவசியமாக இருக்கிறது. இதற்கான தேவைகளின் அடிப்படையில் கிரிமினல், சிவில் மற்றும் கம்பெனி - தொழிற்சட்டங்களையும் கூட மாற்றி அமைப்பது அவசியமாக உள்ளது.*

புதிய பொருளதாரக் கொள்கை புகுத்தப்பட்ட பிறகு என்னென்ன சட்டச் சிக்கல்கள் எழுந்தன, என்னென்ன சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு தாமதப் படுத்தப்பட்டன, தடைப்பட்டன, எப்படியெப்படி நிறைவேற்றப் பட்டன; இன்னும் என்னென்ன சட்டத் திருத்தங்கள் தேவைப் படுகின்றன என்பதையெல்லாம் எண்ணிப் பார்த்தால் இந்த உண்மை விளங்கும். இப்படிச் சில்லரை சில்லரையாக சட்டத் திருத்தங்கள் செய்வதற்குப் பதிலாக ஒட்டு மொத்த மாற்றம் எளிதானது. தனித்தனி சட்டத் திருத்தங்களுக்கு அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் பல முட்டுக் கட்டைகள் போடுவதாக உள்ளதால் அதையே மாற்றி விடுவது மேலும் எளிதானது.

இப்படிப்பட்ட அரசியலமைப்புச்சட்ட மறுஆய்வும் திருத்தமும் மேற்கொள்ளப்பட்ட இரண்டு எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம்.

1918-ஆம் ஆண்டு லெனின் தலைமையில் அமைந்த ருஷ்யக் கூட்டமைப்புக்கான சோசலிச அரசியலமைப்புச் சட்டம் நிறைவேற்றப் பட்டது. ருஷ்யக் கூட்டமைப்பில் வேறு பிற தேசிய இனங்கள் இணைந்த பிறகு 1924-இல் சோவியத் ஒன்றியத்துக்கான அரசியலமைப்புச் சட்டம் நிறைவேற்றப் பட்டது. அதன் கீழ் தொழில் முற்றாக அரசுடைமையாவதும் விவசாயம் கூட்டுறவுமயமாவதும் நடந்தேறிய பிறகு 1936-இல் தனிவுடைமையை அடியோடு ஒழித்து பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை

நிறுவும் புதிய அரசியலமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

ஸ்டாலின் மறைவுக்குப் பிறகு நடந்த அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பதைத் தொடர்ந்து குருச்சேவ் - பிரஷ்னேவ் கும்பல் ஆட்சியைப் பிடித்தது. அது, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கைவிட்டு "அனைத்து மக்கள் அரசு என்றும் சோசலிசம் முழுமையான இறுதி வெற்றியடைந்து விட்டதாகவும்'' அறிவித்தது. உருவாகி விட்ட முதிர்ந்த சோசலிசத்துக்கு ஏற்ப புதிய அரசியலமைப்புச்சட்டத்தைக் கொண்டுவர, 1964-இல் பிரஷ்னேவ் தலைமையில் 1964-இல் சட்ட மறுஆய்வுக் குழு அமைத்தது. உண்மையில் நடந்தது என்னவென்றால் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும் சோசலிசமும் கவிழ்க்கப் பட்டு அதிகாரவர்க்க முதலாளித்துவம் ஆதிக்கத்துக்கு வந்தது; அதையொட்டி அரசியலமைப்புச் சட்ட மறுஆய்வுக்குப் பிறகு, 1977-ல் புதியதாக ஒன்று நிறைவேற்றப்பட்டது. சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்டபிறகு பிரிந்துபோன தேசிய இனக் குடியரசுகள் ஒவ்வொன்றும், குறிப்பாக ருசியாவுக்கு 1991-இல் புதிய அரசியலமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதிகாரவர்க்க அரசுடமை நீக்கப்பட்டு ஏகபோக ஏகாதிபத்திய முதலாளிகளின் உடமை நிறுவப்பட்டதற்கு ஏற்ப அரசமைப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

இதேபோலத்தான் சீனத்திலும் நடந்தது. அங்கே டெங்சியோவோ பிங் கும்பல் அதிகாரத்தைக் கைப்பற்றி முதலாளித்துவம் நிலைநாட்டப்பட்ட பிறகு, உடனடியாகவே அரசியலமைப்புச் சட்ட மறுஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சீன அரசியல மைப்புச் சட்டம், அதற்குட்பட்டு சிவில் மற்றும் குற்றவியல் சட்டங்கள், சிவில் மற்றும் குற்றவியல் தண்டனைச் சட்டங்கள், வடிவுரிமை மற்றும் வர்த்தக முத்திரைச் சட்டங்கள், அந்நிய - உள்நாட்டு முதலீட்டுச் சட்டங்கள், கூட்டு நிறுவனச் சட்டம், தொழில் - திவால் சட்டம், வரி மற்றும் தீர்வை விதிப்புச் சட்டங்கள், சீனர் - வெளி நாட்டினர் நடவடிக்கைச் சட்டங்கள் ஆகிய பலவும் அந்நியர்கள் சீனத்தில் முதலீடு செய்து, தொழில் புரிந்து, வசிப்பதற்குத் தகுந்த முறையில் திருத்தப்பட்டன. இதற்கேற்ப நீதித்துறை அமைப்புகளும் திருத்தி அமைக்கப்பட்டன.

இதேபோன்று இந்திய அரசியலமைப்புச்சட்டத்திலும் மாற்றங்கள் கொண்டு வருவது ஆளுவோருக்கு அவசியமாக உள்ளது. வங்கி மற்றும் காப்பீடு, செய்தித் தொடர்பு ஊடகம், மருத்துவம், வழக்குரை போன்ற பல சேவைத் துறையில் தடையின்றி அந்நியக் கம்பெனிகள் நுழைய முடியவில்லை; கம்பெனி, தொழில், வரி-தீர்வை மற்றும் தொழிலுறவுச் சட்டங்களும் திருத்தப்படவேண்டும். முதலீடுகள் செய்வதற்குப் பலதுறைகளில் வரம்புகள் உள்ளன. "மக்கள் நல அரசு'' என்கிற அடிப்படையில் தற்போதைய அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள வழிகாட்டு நெறிமுறைகள் மானிய வெட்டு, விலை - கட்டண உயர்வுக்குத் தடையாக உள்ளன.

இதை நிரூபிக்கும் எடுத்துக்காட்டாக ஒரு வழக்கைப் பார்ப்போம். தொலைத் தொடர்புத் துறையில் பன்னாட்டுத் தொழில் கழகங்களுக்கும் இந்தியத் தரகு முதலாளிகளுக்கும் கொள்ளை இலாபம் தரும் வகையில் அவர்களுடன் அரசு ஒரு ஒப்பந்தம் போட்டுக் கொண்டது. அதற்குத் துணையாக TRAI எனப்படும் இந்தியத் தொலைத் தொடர்பு நெறிப்படுத்தும் ஆணையம் ஒன்றை சமீபத்தில் அமைத்தது. இது தொலைத் தொடர்பு அமைச்சகத்துக்கு மேலே நின்று செயல்பட்டது. ஆனால் அந்த ஆணையத்துக்கு அரசியலமைப்புச் சட்டத் தகுதியோ, உரிமையோ கிடையாது என்றும் அதன் நடவடிக்கைகள் செல்லாது என்றும் சட்டப்படி டெல்லி உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டது. அந்த ஆணையம் பல்பிடுங்கப்பட்ட பாம்பாகியது.

**புதிய பொருளாதாரக் கொள்கையின் தேவைகளுக்கு ஏற்பத்தான், அரசியல் அமைப்புச் சட்டம் மறு ஆய்வு செய்யப்பட்டு, திருத்தப்பட உள்ளது. இந்த உண்மையை காங்கிரசும், போலி கம்யூனிஸ்டுகளும் மூடி மறைக்கின்றனர்.**

தொலைத்தொடர்பு நெறிப்படுத்தும் ஆணையத்தைப் போலவே மத்திய, மாநில அளவில் மின்துறை நெறி ஆணையங்களை உருவாக்கி வரும் முயற்சியில் அந்தந்த அரசுகள் ஈடுபட்டு வருகின்றன. ஆனால் வழக்கு என்று வந்தால் இவையும் சட்டவிரோத அமைப்புகள் என்ற முடிவுதான் கிட்டும். இப்படிப் பல விவகாரங்கள் இருக்கின்றன. அந்நியக் கம்பெனிகளுடனான தொழிலுறவுத் தகராறுகள் எல்லாவற்றிலும் அவை இந்தியச் சட்டங்களை மதிக்க மறுக்கின்றன; தமது சொந்த விதிகளைக் கூறி அராஜகமாக நடந்து கொள்கின்றன.

இவற்றில் இருந்து அறிவது என்னவென்றால் புதிய பொருளாதாரக் கட்டுமான மறுசீரமைப்பை நோக்கமாக வைத்துத்தான் அரசியலமைப்புச் சட்ட மறுஆய்வு மற்றும் திருத்தத்துக்கு ஆளும் கூட்டணி முயலுகிறது. இதோடு இதன் துணை ஆதாயமாக கூட்டணி உறுப்புகளான மாநிலக் கட்சிகளுக்கு சில சலுகைகளையும், தனது இந்துத்துவா நோக்கங்களையும் கூடப் புகுத்த முயலும். அதேபோல் இப்போதைய அரசியல் நிலையற்ற போக்குகள் மீது நடுத்தர வர்க்கம் கொண்டுள்ள அதிருப்தியைப் பயன்படுத்திக் கொண்டு நாடாளுமன்றத்துக்கு மேலாக நிர்வாக அமைப்பின் ஆதிக்கத்தை நிறுவும் வகையில் சட்டத்திருத்தம் செய்யவும் முயலும். கொள்கை முடிவுகள் தவிர முக்கியமான நிர்வாக முடிவுகளை அமைச்சரவையும், பிரதமர் அலுவலகமும் தாமே மேற்கொள்ளக் கூடிய வகையில் சட்டத் திருத்தத்துக்கு ஏற்பாடு செய்யும். ஒருமுறை தேர்தல் நடத்தி முடிந்தால் குறிப்பிட்ட காலத்திற்கு ஆட்சிக்கவிழ்ப்பு, ஆட்சி மாற்றம், நாடாளுமன்றக் கலைப்பு ஆகியவற்றைத் தடுப்பது என்கிற பெயரில் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பல் மேற்கண்ட நிர்வாக அதிகாரத்தைத்தான் நிறுவ முயலுகிறது.

ஆனால் இவற்றையெல்லாம் விட அரசியலமைப்புச் சட்ட மறுஆய்வு மற்றும் திருத்தம் கொண்டு வருவதன் முக்கியமான நோக்கம் புதிய பொருளாதாரக் கட்டுமான மறுசீரமைப்பைக் கருத்தில் கொண்டுதான். ஆனால் இந்த உண்மையை சட்டபூர்வ எதிர்த்தரப்பு மூடிமறைக்கிறது. ஏனென்றால் அவர்களும் உட்பட ஓட்டுக்கட்சிகளும் அவற்றின் சார்பு இயக்கங்களும் பொருளாதாரச் சீர்திருத்தம் என்கிற அலையில் சிக்கிக் கொண்டிருக்கின்றன.

அரசியலமைப்புச் சட்டத்தை இந்துத்துவமயமாக்கும் முயற்சி சட்டபூர்வ எதிர்த்தரப்பின் ஆதரவின்றி நிறைவேறாது என்ற நிலையில், ஆட்சிமுறை மாற்றம் என்பது கூட இரண்டாம் நிலை முக்கியத்துவமுடையது என்ற நிலையில், நாடும் நாட்டு மக்களும் மிக அதிக அக்கறை காட்ட வேண்டிய பிரச்சினை இதுதான் - புதிய பொருளாதாரக் கொள்கைக்கான கட்டுமான மறுசீரமைப்பு நோக்கத்தோடு தான் அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்படுகிறது. இதன் மூலம் நாட்டுக்குக் கிடைக்கப் போவது; மீண்டும் ஒரு காலனிய அரசுக்குரிய அரசமைப்புச் சட்டம்தான். ஆகவே, நாட்டு மக்கள் மேலும் மேலும் உறுதியாகவும் தீவிரமாகவும் இந்த முயற்சியை முறியடிக்க வேண்டும்.

✱ ஆர்.கே.

**தலையங்கம் தொடர்ச்சி**

மாணவர்களோ சாகும் வரை உண்ணாவிரதம் என்று போராட்டத்தைத் தீவிரப் படுத்தினர். சட்டப் பேரவையில் பிரச்சினை யெழுப்பப்பட்டு, பேச்சு வார்த்தை நடந்து கேரள மாநில அளவுக்கு உதவித் தொகை அதிகரிப்பை ஏற்றுக் கொண்ட பிறகு போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது.

ஆரம்பித்தபோது இருந்த வேகம் இல்லை என்றாலும், வழக்கறிஞர்களின் போராட்டம் பிசுபிசுத்துப் போகவில்லை; தொடரப் போவதாக அறிவித்துள்ளனர்.



**வழக்கறிஞர்களைத் தாக்கிய போலீசாரை இடைநீக்கம் செய்யக் கோரி தில்லி வழக்கறிஞர்கள் நடத்திய போராட்டம்**

தேங்கிக் கிடக்கும் 33 இலட்சம் வழக்குகளை விரைவில் தீர்த்து வைக்கவும், நீதித்துறை செயல்பாட்டின் திறனை அதிகரிக்கவுமான ஏற்பாடு என்று சொல்லிக் கொண்டு உரிமையியல் (சிவில்) சட்டத்தை மைய அரசு திருத்தியுள்ளது. முதலாவதாக, சாதாரண ஏழை - எளிய மக்களுக்கு வழக்காடும் வாய்ப்புகளை மறுக்கும் சில திருத்தங்கள் உள்ளன. அதாவது, 25,000 ரூபாய் மதிப்புடைய வழக்குகள் மட்டுமே மேல் முறையீட்டுக்கு அனுமதிக்கப்படும்; தடையுத்தரவு பெறுவதற்குக் கூடுதலாக பிணைத் தொகை செலுத்த வேண்டும்; ''ரிட் மனு'' மீது உயர்நீதி மன்ற ஒரு நபர் தீர்ப்பை எதிர்த்து, அங்கேயே அமர்வு நீதிமன்றத்துக்கு மேல் முறையீடு செய்ய முடியாது; உச்சநீதி மன்றத்துக்குத்தான் போக முடியும். எட்டாத தூரத்தில் உள்ள உச்சநீதி மன்றத்துக்கு எளிய மக்கள் எப்படிப் போக முடியும்?

இரண்டாவதாக, நீதித் துறையையே ஊனமாக்கிவிடும் திருத்தம்: வழக்கைத் தாக்கல் செய்யும்போது இணைக்கப்படும் ஆவணங்கள் தவிர, பின்னர் புது ஆவணங்கள், ஆதாரங்கள், சாட்சியங்களைச் சேர்க்க முடியாது. கீழ் நிலை நீதிமன்றங்களில் சாட்சியங்களையும், குற்றவாளிகளையும் ''நீதிபதிகள்'' இனி நேரில் விசாரிக்க மாட்டார்கள். வழக்கு மன்றங்களுக்கான கமிசனர்கள் பதிவு செய்த வாக்கு மூலங்களைப் படித்தே தீர்ப்புச் சொல்லுவார்கள்.

மூன்றாவதாக, வழக்கறிஞர் சட்டத்தைத் திருத்தி, அவர்கள் தொழில் புரிவதற்குப் பல தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை வழக்கறிஞர்கள் அனைவரும் அரசுத் தேர்வு எழுதியும், குறிப்பிட்ட அளவு இலவசமாக வழக்கு நடத்தியும் தொழில் நடத்துவதற்கான உரிமத்தைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். வெளிநாடுகளைச் சேர்ந்த வழக்கறிஞர்களும், வழக்குரைக் கம்பெனிகளும் தொழில் நடத்த அனுமதிக்கப்படுவார்கள்.

இந்தத் திருத்தங்களை எதிர்த்துப் போராடி, பிரதமரின் ''கொடும்பாவி''யைக் கொளுத்திய தில்லி வழக்கறிஞர்கள் மீது போலீசை ஏவி மிருகத்தனமாகத் தாக்கியுள்ளது அரசு. மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் போன்ற சேவைத் தொழில் செய்பவர்கள் வேலை நிறுத்தம் செய்வது பொது மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்று ஆளுவோர், நீதிபதிகள், பத்திரிகைகள் முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர். கோரிக்கைகள் வைத்ததும் எதிர்த் தரப்பினர் பேச்சு வார்த்தை நடத்தவும் பரிவுடன் விசாரிக்கவும் தயாராக இருந்தால் போராட்டம் ஏன் அவசியமாகிறது?

இவ்வாறு உரிமையியல் சட்டத்தைத் திருத்துவதோ, தனியார் துறை மருத்துவக் கல்லூரிகளை அனுமதிப்பதோ, காப்பீடு துறையைத் தனியாருக்கும் அந்நியருக்கும் தாரை வார்ப்பதோ எதுவும் தனித் தனியான துறை சார்ந்த மக்கள் விரோத, 'தேச' விரோத நடவடிக்கைகள் அல்ல. உலகமயம், தனியார்மயம், தாராளமயம் என்கிற புதிய கட்டுமான மறுசீரமைப்புக் கொள்கையின் தனித்தனி உறுப்பு நடவடிக்கைகள்தாம் இவை. ஆனால், தம் துறை சார்ந்த பாதிப்பு வரும்போது மட்டும் போராடுவதும், இதுபோன்ற பிற அரசு நடவடிக்கைகளைக் கண்டு கொள்ளாமல் இருப்பதும் பல்வேறு பிரிவினரின் நடைமுறையாக உள்ளது. தம் துறைக்கான பாதிப்பு வருவதைக் கூட முன் கூட்டியே உணராமலும், எச்சரித்தும் வாளாவிருந்து தும்பை விட்டு வாலைப் பிடிப்பதும் நடக்கிறது.

நான்கு ஆண்டுகளுக்கு மேலாக உரிமையியல் திருத்த நகல் விவாதத்திற்கு சுற்றுக்கு விடப்பட்டு நாடாளுமன்றத்தில் தகுந்த ''கோரம்'' இல்லாமல் அவசர கோலத்தில் நிறைவேற்றப்பட்டது. இதையோ, நீதிபதிகள் நியமிக்கப்படாமல் வழக்குகள் தேங்குவதையோ, மனித உரிமை மீறல்களையோ ஒரு சிறு பிரிவு வழக்கறிஞர்கள் தவிர எவருமே கண்டு கொள்வதில்லை. அதேபோல தனியார் துறையில் நட்சத்திர மருத்துவக் கழகங்கள்/ கல்லூரிகள் திறக்கப்படுவதையும், அரசு மருத்துவத் துறைக்கு மானிய வெட்டு, கட்டண வசூல் போன்றவை அறிமுகப் படுத்தப்பட்டபோது மாணவர்களிடமிருந்து எதிர்ப்பு இல்லை. மத்திய, மாநில அரசுகள் மற்றும் அனைத்துக் கட்சிகளும் புதிய பொருளாதாரக் கொள்கையை நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஏற்று அமலாக்குவதால், அதற்கு எதிரான ஒருங்கிணைந்த பார்வையும் போராட்டமும் இல்லாமல், துறை சார்ந்த கோரிக்கைகள் வைத்துத் தீர்வு காண முயல்வது வெற்றி பெறாது.



www.padippakam.com

# வடமாநிலத் தேர்தல்கள்: சாதி-கிரிமினல் கூட்டணிக்கே வெற்றி

**பீ**கார், ஒரிசா, அரியானா, மணிப்பூர் ஆகிய நான்கு மாநிலங்களில் அண்மையில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல்களில் காங்கிரசு படுதோல்வி அடைந்துள்ளது. பா.ஜ.க. கூட்டணி இரண்டு மாநிலங்களில் வெற்றி பெற்றுள்ளது. பீகாரில் அறுதிப் பெரும்பான்மை இல்லாத நிலையில், மாநில ஆளுநரின் தயவில் பா.ஜ.க. கூட்டணி ஆட்சியமைக்கக் கிளம்பி, அம்முயற்சி தோல்வியில் முடிந்துள்ளது. மணிப்பூரில் பா.ஜ.க. கூட்டணி வெற்றி பெறமுடியவில்லை. இருப்பினும் ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது, பா.ஜ.க. கூட்டணிக்கே வெற்றி; காங்கிரசுக்கு தோல்வி என்பது போலத் தோன்றும். ஆனால் காங்கிரசு, பா.ஜ.க. ஆகிய இரு 'தேசிய'க் கட்சிகளுமே பலமிழந்து வருகின்றன என்பதையே இச் சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் நிரூபித்துக் காட்டுகின்றன. தேசியக் கட்சிகள் செல்வாக்கு இழந்து வரும் அதேவேளையில், மாநிலக் கட்சிகளுக்கான ஆதரவும், பலமும் அதிகரித்துள்ளது.

ஒரிசாவில் மாநிலக் கட்சியான பிஜு ஜனதாதளமும் பா.ஜ.க.வும் கூட்டணி கட்டிக் கொண்டு தேர்தலில் போட்டியிட்டன. மொத்தமுள்ள 147 தொகுதிகளில், 86 இடங்களில் போட்டியிட்ட பிஜு ஜனதாதளம் 68 இடங்களைக் கைப்பற்றி தனிப் பெருங் கட்சியாகியுள்ளது. பா.ஜ.க. 38 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. சட்டமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையை நிரூபிக்க பிஜு ஜனதா தளத்துக்கு 6 பேரின் ஆதரவுதான் தேவை. பா.ஜ.க. ஆதரவு இல்லாமல், சுயேட்சைகளின் ஆதரவைக் கொண்டு தனியே ஆட்சி அமைத்துக் கொள்ளவும் அக்கட்சியால் முடியும். இருப்பினும், பா.ஜ.க.வும் தனது அமைச்சரவையில் பங்கேற்கலாம் என்று முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள நவீன் பட்நாயக் அறிவித்துள்ளார். இதன் மூலம் ஒரிசாவில் முதன் முறையாக பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் பங்கேற்கப் போகிறது.

எதிர்த் தரப்பான காங்கிரசோ, கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலையில் உள்ளது. 145 தொகுதிகளில் போட்டியிட்டு 26 தொகுதிகளில் மட்டுமே அது வெற்றி பெற்றுள்ளது. மாநில காங்கிரசுத் தலைவரும் முன்னாள் முதல்வருமான ஜே.பி. பட்நாயக், முந்தைய காங்கிரசு ஆட்சியின் முதல்வர் பிஸ்வால், மற்றும் 10 முன்னாள் அமைச்சர்களும் படு தோல்வி அடைந்துள்ளனர். கேடுகெட்ட காங்கிரசு ஆட்சி மீது மக்களிடம் நிலவிய அதிருப்தி, குறிப்பாக பெரும் புயல் தாக்குதலுக்குப் பின்னர் உரிய நிவாரணப் பணிகளைச் செய்யாததால் ஏற்பட்ட வெறுப்பு, பகுஜன் சமாஜ் கட்சி தனித்துப் போட்டியிட்டதால் தாழ்த்தப்பட்டோர் வாக்குகள் சிதறிப் போனது - ஆகியவற்றைச் சாதகமாக்கிக் கொண்டு கவர்ச்சி வாக்குறுதிகளை அளித்து பா.ஜ.க. கூட்டணி இம்மாநிலத்தில் வெற்றியை ஈட்டியுள்ளது.

அரியானாவில், மொத்தமுள்ள 90 தொகுதிகளில் சவுதலா தலைமையிலான இந்திய தேசிய லோக் தளக் கட்சி 47 தொகுதிகளில் வெற்றி பெற்று தனிப் பெருங்கட்சியாக ஆட்சியமைக்க உள்ளது. அதனுடன் கூட்டணி கட்டிக் கொண்டுள்ள பா.ஜ.க. 6 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. முந்தைய தேர்தலில் அது பெற்றிருந்த 11 தொகுதிகளை ஒப்பிட்டால், இப்போது அதன் செல்வாக்கு ஏறத்தாழ பாதியளவு குறைந்து விட்டது. பா.ஜ.க.வின் வெற்றி அற்பமானதாக இருந்தாலும், கூட்டணிக் கட்சியாக் இருப்பதால் அதையும் அமைச்சரவையில் முதல்வர் சவுதாலா சேர்த்துக் கொண்டுள்ளார்.

காங்கிரசுக் கட்சியோ 21 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. கட்சி மாறிகளின் திடீர்க் கட்சியான அரியானா விகாஸ் கட்சி இருந்த சுவடே தெரியாமல் இத்தேர்தலில் துடைத்தெறியப்பட்டுவிட்டது. காங்கிரசு மற்றும் அதன் பினாமிகள் - கட்சி மாறிகளின் ஆட்சிகளால் மக்களிடம் ஏற்பட்ட அதிருப்தி, ஜாட் சாதி பலம், கிரிமினல் பலம் ஆகியவற்றைச் சாதகமாக்கிக் கொண்டு, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப் போவதாக கவர்ச்சி வாக்குறுதி அளித்து சவுதாலாவின் தேசிய லோக் தளக் கட்சி வெற்றியை ஈட்டியுள்ளது.

அடிக்கடி ஆட்சிக் கவிழ்ப்பு நடக்கும் சிறிய மாநிலமான மணிப்பூரின் 60 தொகுதிகளில் மணிப்பூர் மாநிலக் காங்கிரசும், பெடரல் கட்சியும் கூட்டணி கட்டிக் கொண்டு 29 தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சியமைக்க முயற்சித்து வருகின்றன. சோனியாவின் தேசிய காங்கிரசுக் கட்சி படுதோல்வி அடைந்து 10 இடங்களை மட்டுமே கைப்பற்றியுள்ளது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மணிப்பூர் மாநிலக் காங்கிரசும் பா.ஜ.க.வும் கூட்டணி கட்டிக் கொண்டு வெற்றி பெற்றன. ஆனால், சட்டமன்றத் தேர்தலின் போது கூட்டணியில் பதவிக்கான நாய்ச் சண்டை முற்றி, பா.ஜ.க. தனித்துப் போட்டியிட்டு 6 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது.

**கிரிமினல் அரசியலின் காட்சி: பீகாரில் துப்பாக்கி ஏந்திய குண்டர்களுடன் ஓட்டு வேட்டையாடும் சுயேச்சை வேட்பாளர்**





படிப்பகம்

www.padippakam.com

வன்முறை, படுகொலைகள், கள்ள ஓட்டு, அதிகார முறைகேடுகளுடன் நடந்த பீகார் தேர்தலில், எந்தக் கூட்டணியும் அறுதிப் பெரும்பான்மை பெற முடியவில்லை. ஊழல் கொள்ளையில் பாசிச ஜெயாவின் உடன் பிறவா சகோதரனாகத் திகழும் லல்லு பிரசாத் யாதவின் ராஷ்ட்ரீய ஜனதா தளக் கட்சி, மொத்தமுள்ள 324 தொகுதிகளில் 123 இடங்களைக் கைப்பற்றியுள்ளது. முந்தைய தேர்தலை ஒப்பிடும்போது லல்லுவின் கட்சி தோல்வி கண்டிருந்தாலும், அதிக இடங்களைக் கைப்பற்றிய தனிப்பெருங் கட்சியாக உள்ளது.

லல்லுவின் ஊழல் - அடக்குமுறை ஆட்சிக்கு உண்மையான தேசிய மாற்று பா.ஜ.க. கூட்டணிதான் என்றும், இத்தேசிய ஜனநாயகக் கூட்டணிதான் அறுதிப் பெரும்பான்மை பெற்று ஆட்சியமைக்கும் என்றும் தேசியப் பத்திரிக்கைகள் பரப்பி வந்த மாயைகள் பீகாரில் தகர்ந்துபோய் விட்டன. பா.ஜ.க. கூட்டணி 122 தொகுதிகளில் தான் வெற்றி பெற்றுள்ளது. காங்கிரசுக் கட்சியோ முதுகெலும்பு முறிந்து 23 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது.

லல்லுவின் ராஷ்ட்ரீய ஜனதா தளக் கட்சியும் பா.ஜ.க. கூட்டணியும் அறுதிப் பெரும்பான்மையிடமின்றி இழுபறி நீடித்த வேளையில், மைய அரசின் கங்காணியாகச் செயல்படும் பீகார் ஆளுநர் பா.ஜ.க. கூட்டணியை ஆட்சியமைக்க அழைத்துச் சட்டமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கக் கோரினார். பதவி வெறி கொண்ட பா.ஜ.க. கூட்டணி, நிதிஷ் குமாரை முதல்வராகக் கொண்டு அமைச்சரவை நிறுவி அவசரமாகப் பதவியேற்றது. "அதிக இடங்களைப் பெற்ற தனிக் கட்சியைத்தான் ஆட்சியமைக்க அழைக்க வேண்டும்; கூட்டணியை அழைத்து ஆட்சியை நிறுவியது சட்டவிரோத - ஜனநாயக விரோதச் செயல்" என்று கூறி லல்லுவின் கட்சி போராட்டங்களில் இறங்கியது. மறுபுறம், சட்ட மன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க சுயேச்சைகள் மற்றும் சிறிய கட்சிகளிடம் பணப் பெட்டியுடன் பேரம் நடத்தியும் பலனளிக்காமல் போனதாலும், நடுநிலை வகிப்பதாக நாடகமாடிய காங்கிரசு காலைவாரி விட்டதாலும் வேறு வழியின்றி பா.ஜ.க. கூட்டணி அமைச்சரவை பதவி விலகியுள்ளது. மீண்டும் தனது மனைவி ராப்ரி தேவியை முதல்வராகக் கொண்ட ஆட்சியை நிறுவியுள்ள லல்லு, சட்டமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க இதரக் கட்சிகளுடன் பேரம் நடத்தி வருகிறார்.



**சாதிய ஆதிக்கத்தின் சாட்சி: பீகாரில் ஓட்டுப் போட விடாமல் மேல்சாதி வெறியர்களால் தடுத்து அச்சுறுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள்.**

பீகாரில் லல்லு கட்சி மட்டுமல்ல; அதனுடன் போட்டி போட்டுக் கொண்டு பா.ஜ.க. கூட்டணியும் சாதி வெறியர்கள், கிரிமினல் குண்டர்களையே இத்தேர்தலில் வேட்பாளர்களாக நிறுத்தியது. "முள்ளை முள்ளால்தான் எடுக்க முடியும்; லல்லுவின் கிரிமினல் அரசியலை கிரிமினல்களைக் கொண்டுதான் வீழ்த்த முடியும்" என்று பா.ஜ.க. கூட்டணி அதை வெளிப்படையாக நியாயப்படுத்தவும் செய்தது. இதுதவிர, சுயேச்சைகள் மற்றும் அதிருப்தி வேட்பாளர்கள் அனைவருமே கிரிமினல் பின்னணி கொண்டவர்கள் தான்.

யாதவ சாதியினர், முஸ்லிம்கள் - தாழ்த்தப்பட்டோரை தம்பின்னே அணிதிரட்டிக் கொண்ட லல்லு ஒருபுறமும், பார்ப்பனர் - ராஜபுத்திரர் - பூமிகார் - குர்மி சாதியினரைத் தம்பின்னே திரட்டிக் கொண்ட பா.ஜ.க. கூட்டணி மறுபுறமுமாக நின்றன. குறிப்பாக, பா.ஜ.க., மேல் சாதியினரையே 50%-க்கும் மேலான தொகுதிகளில் நிறுத்தியது. சமதா கட்சி தனது ஓட்டு வங்கியான குர்மி சாதியினரையே வேட்பாளர்களாக நிற்க வைத்தது. ஆனாலும், பா.ஜ.க. கனவு கண்ட மேல் சாதிக் கூட்டணி எதிர்பார்த்தபடி வெற்றியைப் பெற முடியவில்லை. மேல் சாதியினர் ஐக்கியப்பட்டு ஓரணியாகத் திரளாததால், மேல்சாதி ஓட்டு வங்கி சிதறிப் போய் விட்டது. காங்கிரசும் பா.ஜ.க.வும் மேல்சாதி ஓட்டு வங்கியை மட்டும் நம்பி, அதை மட்டுமே அடித்தளமாகக் கொண்டு வெற்றி பெற முடியாது என்பதை பீகார் தேர்தல் நிரூபித்துக் காட்டிவிட்டது. அதேசமயம் இக்கட்சிகள் தாழ்த்தப்பட்ட மக்களின் ஆதரவையும் பெற முடியவில்லை. பிற்பட்ட - தாழ்த்தப்பட்ட சாதியினரைத் தம்பின்னே திரட்டிக் கொண்டுள்ள சாதிய - பிழைப்புவாதக் கட்சிகளுடன் கூட்டணி அமைத்தால்தான் வெற்றி பெற முடியும் என்ற நிலைக்கு இக்கட்சிகள் தள்ளப்பட்டுள்ளன.

சுருக்கமாகச் சொன்னால், நான்கு மாநிலச் சட்டமன்றத் தேர்தல்களில் காங்கிரசு பெருந்தோல்வியைச் சந்தித்துள்ளது. பா.ஜ.க. முன்பை விட தனது செல்வாக்கையும் பலத்தையும் இழந்துள்ளது. சாதிய பலம், கிரிமினல் பலம் கொண்ட பிழைப்புவாத மாநிலக் கட்சிகளே வெற்றி பெற்றுள்ளன. ஓரிரு மாநிலங்கள் தவிர பெரும்பாலானவற்றில் இத்தகைய சாதிய - பிழைப்புவாத மாநிலக் கட்சிகளுடன் கூட்டணி சேராமல் பா.ஜ.க.வோ, காங்கிரஸோ தனித்து நின்று வெற்றி பெறவே முடியாது என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இத்தகைய மாநிலக் கட்சிகளின் தயவில் தான் மத்தியில் இவை ஆட்சியதிகாரத்தில் நீடிக்கவும் முடியும் என்பதை இத்தேர்தல் முடிவுகள் நிரூபித்துக் காட்டிவிட்டன.

முந்தைய ஆட்சிகளின் மீதான மக்களின் வெறுப்பு, தேசிய கட்சிகள் மீதான அதிருப்தி ஆகியவற்றைச் சாதகமாக்கிக் கொண்டு சாதிய - கிரிமினல் பலத்தில் மாநிலக் கட்சிகள் வெற்றி பெற்றுள்ள போதிலும், அவை காங்கிரசு, பாரதீய ஜனதாவுக்குக் காவடி தூக்கும் கட்சிகளாகவே உள்ளன. அரியானாவின் சவுதாலாவும், ஒரிசாவின் நவீன் பட்நாயக்கும் தனிப் பெரும்பான்மை பெற்றுள்ள போதிலும், இந்துவெறி பாரதீய ஜனதாவுக்கு விசுவாசமாக நிற்கின்றனர். லல்லுவும் பீகாரில் தனது ஆட்சியை மீண்டும் நிறுவ காங்கிரசின் தயவையே நம்பியுள்ளார். எல்லாவற்றுக்கும் மேலாக, நாட்டை மீண்டும் காலனியாக்கி வரும் தனியார்மய - தாராளமயக் கொள்கைகளை இக்கட்சிகள் விசுவாசமாக ஆதரித்தே நிற்கின்றன. டெல்லியில் எந்த தேசியக் கட்சியோ, கூட்டணியோ ஆட்சி செய்யட்டும்; ஆனால் மாநிலத்தைப் பொருத்தவரை நாங்கள்தான் என்று சக்கரவர்த்திக்குக் கப்பம் கட்டும் குறுநில மன்னர்களைப் போலவே இக்கட்சிகள் உள்ளன.

சாதிய பலத்தையும் கிரிமினல் பலத்தையும் அடித்தளமாகக் கொண்டு, பிழைப்புவாதத்தையும் சந்தர்ப்பவாதத்தையும் கொள்கையாகக் கொண்டு, கவர்ச்சிவாத - பொறுக்கி - கிரிமினல் அரசியலில் ஊறித் திளைக்கும் இக்கட்சிகளின் வெற்றி, மாநில சுயாட்சி உரிமைக்கான கோரிக்கையின் வெற்றியாக கருத அடிப்படையே இல்லை. மாநிலக் கட்சிகள் வெற்றி பெற்றுள்ளன என்பது உண்மை தான். ஆனால், அதைவிட, இம்மாநிலங்களின் அரசியலை சாதியமும் கிரிமினல் தனமும் வெற்றி கொண்டுவிட்டன என்பதே மறுக்க முடியாத உண்மை!

★ குணசேகரன்


படிப்பகம்

www.padippakam.com

# சந்தர்ப்பவாத அரசியலும் பிழைப்புவாத வாழ்வியலும்

''ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் உண்மை உருவம் என்ன? ஆர்.எஸ்.எஸ். பலமுறை அரசால் தடைசெய்யப்பட்ட இயக்கம் காந்தியார் கொலை முதல் இன்றைக்கு பாபர் மசூதி இடிப்பு, பாதிரியார் எரிப்பு என அனைத்திலும் இதற்கு முக்கியப் பங்குண்டு என்பது நீக்கமற நிரூபிக்கப்பட்டுள்ளது. சிறுபான்மையின மக்களுக்கும் தலித் மக்களுக்கும் எதிரான வன்கொடுமைகளை பல இடங்களில் கட்டவிழ்த்துள்ள இயக்கம் ஆர்.எஸ்.எஸ். இந்நிலையில், இந்த அமைப்பில் அரசுப் பணியாளர்கள் சேரலாம் என்று கூறியிருப்பதை, குஜராத் உள்துறை அமைச்சர் நியாயப்படுத்தவும் தயங்கவில்லை.''

''ஆனால், பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் பங்கேற்றிருக்கும் அனைவரும் இது குறித்து அமைதி காக்கின்றனர் என்பது எவ்வளவு பெரிய ஆபத்து; துரோகம். பா.ஜ.க.வின் கூட்டாளிகளுக்குத் தங்களின் வாக்குகளை அளித்து, இன்று ஆபத்தை சந்திக்கவிருக்கும் 'படித்த' - பாமர மக்கள் ஆழ்ந்து சிந்திக்கட்டும்.''

— இப்படி ஓர் அறிவுரையை அருளியிருக்கிறது ''தலித் முரசு'' என்கிற மாத இதழ். ஆகா, என்ன அருமையான அறிவுரை! இதை வழங்கிய ''தலித் முரசு'' என்ற ஏடு தலித் சேனா எனப்படும் 'அனைத்திந்திய' இயக்கத்தின் பத்திரிக்கை. இந்த தலித் சேனாவின் தமிழ் மாநிலத் தலைவர் சந்திரகேசன் தான் தலித் முரசின் ஆசிரியரும் வெளியீட்டாளரும் ஆவார். இந்த தலித் சேனாவின் தேசியத் தலைவர் இன்றைய ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. அரசின் தொலைத் தொடர்புத் துறை அமைச்சர் மானமிகு ராம்விலாஸ் பாஸ்வான்.

அரசுப் பணியாளர்கள் ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் பங்கேற்கலாம் என்ற முடிவு குறித்து பா.ஜ.க. கூட்டணி அரசில் பங்கேற்பவர்கள் அனைவரும் அமைதி காப்பது பெரிய ஆபத்து, துரோகம் என்கிறது ''தலித் முரசு''. பா.ஜ.க.வின் கூட்டாளிகளுக்கு வாக்களித்தது ஆபத்தைச் சந்திப்பதாகி விடும் என்று 'படித்த' - பாமர மக்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும் என்கிறது ''தலித் முரசு''. ஆனால், பா.ஜ.க. கூட்டணி அரசில் பங்கேற்று அமைதி காப்பவர்களில் ஒருவர், அதன் மூலம் பெரிய ஆபத்தையும் துரோகத்தையும் விளைவிப்பவர்களில் ஒருவர், 'படித்த' - பாமர மக்கள் வாக்களித்த பா.ஜ.க.வின் கூட்டாளிகளில் ஒருவர், ''தலித் முரசு'' பத்திரிக்கையை நடத்தும் தலித் சேனாவின் தேசியத் தலைவர் மானமிகு ராம் விலாஸ் பாஸ்வான்.

''தலித் முரசு'' இப்படி எழுதுவதை அதன் அரசியல் துணிவு என்பதா? அரசியல் சாதுர்யம் - திறமை என்பதா? அரசியல் மோசடி என்பதா?

பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் பங்கேற்று அமைதி காப்பவர், அதன் விளைவாகப் பெரிய ஆபத்தும் துரோகமும் நிகழச் செய்பவர், பா.ஜ.க.வின் கூட்டாளிகளில் ஒருவர் தனது இயக்கத்தின் தேசியத் தலைவரே ஆனாலும், ஒரு பத்திரிக்கை இப்படி எழுதுகிறதே, அது அரசியல் துணிவா?

இல்லை. அவரது பெயரை எங்குமே குறிப்பிடாது, நழுவிக் கொள்கிறதே இது அரசியல் சாதுர்யம் - சாணக்கியத்தனமா?

இல்லை. சந்திரபாபு நாயுடு, மம்தா, கருணாநிதி அளவுக்குக்கூட எந்த விடயத்திலும் முகஞ்சுழிக்காமல் பா.ஜ.க. அரசின் அங்கமாகவும் விசுவாசியாகவும் தனது தேசியத்தலைவர் விளங்குவதை மூடி மறைத்து முற்போக்கு நாடகமாடும் மோசடியா?

ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கூட்டணி அரசை எதிர்த்துத் தொடர்ந்து எழுதி வருகிறது ''தலித் முரசு''. தலித்தியம் - அம்பேத்கரியம், தமிழினவாதம் - பெரியாரியம் போன்றவற்றைக் கொண்ட ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. எதிர்ப்பு மேடைகளில் எல்லாம் தலித் சேனாத் தலைவர்கள் தோன்றி கொட்டி முழக்கி வருகிறார்கள்.

அதேசமயம், ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.வின் கூட்டாளியான தனது தேசியத் தலைவருக்கு ஆள் திரட்டிக் கொண்டு தில்லி - பாட்னா வரை போகிறார்கள். அக்கூட்டணி அரசில் அமைச்சராக உள்ள தனது தேசியத் தலைவரிடம் பதவி நியமனம், இடமாறுதல், பதவி உயர்வு கேட்டு தலித் முரசு தலித் சேனாத் தலைவர்களிடம் இருந்து சிபாரிசுக் கடிதம் போகாத நாளில்லை.

அவர்களைப் பொருத்தவரை அது வேறு - இது வேறு.

அதாவது, தலித் சேனாவின் தேசியத் தலைவர் என்கிற முறையில் ராம் விலாஸ் பாஸ்வான் தலைமையில் திரண்டுள்ள தாங்கள், இந்த மாநில அரசியலுக்கு ஏற்ப ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. எதிர்ப்புச் சவடால் அடிப்பது என்பது வேறு.

ஜனதா தளம் (ஐக்கியம்) கட்சியின் தலைவர், பா.ஜ.க. கூட்டணி அரசின் அமைச்சர் என்கிற முறையில் ராம் விலாஸ் பாஸ்வான் மூலம் ஆதாயம் தேடிக் கொள்வது என்பது வேறு.

**இந்து மதவெறியர்களுடன் கூட்டுச் சேர்ந்துள்ள ராம் விலாஸ் பாஸ்வானுக்கு தலித் சேனாவினரின் மாலை மரியாதை!**





படிப்பகம்

www.padippakam.com

அது, ஒட்டுமொத்த தலித் சமூகத்துக்கான அரசியல். இது தனிப்பட்ட தலித்துக்களின் பிழைப்புக்கான வாழ்வியல்.

இத்தகைய அரசியலும், வாழ்வியலும் ஒன்றுக்கொன்று முரண்பாடாக நிற்கவில்லையா? இல்லை. அரசியலை சந்தர்ப்பவாதமாகவும், வாழ்வியலைப் பிழைப்புவாதமாகவும் வைத்துக் கொண்டால், அவை எப்போதும் முரண்படுவதில்லை!

சந்தர்ப்பவாதம் என்பது ஓட்டுக்கட்சி அரசியல்வாதிகள் மட்டுமே மேற்கொள்ளும் அணுகுமுறையில்லை. பிழைப்புவாதம் என்பதும் தொழிற் சங்கவாதிகள் மட்டுமே கடைப்பிடிக்கும் கொள்கையுமில்லை. ஓட்டுக்கட்சி அரசியலைச் சார்ந்து காரியங்களைச் சாதித்துக் கொள்வதையே தனது செயல்முறையாகக் கொண்ட தலித்சேனா போன்ற வேறுபல அமைப்புகளும்கூட சந்தர்ப்பவாத அரசியலையும் பிழைப்பு வாத வாழ்வியலையும் இணைத்து ஒரு வீரிய ஒட்டு ரக சித்தாந்தத்தை உருவாக்கியிருக்கின்றன.

எஸ்.வி. ராஜதுரை - வ. கீதா, அ. மார்க்ஸ், ரவிக்குமார், இன்குலாப், விடுதலை இராசேந்திரன், பேரா. சரசுவதி, சுப. வீரபாண்டியன் போன்று தலித் முரசு - தலித்சேனா மேடையேறத்தயங்காதவர்கள் பலர் உள்ளனர். தாங்கள் சார்ந்த இயக்க மேடைகளில் தலித் முரசு - தலித் சேனா பிரமுகர்களை ஏற்றவும் தயங்காதவர்கள். இவர்களெல்லாம் படிக்காத பாமரர்கள் அல்ல; தமிழக அறிவுலகில் அறிஞர்கள், பேராசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள், எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் என்று அறியப்பட்டவர்கள். ஒவ்வொரு விடயத்தையும் பகுத்தாய்ந்து முடிவு செய்பவர்கள். ஆனாலும் இவர்களுக்கு, தலித் முரசு - தலித் சேனாவின் இரட்டை நிலை நெருடலாகத் தெரியவில்லையா?

**சந்தர்ப்பவாதம் என்பது ஓட்டுக் கட்சி அரசியல்வாதிகள் மட்டுமே மேற்கொள்ளும் அணுகுமுறையில்லை. பிழைப்புவாதம் என்பதும் தொழிற் சங்கவாதிகள் மட்டுமே கடைப்பிடிக்கும் கொள்கையுமில்லை. "தலித் சேனா" போன்று பல்வேறு அமைப்புகளும் கூட, சந்தர்ப்பவாத அரசியலையும் பிழைப்புவாத வாழ்வியலையும் இணைத்து ஒரு வீரிய ஒட்டு இரக சித்தாந்தத்தை உருவாக்கியிருக்கின்றன.**

அ. மார்க்ஸ், ரவிக்குமார் போன்ற பின் நவீனத்துவவாதிகளுக்கு இதுவொன்றும் பிரச்சினையே இல்லை. இவர்களது சித்தாந்தப்படி பகுத்தறிவே பயங்கரமானது; தர்க்க ரீதியிலானவையெல்லாம் வன்முறை. ஒரு நாள் "இந்தியா டுடே" பத்திரிக்கைத் தாள்களை கழிப்பறைக் காகிதமாகவும் பயன்படுத்துவார்கள். அடுத்தநாள் அதே தாள்களை உணவருந்தும் தட்டுக்களாகவும் பயன்படுத்துவார்கள். கேட்டாள் விளிம்பு நிலை மக்கள் கிடைத்தது எதுவானாலும், எப்படியும் பயன்படுத்தத் தயங்க மாட்டார்கள் என்கிற சித்தாந்த விளக்கம் தருவார்கள்.

ஆனால், மற்றவர்களின் நிலை என்ன? தம் கண் முன்னே, தம்மோடு மேடைகளைப் பகிர்ந்து கொள்ளும் தலித் முரசு - தலித் சேனாக்காரர்கள் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. எதிர்ப்பு "சன்டப் பிரசண்டம்" அடிக்கிறார்களே அது எந்த அளவுக்கு உண்மையானது, நேர்மையானது, அவர்களது இயக்க நடைமுறைக்கு எப்படி முரணற்றது என்று இவர்கள் கொஞ்சமும் எண்ணிப் பார்ப்பதுண்டா?

**'ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. எதிர்ப்பு அரசியல் நடத்தி வரும்' தலித் சேனாவின் தமிழகத் தலைவர் சந்திரசேகனுக்கு பாஸ்வான் செலுத்தும் மரியாதை!**



தலித் முரசு - தலித் சேனாக்காரர்கள் மட்டும்தான் இப்படி நடந்து கொள்கிறார்களா? கருணாநிதி, வீரமணி, ஜெயலலிதா போன்ற தலைவர்கள் தான் திராவிட இயக்கத்தின் பாரம்பரியக் கொள்கையான ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. மற்றும் பார்ப்பன எதிர்ப்பு நிலையைக் கைவிட்டுச் சமரசம் செய்து கொண்டு விட்டார்கள் என்று மேற்கண்ட அறிஞர் பெருமக்கள் ஒதுக்கி வைத்துவிட்டார்கள். சரிதான். ஆனால், அவர்களுக்கு ஏற்புடைய திராவிட இயக்க மறுமலர்ச்சி - புரட்சிப் புயல் வைக்கோ, தமிழினக் காவலர் திண்டிவனத்துப் பெரியார் ஐயா ராமதாசு ஆகியோரின் நிலை என்ன? மாநில அரசைக் கலைப்பது முதல் மதச் சிறுபான்மையினரை உயிரோடு கொளுத்துவது வரை ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பலை ஆதரித்தோ, கண்டு கொள்ளாமலோ இருந்துவரும் வைக்கோவும் இராமதாசும் தேசிய இன உரிமை, மனித உரிமை, சமூக நீதி என்றெல்லாம் தங்கள் மேடைகளில் பேசுவது நேர்மையான எண்ணத்துடன்தான் என்று நம்புகிறார்களா?

மாநகராட்சிகளில் குப்பை அள்ளுவது, தண்ணீர் பகிர்ந்தளிப்பு முதல் மின்துறை, காப்பீடு, வங்கி, போக்குவரத்து உட்பட அனைத்தும் தனியாருக்குத் தாரை வார்க்கப்படுவதை இரண்டு கைகளையும் தூக்கி ஆதரிக்கும் ஓட்டுக் கட்சிகள், சேலம் உருட்டாலையைத் தனியாருக்கு விற்பதை மட்டும் எதிர்ப்பதாகக் கூறுவது தமிழினப் பற்று காரணமாகத்தான் என்று மேற்கண்ட அறிஞர்கள் நம்புகிறார்களா?

இட ஒதுக்கீடு, குறிப்பாக பெண்களுக்கான இட ஒதுக்கீடு, தமிழ்மொழிக் கல்வி, மாநில அரசுகளின் ஆட்சிக் கவிழ்ப்பை எதிர்ப்பது, சுதேசிக் கொள்கை என்றெல்லாம் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.வினர் பேசும்போது அவற்றை அப்படியே அவர்களது நிலைப்பாடுகள் என்று மேற்கண்ட அறிஞர் பெருமக்கள் நம்பிவிடுவதில்லை. அவற்றின் நம்பகத் தன்மையைக் கேள்விக்குள்ளாக்குகின்றனர். அவற்றில் சொல் வேறு - செயல் வேறாக இருப்பதையும் சுய முரண்பாடுகளையும் அலசி ஆராய்கிறார்கள். பித்தலாட்டம், மோசடிகளை அம்பலப்படுத்துகிறார்கள். சரிதான்!

ஆனால், இராமதாசு, வைக்கோ போன்றவர்கள் சவடாலடிக்கும் போது மட்டும் இவர்களின் சொல்லும் செயலும் வேறுபடுவதை, சுயமுரண்பாடுகளை, சந்தர்ப்பவாத நிலைப்படுகளை அலசி ஆராய்வதில்லை. அதற்கு மாறாக, இவர்கள் தமக்கு உடன்பாடான நிலைப்பாடுகளை அறிவிக்கும்போது மேற்கண்ட அறிஞர்கள் அவற்றை அப்படியே நம்பி இவர்களுடன் சேர்ந்து மேடையேறுகின்றனர், அல்லது


படிப்பகம்

www.padippakam.com

இவர்களைத் தங்கள் மேடையில் ஏற்றுகின்றனர். இந்த மேடைகளில் அந்தத் தலைவர்கள் பேசுவதெல்லாம் உண்மைதாமென்று நம்பிப் புகழவும் தவறுவதில்லை.

அம்பத்தூரில் தொழிலாளர்களைக் கசக்கிப் பிழியும் இலாட்டரி முதலாளி ஆருன், மாஞ்சோலைத் தொழிலாளர்களுக்காக உருகிப் போகிறார்.

கபிஸ்தலத்தில் சாதிய உறவுகளைப் பேணும் பண்ணையார் கருப்பையா மூப்பனார், நெல்லையில் தாழ்த்தப் பட்டோர் குடிசையில் உணவருந்தி சாதி சமத்துவத்துக்காக மன்றாடுகிறார்.

தமிழ்வழிக் கல்விக்காக கருத்தரங்கு - ஆர்ப்பாட்டம் நடத்தும் "மார்க்சிஸ்டு" கட்சியினர், தமிழ்வழிக் கல்வியை எதிர்க்கும் ஜெயலலிதாவை ஆட்சியில் அமர்த்துவதற்காக அணி சேருகின்றனர்.

— இவ்வாறு ஒரு தலைவரோ, இயக்கமோ, அமைப்போ சில விடயங்களில் நம்மோடு உடன்படுவதைப் போன்ற நிலைப்பாடு எடுக்கும் அதேசமயம், பிற விடயங்களில் நம்மோடு முரண்படும் நிலைப்பாடுகளைக் கொண்டதாக இருக்கும்போது நாம் என்ன செய்வது? அதுவும் நாணயமற்ற தன்மையும் சந்தர்ப்பவாதமும் நிரம்பி வழியும் அரசியல்வாதிகளுடன் என்ன உறவு கொள்வது?

முதலாளிய அறிஞர்கள் நாடாளுமன்ற அரசியலுக்கு ஒரு விளக்கம் தருகிறார்கள். "அரசியல் என்பது எண்ணிக்கை விளையாட்டு" என்கிறார்கள். "அரசியல் என்பது கிடைக்கும் வாய்ப்புகளைச் சரியாகத் தெரிவு செய்து கொள்வது" என்கிறார்கள். அதுபோல யார் யாரெல்லாம், எவ்வப்பொழுதெல்லாம் எதிலெல்லாம் நம்மோடு ஒத்த நிலைப்பாடு உள்ளதாகப் பேசுகிறார்களோ, அதற்குத் தகுந்தபடி, அதை நம்பி கைகோர்த்துக் கொள்வதுதான் சரியானது, விவேகமானது, அவசியமானது; அதற்கு மாறாக ஒவ்வொரு தலைவர்கள், இயக்கங்கள், அமைப்புகளின் நம்பிக்கை தன்மையைப் பரிசீலித்து, நண்பர்களையும் எதிரிகளையும் வரையறுப்பது கூடாது என்று பல "அறிவு ஜீவி"களும் வலியுறுத்துகிறார்கள். அதற்கு, "அப்படிச் செய்தால் யாரும் மிஞ்ச மாட்டார்கள்" என்று காரணமும் கூறுகிறார்கள்.

இதற்கு மாறாக முரணற்ற, தர்க்க ரீதியிலான, ஒருங்கிணைந்த, கறாரான அரசியல் - வாழ்வியல் நோக்கு என்பது வறட்டுத்தனம், குறுங்குழுவாதம், பார்ப்பனத் தூய்மை வாதம் என்று முத்திரை குத்துகிறார்கள். இவர்களின் சந்தர்ப்பவாத, பிழைப்புவாத அணுகுமுறைகளை அம்பலப்படுத்தினால் எல்லோரையும் எப்போதும் குறை சொல்லுவதே

> **ஓட்டுக் கட்சிகளின் சந்தர்ப்பவாதமோ அப்பட்டமானது. தமிழினவாத, பெரியாரிய, தலித்திய - அம்பேத்கரிய அமைப்புகளின் சந்தர்ப்பவாதமோ முற்போக்குச் சவடால்களால் மூடி மறைக்கப் பட்டது. ஆகவே, மிகவும் அபாயகர மானது.**

வேலையாகக் கொண்டிருப்பதாக எதிர்க் குற்றச்சாட்டுகளை வீசுகிறார்கள். இப்படிப்பட்ட வாதங்கள் மூலம் நியாயப்படுத்தவே முடியாத தமது குறைபாடுகளை விமர்சனத்துக்கு அப்பாற்பட்டதாக வைத்துக் கொள்கிறார்கள்.

திராவிட இயக்கத்தின் பாரம்பரியக் கொள்கையான ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. மற்றும் பார்ப்பன எதிர்ப்பில், தாங்களே உறுதியான நிலையெடுப்பவர்கள் என்று உரிமை கொண்டாடுகின்றனர் தமிழினவாத, பெரியாரிய, தலித்திய - அம்பேத்கரிய வாதிகள். இதன் மூலம் தலித் விடுதலை, தமிழின விடுதலை என்கிற இலட்சியத்தை நிச்சயம் சாதிப்போம் என நம்பவும் சொல்கிறார்கள். ஆனால், உண்மையில் ஏதாவது ஒரு சுற்று வழியில் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. மற்றும் பார்ப்பனத் தொடர்புகளை இவர்கள் பராமரிக்கிறார்கள். இராமதாசு, வைக்கோ, பெர்னான்டஸ் போன்றவர்களின் கரங்களை வலுப்படுத்துவதன் மூலம் அச்சக்திகளுக்கு இவர்கள் ஆதரவு தருகிறார்கள். அவர்கள் மூலமாக இவர்கள் தமது காரியங்களையும் சாதித்துக் கொள்கிறார்கள்.

தலித் முரசு - தலித் சேனாவின் தேசியத் தலைவராக எப்படி ராம் விலாஸ் பாஸ்வான் விளங்குகிறாரோ அதைப் போல, தமிழினவாத - பெரியாரியவாதிகளின் அறிவிக்கப்படாத தேசியத் தலைவராக பெர்னாண்டஸ் விளங்குகிறார். அணுகுண்டு வெடிப்பு, காஷ்மீர் போர், பாதிரியார் எரிப்பு என ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. அரசின் எல்லா பாசிச அட்டூழியங்களிலும் துணை நிற்கும் இராணுவ மந்திரி பெர்னான்டஸ் விடுதலைப் புலிகளை ஆதரிக்கிறார் என்கிற ஒரே காரணத்துக்காக தில்லியில் இவர்களின் நம்பகமான தலைவராகக் கருதப்படுகிறார். கடந்த ஆண்டு ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. ஆட்சியை ஜெயலலிதா கவிழ்த்தது கூடப் புகழ் பெற்று வரும் பெர்னான்டசுக்கு எதிராக அமெரிக்காவும் சீனாவும் சேர்ந்து செய்த சதியின் விளைவுதான் என்று தமிழினவாத "நந்தன்வழி"யின் காமாலைக் கண் கண்டது. விடுதலைப் புலிகளை ஆதரிப்பதாக அவ்வப்பொழுது அறிக்கை விடும் பாசிச இந்தத்துவ வெறியன் பால் தாக்கரே கூட இவர்களுக்கு ஏற்கக் கூடியவனாகிறான்.

இவையெல்லாம் காட்டுவதென்ன? தலித்திய - அம்பேத்காரியவாதிகள், தமிழினவாத - பெரியாரியவாதிகளின் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. மற்றும் பார்ப்பன எதிர்ப்பு கூட உண்மையானது தானா அல்லது வெறும் சந்தர்ப்பவாதம் தானா என்கிற கேள்விக்கிடமானதுதான். ஓட்டுக் கட்சிகளின் சந்தர்ப்பவாதமோ அப்பட்ட மானது. இவர்களின் சந்தர்ப்பவாதமோ முற்போக்கு சவடால்களால் மூடி மறைக்கப்பட்டது. ஆகவே, மிகவும் அபாயகரமானது.

★ மாணிக்க வாசகம்

# விளக்கம்

16-29 பிப்ரவரி 2000 இதழில் வெளியாகியிருந்த "நக்சல்பாரி புரட்சியாளர் இரவீந்திரன் படுகொலையும் போலீசின் கட்டுக் கதையும்" என்ற கட்டுரையில், "இரவீந்திரனும் அவரது சக தோழர்களும் மக்கள் போர்க்குழு தலைவர்களை ஆந்திர அரசு கொன்றொழித்ததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்தில், இரண்டு அரசுப் பேருந்துகளைத் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர்" என எழுதியிருந்தோம்.

ஆனால், தோழர். இரவீந்திரனுக்கு அஞ்சலி செலுத்தி, இ.பொ.க. (மா-லெ), மக்கள் போர்க் குழு வெளியிட்டுள்ள துண்டறிக்கையில், தங்கள் அமைப்புதான் பேருந்தைக் கொளுத்தியதாகவும் போலீசால் கொல்லப்பட்ட இரவீந்திரனுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளனர். எனவே, மேற்கண்டவாறு பு.ஜ.வில் வெளியாகியிருந்த செய்தி தவறானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். இதுபோன்ற தவறுகள் இனி ஏற்படா வண்ணம் கவனமுடன் செயல்படுவோம் என சுயவிமர்சனத்துடன் உறுதி அளிக்கிறோம்.

ஆசிரியர் குழு



படிப்பகம்

www.padippakam.com

# ஆர்.எஸ்.எஸ்.ஐத் தடை செய்! அரசு ஊழியருக்குக் கட்சிகளில் சேர உரிமை வழங்கு!

குஜராத் மாநில பா.ஜ.க. அரசு, அம் மாநில அரசு ஊழியர்கள் ஆர்.எஸ்.எஸ்.-இல் சேருவதற்கு இருந்து வரும் தடையை நீக்கப் போவதாக அறிவித்திருந்ததை, நாடெங்கும் எழுந்த எதிர்ப்பின் காரணமாகத் திரும்பப் பெற்றுக் கொண்டு விட்டது. குஜராத் மாநில அரசின் இந்த அறிவிப்பை எப்படியாவது நடைமுறைக்குக் கொண்டு வந்துவிட வேண்டும் என்பதில் பா.ஜ.க. தலைமை மிகுந்த தீவிரம் காட்டியது. உள்துறை அமைச்சர் அத்வானி, "குஜராத் மாநில அரசின் அறிவிப்பு சட்ட விரோதமானதல்ல" என நாடாளுமன்றத்திலேயே அறிவித்தார். பிரதமர் வாஜ்பாயி, "ஆர்.எஸ்.எஸ். அரசியல் அமைப்பு அல்ல; அது ஒரு சமூக, கலாச்சார இயக்கம்" எனக் கூறி, குஜராத் அரசின் முடிவை நியாயப்படுத்தினர்.

பா.ஜ.க.-வுடன் கூட்டணி சேர்ந்துள்ள தி.மு.க. உள்ளிட்ட 'மதச்சார்பற்ற' கட்சிகளும் குஜராத் மாநில அரசின் முடிவை எதிர்ப்பதாகக் கூறிக் கொண்டாலும், அக்கட்சிகள் ஆர்.எஸ்.எஸ்.-ஐ சமூக, கலாச்சார இயக்கமாக ஏற்றுக் கொள்ளுமளவு பக்குவப்பட்டு விட்டன. இது, ஒரு வகையில் இந்து மதவெறியர்களுக்குக் கிடைத்துள்ள 'எதிர்பாராத' வெற்றிதான்!

காங்கிரசும், இடது, வலது போலி கம்யூனிஸ்டுகளும் ஆர்.எஸ்.எஸ்.-இல் அரசு ஊழியர்கள் இணைவதை மட்டுமல்ல, "ஆர்.எஸ்.எஸ். ஒரு சமூக இயக்கம்" - என்று இந்து மதவெறியர்களும், அதனின் கூட்டணிக் கட்சிகளும் புளுகி வருவதையும் ஏற்றுக் கொள்ளவில்லை.

அனைவருக்கும் அப்பட்டமாகவே தெரிந்த இந்து மதவெறி பாசிச அரசியல் இயக்கமான ஆர்.எஸ்.எஸ்.-இல் அரசு ஊழியர்கள் சேரலாம் என்று ஆதரிக்கும் வாஜ்பாயி, அத்வானியும், "சோ"வும், பிற அரசியல் இயக்கங்களில் - புரட்சிகர இயக்கங்களை விடுங்கள் - இந்த நாடாளுமன்ற அமைப்பு முறையை ஏற்றுக் கொண்ட ஓட்டுக் கட்சிகளில் அரசு ஊழியர்கள் உறுப்பினராய் இருப்பதை ஏற்றுக் கொள்வதில்லை. "ஆர்.எஸ்.எஸ். மதவெறி அரசியல் அமைப்பு; எனவே, அதில் அரசு ஊழியர்கள் இணைவதை அனுமதிக்கக் கூடாது" என வாதாடும் காங்கிரசும், ஏனைய கட்சிகளும், முதலாளித்துவ அரசியல் விமர்சகர்களும், "அரசு ஊழியர்கள், ஆர்.எஸ்.எஸ்.-இல் மட்டுமல்ல; எந்தவொரு அரசியல் கட்சியிலும் இணைந்து கொள்ளுவதற்குச் சட்டபூர்வ உரிமை வழங்கக் கூடாது" என்று கூறி வருகின்றனர்.

"அரசு ஊழியர்கள் எந்தவொரு அரசியல் இயக்கத்திலும் பங்கெடுத்துக் கொள்ளக் கூடாது" என்பது வெள்ளைக்காரன் காலத்தில் போடப்பட்ட சட்டம்; இது, 'சுதந்திர' இந்தியாவிலும் தொடர்கிறது. இக்காலனிய காலச் சட்டம் தொடர்ந்து இருப்பது பா.ஜ.க.விற்கும் தேவையாய் இருப்பதால் தான், இந்து மதவெறியர்கள் ஆர்.எஸ்.எஸ்-ஐ சமூக, கலாச்சார இயக்கமாகக் காட்டி, குறுக்கு வழியில், அரசு ஊழியர்கள் ஆர்.எஸ்.எஸ்.-இல் இணைவதைச் சட்டபூர்வமாக்கிவிட முயலுகின்றனர்.

காங்கிரசும், பா.ஜ.க.வும், தி.மு.க. உள்ளிட்ட பிற கட்சிகளும், முதலாளித்துவ அரசியல் விமர்சகர்களும் அரசு ஊழியர்கள் அரசியல் இயக்கங்களில் சேருவதை எதிர்ப்பதற்கும், அது சட்டபூர்வமாகவே தடை செய்யப்பட்டிருப்பதை ஆதரிப்பதற்கும் கூறும் காரணங்கள் இவைதான்: "பல்வேறு ஓட்டுக் கட்சிகளின் தலைமையில் மாறிமாறி அரசாங்கங்கள் அமைந்தாலும், மாறாமல் நிலையாக இருப்பது அரசு நிர்வாகம்; இந்த அரசு நிர்வாகம் எல்லோருக்கும் பொதுவானது; நடுநிலையானது. எனவே, இந்த அரசு நிர்வாகத்தை நடத்திச் செல்லும் அதிகாரிகளும் ஊழியர்களும் சுதந்திரமாகவும், நடுநிலையாகவும் செயல்பட வேண்டுமென்றால், அவர்கள் அரசியல் கட்சிகளின் சார்பாளர்களாக இருக்கக் கூடாது; அப்படி அனுமதித்தால், அரசு நிர்வாகமும் கட்சி சார்பானதாக மாறி விடும். அரசு அலுவலகங்கள் அரசியல் விவாதம் நடக்கும் மேடையாகி விடும்; நடுநிலை போய்விடும்; நிர்வாகம் ஒழுங்காக நடக்காது."

அரசு அதிகாரிகளை / ஊழியர்களை அரசியல் கட்சிகளில் சேர அனுமதித்தால் அரசின் நடுநிலை போய்விடும் எனக் கூறும் ஓட்டுக் கட்சிகள், ஆட்சியைப் பிடித்தவுடன் செய்யும் முதல் காரியமே அதிகாரமிக்க பதவிகளில் தனது கட்சிக்கு வேண்டப்பட்ட அதிகாரிகளைக் கொண்டு வந்து உட்கார வைப்பதுதான். இதனை 'அரசின் நடுநிலைமையைக் குழிபறிக்கும் அத்து மீறல்' என்று எந்தவொரு எதிர்க்கட்சியும், முதலாளித்துவ அரசியல் விமர்சகர்கள்கூட இதுவரை விமர்சித்ததில்லை.

இது ஒருபுறமிருக்க, அரசியல் கட்சிகளைக் காக்கா பிடித்து, அதிகாரமிக்க பதவிகளைக் கைப்பற்றிக் கொள்வதில் அதிகார வர்க்கமும் சளைத்தவர்களல்ல. முதலாளித்துவ பத்திரிகைகளாலும், நடுத்தர வர்க்கத்தினராலும் "ஆதர்ஷ" அதிகாரியாகப் புகழப்பட்ட சேஷன், ராஜீவ் காந்தி வீட்டுக்கு நடையாய் நடந்துதான் தலைமை தேர்தல் கமிசனர் பதவியைப் பிடித்ததாக வெளிப்படையாகவே கூறியிருக்கிறார். இதே சேஷன் நாடாளுமன்றத் தேர்தலின் பொழுது, காங்கிரசு சார்பில் போட்டியிட்டுத் தோற்றுப் போனார்.

இன்று வெளியுறவுத் துறை அமைச்சராக இருக்கும் ஜஸ்வந்த் சிங், முன்பு இந்திய இராணுவத்தில் உயர் அதிகாரியாக இருந்தவர். இப்படி ஜஸ்வந்த் சிங்கைப் போல, பதவி

கூலி உயர்வு கேட்டுப் போராடிய மாஞ்சோலைத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு 'நடுநிலை'யோடு நியாயம் வழங்க வேண்டிய தமிழக அரசு, முதலாளியின் கூலிப்படையாக வெறியாட்டம் போட்டதேன்?




படிப்பகம்

www.padippakam.com

ஓய்வு பெற்ற பின்னர் பா.ஜ.க.வில் சேர்ந்த, அக்கட்சியின் எம்.பி., எம்.எல்.ஏ. ஆகிவிட்ட முன்னாள் அரசு அதிகாரிகள் பலருண்டு.

தமிழகத்தில் தலைமைத் தேர்தல் அதிகாரியாக இருந்த மலைச்சாமி ஐ.ஏ.எஸ்., பதவி ஓய்வு பெற்ற பிறகு தேவர் சாதி சங்கத்திற்குத் தலைவரானார். அதன்பின் முக்குலத்தோர் ஆதரவுக் கட்சியான அ.தி.மு.க.வின் தயவில் எம்.பி.யாகி விட்டார். இந்தியன் வங்கியின் தலைவராக இருந்து அதனை மொட்டையடித்த கோபால கிருஷ்ணன், இன்று கோனார் (யாதவ்) சாதி சங்கத்தின் தலைவராக இருக்கிறார்.

இப்படி பதவியைவிட்டு வெளியே வந்த பின்பு வெளிப்படையாகவே சாதி சங்கங்களின் தலைவரான மலைச்சாமியும், கோபால கிருஷ்ணனனும் தமது பதவிக் காலத்தின் பொழுது, சாதி வெறியும், சாதிப் பாசமும் இன்றி நடுநிலையோடு நடந்து கொண்டிருப்பார்கள் என்று கூற முடியுமா? இதே போல, ஜஸ்வந்த் சிங் இந்து மத வெறியர்களுக்கும், சேஷன் காங்கிரசுக்கும் ஆதரவாக அதிகாரத்தைப் பயன்படுத்தியிருப்பார்களா, மாட்டார்களா? அரசு அலுவலகங்களில் இருக்கும் நாற்காலிகள், விக்கிரமாதித்தனின் சிம்மாசனமும் அல்ல; அதிகாரிகளும் சிபி சக்கரவர்த்தி அல்லர்.

அரசு அதிகாரிகளுக்கும் ஓட்டுக் கட்சிகளுக்கும் இடையே உள்ள இரகசியத் தொடர்பைக் காட்டிலும், அதிகாரிகளுக்கும் முதலாளிகளுக்கும் இடையே இருக்கும் நெருக்கம் ஆழமானது. ஒன்றுக்கும் உதவாத அரசு அதிகாரிகளின் வீட்டுப் பிள்ளைகள் முதலாளித்துவ நிறுவனங்களில் பெரிய பதவிகளில் இருப்பதன் மர்மத்தை அவிழ்த்தால், அதிகார வர்க்கத்தின் நடுநிலை நாறிப் போய் விடும். தரகு வேலை பார்ப்பதற்காகவே, ஓய்வு பெற்ற அதிகாரிகளை முதலாளிகள், தங்கள் நிறுவனங்களில் கொழுத்த சம்பளம் கொடுத்துச் சேர்த்துக் கொள்கிறார்கள்.



இந்துமதச் சடங்குகளோடு துவக்கி வைக்கப்படும் புதிய ரயில் பாதை

ஓட்டுக் கட்சிகள் அதிகார வெறிபிடித்த சுயநலமிகளின் கூட்டம்; அதிகார வர்க்கத்திலும் கருப்பு ஆடுகள் இருக்கலாம். இதை வைத்துக் கொண்டு இந்த அரசு அமைப்பின் நடுநிலைத் தன்மையைச் சந்தேகித்துவிட முடியாது என்று கட்சி சாராத முதலாளித்துவ அறிஞர்களும், சோ போன்ற 'நடுநிலையாளர்களும்' வாதிடலாம். நம்முள் பலருக்கும் கூட "அரசு எல்லோருக்கும் பொதுவானது தான்" என்ற பிரமை இருக்கிறது.

எல்லோருக்கும் பொதுவானதாகக் கூறப்படும் இந்த அரசு, நாட்டையும், மக்களையும் பாதிக்கும் பிரச்சினைகளில், சாதிப் பாகுபாடின்றி, மத வேறுபாடின்றி, ஏழை - பணக்காரன் / முதலாளி - தொழிலாளி என்ற வித்தியாசமின்றி நடுநிலையோடு நடந்து கொண்டதற்கு ஒரு உதாரணத்தையாவது காட்ட முடியுமா?

பெருவாரியான இந்திய மக்கள் நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்படும் அரிசி, கோதுமை, மண்ணெண்ணெயின் விலை உயர்த்தப்படுவதை எதிர்த்தும், பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார் மயமாக்குவதை எதிர்த்தும் போராடுகின்றனர். இதற்கு எதிராக, தரகு முதலாளிகளும் மேட்டுக் குடியினரும்தான் தனியார்மயம் - தாராளமயத்தை ஆதரிக்கின்றனர். இந்த இரண்டு தரப்பில், அரசும் அதிகார வர்க்கமும் வெளிப்படையாகவே தரகு முதலாளிகளுக்கு ஆதரவாக நடந்து வருவதை, பட்ஜெட் தயாரிப்பதை, சட்டமியற்றுவதை "நடுநிலை" என்று கூற முடியுமா?

உலக வங்கி - ஐ.எம்.எஃப் போடும் கட்டளைகளை இந்தியாவில் இம்மி பிசகாமல் நடைமுறைப்படுத்துவதற்காகவே, இந்த நிறுவனங்களில் வேலை பார்த்த, இந்த நிறுவனங்களால் பயிற்றுவிக்கப்பட்ட மான்டேக் சிங் அலுவாலியா, அர்விந்த் ஷிர்மானி, பிமல் ஜலான், ராகேஷ் மோகன் போன்ற ஏகாதிபத்திய விசுவாசிகள் உயர் பதவிகளில் அமர்த்தப்பட்டனர். இந்த அதிகாரிகள் தாராளமயத்திற்கு எதிரான வாதத்தைக் காது கொடுத்தாவது கேட்டிருப்பார்களா?

மாஞ்சோலைத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர் பிரச்சினையில், கூலி உயர்வு கேட்டுப் போராடிய தொழிலாளர்களை அடித்து ஆற்றில் வீசிக் கொன்ற தமிழக போலீசு, மாஞ்சோலைத் தோட்ட முதலாளியின் அடியாட் படையா? தொழிலாளர்கள் கூலி உயர்வு கேட்டுப் போராடும் பொழுது, ஏதாவது ஒரு சந்தர்ப்பத்திலாவது, "கேட்ட கூலியைக் கொடுடா" என்று போலீசின் லத்தி முதலாளியின் முதுகைப் பதம் பார்த்திருக்குமா?

போலீசு, துணை இராணுவப் படைகளின் துப்பாக்கியின் முன்னேதான் இந்து மத வெறியர்கள் பாபர் மசூதியை இடித்து விட்டு, அங்கே சட்ட விரோதமாக ராமன் கோயிலைக் கட்டினார்கள். மகாராஷ்டிரா மாநிலத்தில் 'மதச்சார்பற்ற' காங்கிரசு ஆட்சி நடந்து கொண்டிருந்த பொழுதுதான், மும்பய் போலீசு, சிவசேனா குண்டர்களோடு சேர்ந்து கொண்டு, அப்பாவி முசுலீம்களைக் கொன்று குவித்தது. 'நடுநிலை' தவறிய எந்தவொரு அதிகாரியும் இக்கொலைக் குற்றத்திற்காகத் தண்டிக்கப்படவில்லை.

'மதச் சார்பற்ற நாடு' எனக் கூறிக் கொள்ளும் இந்திய அரசின்/மாநில அரசின் அலுவலகங்களில் தான் இந்து மதத் தெய்வங்களின் படங்கள் தொங்கிக் கொண்டிருக்கின்றன; சரசுவதி பூசை பக்தி சிரத்தையோடு கொண்டாடப்படுகிறது. உச்சநீதி மன்றம் "இந்து" ஒரு மதம் அல்ல; அது வாழ்க்கை முறை என்று தீர்ப்பெழுதுகிறது. "தீண்டாமை குற்றம்", எனச் சட்டமுள்ள நாட்டில் தான், கோயில் கருவறையில் பார்ப்பனர்களைத் தவிர பிற சாதியினர் நுழைவது தீட்டு என்று சட்டரீதியாகவே உத்தரவாதப்படுத்தப் படுகிறது.

இப்படி, மைய அரசும் / மாநில அரசுகளும் மையமான பிரச்சினைகள் அனைத்திலும் ஒரு சார்பாக நடந்து கொள்ளுவது, ஏதோ தற்செயலாக நடந்து விடுவதல்ல; இந்திய அரசின் அடிப்படையே, ஏகாதிபத்தியங்களுக்கும், தரகு முதலாளிகளுக்கும், மிட்டா மிராசுகளுக்கும் சேவை செய்வதுதான்; மேல் சாதி வெறியர்களின் ஆதிக்கத்தைப் பாதுகாப்பது தான். இந்தச் சார்புத் தன்மை சட்டபூர்வமாகவும், சட்டபூர்வ அடக்குமுறையாலும் (போலீசு, சிறை, இராணுவம்) உத்தரவாதப்படுத்தப் பட்டுள்ளது; தொடர்ந்தும் பாதுகாக்கப்படுகிறது. அரசு ஏதாவது ஒரு விசயத்தில் 'நடுநிலை'யாக நடந்து கொண்டால், அது, இந்த வர்க்க, மேல்சாதி, இந்த மதவெறி சார்பை மூடி மறைத்துக் கொள்வதற்கான உத்திதான். இப்படிப்பட்ட ஒரு சார்பான அரசின் நிரந்தர அங்கமான அதிகார வர்க்கம், நடுநிலையாக நடந்து கொள்ளுவதற்கு வாய்ப்பேயில்லை.



படிப்பகம்

www.padippakam.com



**நாட்டை மீண்டும் காலனியாக்காதே!**
**மரணக் குழியில் மக்களைத் தள்ளாதே!**
**மதவெறியை மாய்க்க மறுகாலனியாக்கத்தை முறியடிக்க**
**மக்கள் சர்வாதிகார மன்றங்களைக் கட்டியமைப்போம்!**
**உதவாக்கரைத் தேர்தல் பாதையை உதறி எறிவோம்!**

# மே-1, 2000
# தருமபுரியில்
# பேரணி - பொதுக்கூட்டம்

*அணி திரள்க! ஆதரவு தருக!*

**இவண்,**
**மக்கள் கலை இலக்கியக் கழகம்,**
**விவசாயிகள் விடுதலை முன்னணி,**
**புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி,**
**தமிழ்நாடு.**

இதையெல்லாம் விடுங்கள்; கட்சி சாராத அதிகார வர்க்கம் எப்படி 'நடுநிலை'யாக நடந்து கொள்ளும் என்று நமக்குச் சொந்த அனுபவமே கிடையாதா? கலெக்டர் அலுவலகத்தில் மனு கொடுக்கும் பொழுதோ, தாசில்தார் ஆபீசில் சாதிச் சான்றிதழ் பெற அலையும் பொழுதோ, இப்படி எந்தவொரு காரியத்திற்காகவும் அரசு அதிகாரிகளைப் பார்க்கப் போனால், அவர் சட்டப் புத்தகத்தைப் பார்க்கறாரா? பொதுமக்களின் சட்டைப் பையைப் பார்க்கிறாரா? கண்மாய் காண்ட்ராக்டையும், ரோடு காண்ட்ராக்டையும் மேலிட நிர்பந்தம் காரணமாக கட்சிக் காரனுக்கோ, கட்சிக்கு வேண்டப்பட்டவனுக்கோ கொடுக்கும் அதிகாரிகள், கட்சிக்காரன் காண்டிராக்டில் அடிக்கும் கொள்ளையில் பங்கு போட்டுக் கொள்வதேயில்லையா?

பொது மக்கள், நியாயத்தின் அடிப்படையில் அரசும், அதிகார வர்க்கமும் பாரபட்சமின்றி, நடுநிலையாக நடந்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். இது ஒருபுறமிருக்க, பொது மக்களுக்கு அரசின் வர்க்க சார்பு பற்றிய புரிதல் இல்லாததால், ''அரசு, எல்லோருக்கும் பொதுவானது'' என்று ஓட்டுக் கட்சிகளாலும் / முதலாளித்துவ அறிஞர்களாலும் பரப்பபட்டு வரும் மோசடிக்கும் பலியாகி விடுகின்றனர். இந்த விசயத்தில் பொதுமக்களை ஏய்ப்பதற்கு ''அனைத்து மக்களுக்குமான வாக்குரிமை'', ''நாடாளுமன்ற ஆட்சிமுறை'' பயன்படுத்தப்படுவது போல, அதிகார வர்க்கத்தை நடுநிலையானதாக, சுதந்திரமானதாகக் காட்டி ஏய்த்து வருகின்றனர்.

ஏற்கனவே அரசின் வர்க்கத் தன்மை காரணமாக அதிகார வர்க்கம் ஒரு சார்பானதாக, தரகு முதலாளிகள், நிலப்பிரபுக்கள், மேல் சாதி மற்றும் இந்து மதவெறியர்களுக்கு ஆதரவாக நடந்து வரும் பொழுது, பல அதிகாரிகளும் மறைமுகமாக ஆளுங்கட்சிக்கு மட்டுமல்ல, எதிர்க்கட்சிகளுக்கும் ஆதரவாக (எம்.ஜி.ஆர். ஆட்சியின் பொழுது பால் கமிஷன் அறிக்கை கருணாநிதியின் கைக்குக் கிடைத்ததையும், இன்னும் பல அதிகாரிகள் ஜெயாவிற்கு ஆதரவாக நடப்பதாக கருணாநிதி புலம்புவதையும் இங்கே நினைவு படுத்திக் கொள்ளுங்கள்) செயல்பட்டு வரும் பொழுது, அரசு அதிகாரிகளும், ஊழியர்களும் அரசியல் இயக்கங்களில் சேர சட்டப்படி அனுமதிக்கப்பட்டால், அரசின் ''நடுநிலை'' தவறிப் போகும் என்று நம்புவதற்கு இடமேயில்லை.

அரசு ஊழியர்கள் தேர்தலின் பொழுது தாங்கள் விரும்பும் கட்சிக்கு வாக்களிக்க அனுமதித்து விட்டு, அவர்கள் அரசியல் கட்சிகளில் சேருவதைத் தடை செய்வது முன்னுக்குப் பின் முரணானது மட்டுமல்ல, குடிமகன் என்ற வகையில் அவர்களின் சனநாயக உரிமையைப் பறிப்பதாகும். ''ஆர்.எஸ்.எஸ். இல் அரசு ஊழியர்கள் சேருவதை அனுமதிக்கக் கூடாது'' என நியாயமாகக் கோரும் இடது / வலது கம்யூனிஸ்டு கட்சிகள் கூட, அரசு ஊழியர்கள் அரசியல் கட்சியில் சேருவதை அனுமதிக்கலாமா என்ற பிரச்சினையைப் பற்றிப் பேசாமல் வாயை மூடிக் கொண்டு விடுகின்றனர். போலி கம்யூனிஸ்டுகளின் இந்த மௌனம், 'அரசு நடுநிலையானது' என்ற மோசடித்தனத்திற்குத் துணை போவதுதான்.

அரசு ஊழியர்களுக்கு அரசியல் இயக்கங்களில் சேர உரிமை வழங்கப்பட வேண்டும் எனும் பொழுது, ஆர்.எஸ்.எஸ். போன்ற இந்து மதவெறி பாசிச அமைப்புகளிலோ, முசுலீம் மதவெறி அமைப்புகளிலோ, மேல்சாதி சங்கங்களிலோ இப்படிபட்ட ஜனநாயக விரோத மக்கள் விரோத அமைப்புகளிலோ அரசு ஊழியர்கள் சேருவதைத் தடை செய்ய வேண்டும் என்றும் நாம் கோருகிறோம்.

''ஆர்.எஸ்.எஸ்.ஐச் சட்டபூர்வமாகத் தடை செய்யக் கூடாது'' என்று கோரும் சில அதீத ஜனநாயகவாதிகளைப் போல, நாம் ஜனநாயகத்தைப் பொத்தாம் பொதுவாக, எவ்விதப் பாகுபாடுமின்றி எல்லா அமைப்புகளுக்கும் வழங்கக் கூடிய கடைச்சரக்காகப் பார்க்கவில்லை. ''ஆர்.எஸ்.எஸ்.ஐயே தடை செய்யக் கூடாது'' எனக் கூறும் இவர்களால், ஆர்.எஸ்.எஸ்.இல் சேர விரும்பும் அரசு ஊழியனின் 'ஜனநாயக' உரிமையை மறுக்க முடியுமா?

ஆர்.எஸ்.எஸ்.இல் அரசு ஊழியர்கள் இணைவதைச் சட்டபூர்வமாக்குவதன் மூலம், பெரும்பாலான இந்திய மக்களால் வெகு காலமாகவே சந்தேகக் கண்ணோடு பார்க்கப்பட்ட, அவர்களால் தீண்டப்படாமல், தனிமைப்பட்டுக் கிடந்த ஆர்.எஸ்.எஸ்.க்கு ஒருவித அரசியல் தகுதியினையும், மதிப்பையும் ஏற்படுத்திக் கொடுக்க இந்துமதவெறியர்கள் முயலுகிறார்கள். மேலும், இது, இந்துமதவெறி பாசிசத்தைச் சட்டபூர்வமாகவே நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சியுமாகும்.

இதை ஜனநாயகம் என்ற பெயரில் அங்கீகரிப்பது, நம் கையாலே நம் கண்ணைக் குத்திக் கொள்ளும் முட்டாள்தனமாகும்; ''தேசப் பற்றுள்ள இயக்கம்'', ''சமூக, கலாச் சார இயக்கம்'' என்ற பெயரில் பா.ஜ.க., இதைக் கொண்டுவர முயலுவது அயோக்கியத்தனமான்து. ஏனென்றால், இந்து மதவெறி அமைப்பான ஆர்.எஸ்.எஸ்.ஐ. சுதந்திரமாக, சட்டபூர்வமாக, ஜனநாயகம் என்ற பெயரில் இயங்க அனுமதித்தால் என்ன நடக்கும் என்பதை இந்திய மக்களுக்குப் புதிதாக எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை.

● செல்வம்


படிப்பகம்

www.padippakam.com



## பட்டினிச் சாவுக்குத் தள்ளப்பட்ட நூற்பாலைத் தொழிலாளர்கள்

பின்னி மில், ஸ்டாண்டர்டு மோட்டார் என அடுத்தடுத்து நடந்த ஆலை மூடல்களால் தற்கொலைக்கும் பட்டினிச் சாவுக்கும் தள்ளப்பட்ட தொழிலாளர் குடும்பங்கள் ஏராளம். அந்த வரிசையில் அரியூர் நூற்பாலை மூடப்பட்டு, பட்டினியால் பரிதவித்த தனபாலன் என்ற தொழிலாளி கடந்த ஜனவரி 8-ஆம் தேதியன்று மாண்டு போயுள்ளார். புத்தாயிரம் ஆண்டு என்று நகர்ப்புற மேட்டுக் குடியினர் கோலாகலமாகக் கொண்டாடிய வேளையில், தனபாலன் குடும்பத்துக்கு மட்டுமின்றி, நூற்றுக்கணக்கான அரியூர் நூற்பாலை தொழிலாளர் குடும்பங்களுக்கு இந்த ஆண்டு துயரத்துடனேயே தொடங்கியுள்ளது. அ.தி.மு.க. ஆட்சியில் நலிவடைந்த ஆலைகள் மீண்டும் சிறப்பாகச் செயல்பட வழிவகுப்போம் என்று தேர்தல் வாக்குறுதி அளித்த தி.மு.க., பதவிக்கு வந்தபின் அரியூர் நூற்பாலையை இழுத்து மூடிவிட்டு, தொழிலாளர்களைப் பட்டினிச் சாவுக்குத் தள்ளியுள்ளது.

வேலூர் மாவட்டத்திலுள்ள அரியூரில் 1965-இல் தமிழக அரசு இந்த நூற்பாலையைத் தொடங்கியது. மாநிலமெங்கும் தொடங்கப்பட்ட 18 நூற்பாலைகளில் இதுவே முதன்மையானதாகும். இங்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றி வந்தனர். பஞ்சை நூலாக நூற்று உள்நாட்டில் விற்பனை செய்ததோடு, வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து நல்ல இலாபத்துடன் இயங்கி வந்த இந்த நூற்பாலை, தொழிலாளர்களுக்கு 32% போனஸ் கொடுக்குமளவுக்கு வளர்ச்சி பெற்றிருந்தது. பின்னர் அரசியல்வாதிகள் - அதிகாரிகளின் ஊழல் - மோசடி பகற்கொள்ளையால் இந்த நூற்பாலை நட்டத்துக்குத் தள்ளப்பட்டது. குறிப்பாக, அ.தி.மு.க. ஆட்சியில் கைத்தறித் துறை அமைச்சராக இருந்த இந்திர குமாரியின் பகற்கொள்ளையால் நட்டம் 19 கோடி ரூபாயாக உயர்ந்து, நூற்பாலையை மூடிவிடும் அபாயம் ஏற்பட்டது.



பட்டினியால் மாண்டு போன தனபாலனின் குடும்பம்
வனரோஜா தன் குழந்தைகளுடன்

அடுத்து ஆட்சிக்கு வந்த தி.மு.க., நலிவடைந்த ஆலைகளைச் சீரமைக்க ராகவன் கமிட்டியை உருவாக்கியது. அக்கமிட்டியோ அரியூர் நூற்பாலையை மூடி, தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்புமாறு பரிந்துரைத்தது. ஆனால் உடனடியாக ஆலையை மூடினால் ஆட்சிக்குக் கெட்ட பெயர் ஏற்படும் என்பதால், ஆலையைச் சீரமைக்கப் போவதாக போக்கு காட்டி வந்த தி.மு.க. அரசு, பின்னர் ஆலையை இழுத்து மூடி தொழிலாளர்களை வீதியில் வீசியெறிந்தது. இதை எதிர்த்துத் தொழிலாளர்கள் பலமுறை போராடி கைதாகிச் சிறையிலடைக்கப் பட்டனர். கடந்த ஜனவரியில் நலத்திட்ட உதவிகள் வழங்க முதல்வர் கருணாநிதி வேலூருக்கு வந்தபோது, பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு ஆதரவாக வேலூர் த.மா.கா. சட்டமன்ற உறுப்பினர் ஞானசேகரன் கருப்புக் கொடி காட்டி கைது செய்யப்பட்டார். ஆனாலும், ஆலையைத் திறக்க தி.மு.க. அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆலை மூடப்பட்டு வேலையிழந்த தொழிலாளர்களுக்கு மாற்று வேலை வாய்ப்பு ஏற்பாடுகளை அரசு செய்யவில்லை. ஓய்வூதியத் தொ[illegible] வழங்கப்படவில்லை. இதனால், வாழ வழியின்றி நூற்றுக் கணக்கான தொழிலாளர் குடும்பங்கள் பட்டினியால் பரிதவித்த நிலையில், பசிக்கொடுமை தாளாமல் சுபதிலிபுரத்தைச் சேர்ந்த தனபாலன் என்ற தொழிலாளி கடந்த ஜனவரியில் மாண்டு போயுள்ளார்.

இன்று தனபால்; நாளை யார்? என்ற வேலை இழந்த அரியூர் நூற்பாலைத் தொழிலாளர்கள் வேதனையில் குமுறிக் கொண்டிருக்கிறார்கள்.

## அன்று ரௌடி! இன்று போலீசுக்காரன்!

போலீசு நிலைய ரௌடிகள் பட்டியலில் இருந்த நபர், அதே போலீசு நிலையத்தில் போலீசுக்காரனாகப் பதவியேற்றுள்ளார். கேரள மாநிலம் கொட்டாரக்கர வட்டத்திலுள்ள ஏழுகோன் போலீசு நிலையத்தில் இந்த அதிசயம் நடந்துள்ளது. இந்தப் போலீசு நிலையத்தின் ரௌடிகள் பட்டியலில் ஐந்தாவது இடத்தில் இருந்த, இடைக்கிடம் என்ற ஊரைச் சேர்ந்த செயப்பிரகாஷ் என்பவர் அதே போலீசு நிலையத்திற்கு போலீசுக்காரனாகியுள்ளார்.

செயப்பிரகாஷ் இப்பகுதியில் அடிதடி, வெட்டு - குத்துக்கு பேர் போன ரௌடி. இந்து வெறியர்களை முறியடிக்க இத்தகையோர் அவசியம் என்று ஆளும் 'மார்க்சிஸ்ட்' கட்சி இந்த ரௌடியை ஆதரவாளராக அரவணைத்துக் கொண்டது. செயப்பிரகாஷ் நடத்திய ரௌடித் தனங்கள் அனைத்தும் இந்து வெறியர்களுக்கு எதிரான போராட்டமாக 'மார்க்சிஸ்டு'களால் சித்தரிக்கப் பட்டன. கடந்த ஆண்டு இடைக்கிடம் நெற்குன்னில் பகவதி கோயில் விழாவில், கோயில் நிர்வாகக் குழு பதவிக்காக இந்து வெறியர்களும் 'மார்க்சிஸ்டு'களும் மோதிக் கொண்டனர். அதில் முக்கிய குற்றவாளியாக செயப்பிரகாஷ் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. இது தவிர, பத்துக்கும் மேற்பட்ட வழக்குகள் இவர் மீது இப்போலீசு நிலையத்தில் ஏற்கனவே பதிவாகியுள்ளன. ஓட்டுக் கட்சிகளுக்கே உரித்தான இச்சிறப்புத் தகுதிகளால் செயப்பிரகாஷ் அப்பகுதி 'மார்க்சிஸ்ட்' கட்சியின் முன்னணியாளராகவும் வளர்ந்து விட்டார்.

ஆளுங்கட்சி ஆதரவில் போலீசுத் துறை பயிற்சி முடித்து, கொல்லத்தில் வேலைக்கு எடுக்கப்பட்ட செயப்பிரகாஷ், கடந்த பிப்ரவரி மாதத்தில் தனது சொந்த ஊரான ஏழுகோன் போலீசு நிலையத்திற்கே போலீசுக்காரனாக வேலைக்கு வந்துள்ளார். பிரபலமான ரௌடி போலீசுக்காரனாக வந்தது எப்படி என்று உள்ளூர் மக்கள் அதிசயித்து, கேலி செய்யத் தொடங்கினர். அவமானப்பட்ட உள்ளூர் போலீசார், உயர் அதிகாரிகளிடம் இதுபற்றி முறையிட்ட பின்னர், போலீசுக்காரன் பட்டியலிலிருந்து ரௌடி செயப்பிரகாஷின் பெயர் இப்போது நீக்கப்பட்டுள்ளது.

## சமத்துவபுரத்தில் சாதிவெறிக் கொடுமை

தென் மாவட்டங்களில் நடந்த சாதிவெறிக் கலவரங்களைத் தொடர்ந்து, அனைத்துச் சாதியினரும் குடியிருக்கும் வகையில்


படிப்பகம்


www.padippakam.com



சமத்துவபுரங்களை உருவாக்கும் திட்டத்தை தி.மு.க. அரசு அறிவித்தது. தமிழகத்தின் சில இடங்களில் இத்தகைய சமத்துவபுரங்களை அமைத்து, சாதி ஒழிப்புக்கும் சமூக நீதிக்கும் பாடுபடுவதாக தி.மு.க. அரசு மார்தட்டிக் கொண்டது. ஆனால், இத்தகைய சமத்துவபுரங்களிலும் சாதி வெறியர்களின் ஆதிக்கமே கோலோச்சுகிறது என்பதற்கு பானை சோற்றைப் பதம் பார்த்தாற் போல, சிவகங்கை மாவட்டம் அரசனூர் அருகிலுள்ள சமத்துவபுரத்தில் தொடரும் சாதியக் கொடுமைகளே சாட்சியாக உள்ளது.

அரசனூரை ஒட்டியுள்ள சமத்துவபுரக் குடியிருப்பில் தாழ்த்தப்பட்ட சாதியினரான ராமு - கன்னியம்மாள் குடும்பத்துக்கும் வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டது. கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் இக்குடியிருப்பிலுள்ள பொதுக் குழாயில் கன்னியம்மாள் தண்ணீர் பிடித்த போது, இதே சமத்துவபுரத்தில் வாழும் மேல் சாதி வெறி பிடித்த முத்தையா என்பவன் கன்னியம்மாளை மிருகத்தனமாகத் தாக்கி விரட்டினான். கன்னியம்மாள் மட்டுமின்றி தாழ்த்தப்பட்ட சாதியினர் எவரும் பொதுக் குழாயில் தண்ணீர் பிடிக்கக் கூடாது என்று அச்சுறுத்தினான். காது கிழிந்து படுகாயமடைந்த கன்னியம்மாள் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று போலீசில் புகார் செய்தார். அதைத் தொடர்ந்து சாதி வெறியன் முத்தையா மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இதனால் ஆத்திரமடைந்த மேல்சாதி வெறியர்கள், கன்னியம்மாளைப் பல வழிகளிலும் அச்சுறுத்திப் புகாரைத் திரும்பப் பெறுமாறு நிர்பந்தித்தனர். ஆனால் கன்னியம்மாள் உறுதியாக நிற்கவே, கன்னியம்மாள் குடும்பத்துடன் யாரும் தொடர்பு கொள்ளக் கூடாது என்று மேல்சாதி வெறியர்கள் ஊர்க்கட்டுப்பாடு விதித்தனர். இதைத் தண்டோரா போட்டு பகிரங்கமாக அறிவித்தனர்.



சாதிவெறிக் கொடுமைக்குச் சாட்சியமாய் நிற்கும் அரசனூர் சமத்துவபுரம்

இக்கொடுஞ்செயலைக் கண்டித்து பல்வேறு சமூக நிறுவனங்கள் மாவட்ட ஆட்சியாளர்களிடம் புகார் செய்த பின்னர், சமத்துவபுரத்திலிருந்து முத்தையா குடும்பத்தை வெளியேற்றுமாறு மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டது.

இதைக் கண்டு மேலும் ஆத்திரமடைந்த அரசனூர் மேல்சாதி வெறியர்கள், கன்னியம்மாளின் கணவரான ராமுவுக்கு ரூ. 1000 அபராதம் விதித்தனர். கூலித் தொழிலாளியான தனக்கு கருணை காட்டுமாறு ராமு பலமுறை கெஞ்சிய போதிலும் சாதி வெறியர்கள் ஏற்கவில்லை. அபராதம் மட்டும் போதாதென்று, கடந்த ஜனவரி 10-ந் தேதியன்று, சமத்துவபுரத்தில் குடியிருக்கும் கன்னியம்மாள் மற்றும் 4 தாழ்த்தப்பட்டோர் குடும்பங்களைச் சமூகப் புறக்கணிப்பு செய்வதாக ஊர்ப் பஞ்சாயத்தில் அறிவித்தனர். இதுதவிர, சமத்துவபுரத்தில் குடியிருக்கும் மேல் சாதியினர் என்னென்ன செய்ய வேண்டும், செய்யக் கூடாது என்கிற கட்டுப்பாடுகளையும் அறிவித்தனர். அரசனூர் கோயில் பூசாரி மூலமாக இந்தக் கட்டுப்பாடுகள் சமத்துவபுர மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன. சமூகப் புறக்கணிப்பு செய்யப்பட்டுள்ள தாழ்த்தப்பட்டோருக்கு மேல் சாதியினர் எவரும் எந்த வகையிலும் வேலையோ, உணவோ, தண்ணீரோ கொடுக்கக் கூடாது என்று எச்சரிக்கப்பட்டுள்ளனர். இக்கொடுமைகள் போதாதென்று, கடந்த ஜனவரி 20-ந் தேதியன்று கூடிய சாதி வெறியர்களின் பஞ்சாயத்துக் கூட்டத்தில், புறம்போக்கு நிலத்தில் கூட தாழ்த்தப்பட்டோர் தமது கால்நடைகளை மேய்ச்சலுக்கு விடக்கூடாது என்று உத்திரவு போட்டுள்ளனர். தாழ்த்தப்பட்டோர் அடுப்பெரிக்க சுள்ளி பொறுக்குவதற்குக் கூட தடை விதிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் இயங்கும் 'மார்க்சிஸ்ட்' கட்சியினர், புதிய வடிவில் தொடரும் இச்சாதிய அடக்குமுறை பற்றி போலீசாரிடம் 13 முறை மனு கொடுத்தும், தமிழக முதல்வருக்கு 4 முறை மின் அஞ்சல் மூலம் தகவல் கொடுத்தும் கூட இன்று வரை சாதி வெறி அட்டூழியத்துக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாவட்ட நிர்வாகமோ விசாரணை நடந்து வருவதாக போக்கு காட்டுகிறது.

## பன்னாட்டு மருந்துக் கம்பெனிகளின் சோதனைக் கூடப் பிராணிகளாக இந்திய ஏழைகள்

வறுமை கொடியது. வறுமையில் தவித்த இந்திய ஏழை மக்கள் தமது சிறுநீரகத்தை விற்ற கொடுமை சில ஆண்டுகளுக்கு முன்பு கேள்வி முறையின்றித் தொடர்ந்த பிறகு, அதற்குத் தடை விதிக்கப்பட்டது. இப்போது, வறுமையில் தத்தளிக்கும் இந்திய மக்கள் தமது உடலைப் பன்னாட்டு மருந்துக் கம்பெனிகளின் சோதனைக் களமாக அனுமதிக்கும் அவலம் வேகமாகப் பரவி வருகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு வரை ஏழை நாட்டு மக்கள் மீது இத்தகைய சோதனைகளை நடத்த, வளர்ச்சியடைந்த மேலை நாடுகள் கட்டுப்பாடுகளை விதித்திருந்தன. ஆனால், 1997-இல் அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய வல்லரசு நாடுகள், உலகின் எந்த நாட்டிலும் எந்த மக்கள் மீதும் இத்தகைய சோதனைகள் நடத்த பொது உடன்பாடு செய்து கொண்டு, ஏழை நாட்டு மக்களை தமது மருத்துவ ஆராய்ச்சிக்குச் சோதனைக் களமாக்க கிளம்பி விட்டன.

இது பன்னாட்டு ஏகபோக மருந்து கம்பெனிகளுக்கு கொள்ளை இலாபம் தரக்கூடிய கொடூரமான நடவடிக்கையாகும். ஏனெனில், ஆராய்ச்சிக் கூடச் சோதனைகளுக்குச் செலவிடுவதை விட, நேரடியாக மனித உடலில் ஆராய்ச்சி - சோதனை செய்து பார்ப்பது பல மடங்கு செலவு குறைவானது. புதிய மருந்துக்கான அங்கீகாரம் மற்றும் காப்புரிமை பெறுவதற்கு முன்னரே இத்தகைய சோதனைகள் நடத்துவதன் மூலம் பன்னாட்டு மருந்துக் கம்பெனிகளுக்குப் பல வகையில் இலாபம். விளைவுகள் பற்றி ஆராய்ச்சிக் கூடச் சோதனைகள், பிறகு மிருகங்களிடம் சோதனைகள் என்று எதுவுமின்றி, நேரடியாக மனிதர்களிடமே சோதனை நடத்துவதால் செலவு குறைவு; மேலும், பெருமளவு செலவு செய்து மருந்து உற்பத்தி செய்த பின், அதன் விபரீத விளைவுகளைக் காரணம் காட்டித் தடை செய்யப்படுவதற்கு முன்பாக, உற்பத்திக்கு முன்னரே மனிதர்களிடம் சோதனைகள் நடத்துவதன் மூலம் உடனடியாகப் பக்க விளைவுகளைக் கண்டறிந்து மருந்து உற்பத்தி செய்வதை நிறுத்திவிட முடியும்; இந்த வகையிலும் இலாபம். எல்லாவற்றையும்விட, ஏழை நாட்டு மக்கள் மலிவானவர்கள்; தற்போது கட்டுப்பாடுகள் - தடைகள் ஏதுமில்லாததால் விரைவாக சோதனைகளை நடத்தி முடித்து, புதிய மருந்துகளை உற்பத்தி செய்து குறுகிய காலத்திலேயே கொள்ளை இலாபமீட்ட முடியும் என்பதால், பல பன்னாட்டு மருந்து

www.padippakam.com



கம்பெனிகள் இந்தியாவைக் குறி வைத்து வெறியோடு கிளம்பியுள்ளன.

அமெரிக்காவின் தேசங்கடந்த தொழிற் கழகங்களான குயின்டைல்ஸ், கோவன்ஸ் முதலானவையும், இந்திய தரகு முதலாளித்துவ நிறுவனங்களான நிக்கோலஸ் பிரமல், மாக்ஸ் இந்தியா முதலானவையும் ஏழை இந்தியர்களைக் கூலிக்கு அமர்த்திக் கொண்டு, அவர்களின் உடலில் கொடூரமான மருத்துவ ஆராய்ச்சிகளை நடத்தி வருகின்றன. இந்த ஏழை மக்களிடம் எந்தவொரு எழுத்துப் பூர்வ ஒப்பந்தமும் செய்யாமல், உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் மருத்துவச்சிகிச்சையும் நிவாரண உதவிக்கான உத்திரவாதமும் இல்லாமல் பகற்கொள்ளையடிக்கும் மருந்து கம்பெனிகள் ஏய்த்து வருகின்றன.

1997 இறுதியில் புற்று நோய் ஆராய்ச்சிக்காக, 1158 ஏழைப் பெண்கள் கூலிக்கு அமர்த்தப்பட்டனர். அவர்கள் உடலில் புற்று நோய்க் கிருமிகள் செலுத்தப்பட்டு, அதைத் தடுக்கும் மருந்துகளை மாற்றி மாற்றிக் கொடுத்து சோதிக்கப்பட்டனர். அவர்களில் 71 பேருக்குப் புற்று நோய் முற்றித் தீவிரமாகிய நிலையில், ஆராய்ச்சியை முடித்துக் கொண்டு அவர்களை விரட்டிவிட்டனர். தங்களுக்குப் புற்று நோய் வந்துள்ளதே தெரியாமல், படிப்பறிவற்ற அப் பெண்கள் வெறும் கூலியுடன் நடைப் பிணமாக வெளியேற்றப் பட்டனர். இதேபோல குடும்பக் கட்டுப்பாட்டுக் கான புதிய புதிய மருந்து, மாத்திரைகள், சாதனங்கள் முதலியன இந்தியா மற்றும் தென்கிழக்காசிய ஏழைப் பெண்கள் மீது வரைமுறையின்றிச் சோதனை செய்யப்பட்டு வருகின்றன.

## நவீன நாஜிகளுக்கு எதிராக ஆஸ்திரிய மக்களின் போர்க்கோலம்

ஜெர்மனியை ஒட்டி அதன் தெற்கே உள்ள சிறிய நாடான ஆஸ்திரியாவில், கடந்த ஜனவரி - பிப்ரவரி மாதங்களில் நவீன நாஜிகளுக்கு எதிராகத் தொடரும் ஆர்ப்பாட்டங்களால் ஐரோப்பா கண்டமே குலுங்குகிறது. நவீன நாஜிக் கட்சியான சுதந்திரக் கட்சி (FPO), கூட்டணி அரசில் அங்கம் வகிப்பதை எதிர்த்து, பல பத்தாயிரக்கணக்கான மக்கள் தலைநகர் வியன்னாவில் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர். ஆஸ்திரிய நாட்டு மக்கள் மட்டுமின்றி, பல்வேறு ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் கலைஞர்கள், அறிவுத்துறையினர், மனித உரிமை இயக்கத்தினர், தொழிற்சங்க வாதிகள், சிறுபான்மை இனத்தவர் எனப் பலரும் இந்த ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்றுள்ளனர். கடந்த பிப்ரவரி 4-ந் தேதியன்று அதிபர் மாளிகை முன்பு நடந்த ஆர்ப்பாட்டத்தைக் கலைக்க போலீசார் தாக்குதல் நடத்திய போதிலும், நவீன நாஜிகளுக்கு எதிரான மக்களின் கொந்தளிப்பை ஒடுக்கு முடியாமல் ஆளும் கூட்டணி அரசு கையைப் பிசைந்து கொண்டு நிற்கிறது.

ஆஸ்திரியாவில் 'இடது சாரி' சமூக ஜனநாயகக் கட்சியும், பழமைவாத - கன்சர்வேடிவ் கட்சியும் கூட்டணி ஆட்சி நடத்தி வந்தன. கடந்த அக்டோபர் இறுதியில் நடந்த பொதுத் தேர்தலில் சமூக ஜனநாயகக் கட்சி செல்வாக்கிழந்து படு தோல்வியடைந்தது. வலது சாரி நவீன நாஜிக் கட்சியான சுதந்திரக் கட்சி, 27% வாக்குகளைப் பெற்று இரண்டாவது பெரிய கட்சியாக உருவெடுத்தது. 183 தொகுதிகளில் 52-ஐ இக்கட்சி கைப்பற்றியது. அதைத் தொடர்ந்து பழமைவாத கன்சர்வேடிவ் கட்சியும் நவீன நாஜிக் கட்சியும் கூட்டணி கட்டிக் கொண்டு புதிய ஆட்சியை அமைத்துள்ளன. நாட்டின் அதிபராக கன்சர்வேடிவ் கட்சியின் ஷூச்செல்லும், துணை அதிபராக சுதந்திரக் கட்சிக்காரரும் பதவி ஏற்றுள்ளனர். அதேபோல் அமைச்சர் பதவிகளும் இரு தரப்பினருக்கும் சமமாகப் பங்கிடப் பட்டுள்ளன.




"இட்லரின் வாரிசுக்கு ஆட்சியதிகாரத்தில் பங்கு தராதே!" - நவீன நாஜிக் கட்சிக்கு எதிராக ஆஸ்திரிய மக்களின் ஆர்ப்பாட்டம்

நவீன நாஜிக் கட்சியான சுதந்திரக் கட்சி ஆட்சியதிகாரத்தில் பங்கேற்பது இதுவே முதன் முறையாகும். ஜோர்க் ஹெய்தர் என்பவரின் தலைமையிலான சுதந்திரக் கட்சி, அப்பட்டமாகவே இட்லரின் நாஜி சித்தாந்தத்தைப் பின்பற்றும் கட்சியாகும். சிறுபான்மை மக்களுக்கு - பால்கன் நாடுகளிலிருந்தும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் வந்து குடியேறிய மக்களுக்கு எதிராக, அவர்களை நாட்டை விட்டு வெறியேற்ற வேண்டும் என வெறியூட்டி வரும் கட்சியாகும். ஆஸ்திரி யாவில் வேலையின்மை தீவிரமாகி வரும் நிலை யில், வேலையற்ற இளைஞர்கள் மத்தியில் இக்கட்சி செல்வாக்குப் பெற்று வருகிறது. சிறுபான்மை யூதர்கள் மற்றும் குடியேறிய மக்கள் மீது அவ்வப்போது இக்கட்சியினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இட்லரின் பாசிச ஆக்கிரமிப்புக்கு முதல் பலியான நாடு ஆஸ்திரியா. இட்லரின் ஆரிய இனவெறி பாசிசக் காட்டாட்சியில் சிறுபான்மையினரான யூதர்கள் கொடூரமாக வதைக்கப்பட்டனர். யூதப் பெண்கள் மண்டியிட்டு தமது கைகளால் தெருவைச் சுத்தம் செய்ய நிர்பந்திக்கப்பட்டனர். அவர்கள் மீது இட்லரின் நாஜிப் படையினர் சிறுநீர் கழித்துப் பாலியல் வன்முறையை ஏவிய கொடுமைகள் நடந்தன. அந்த இருண்ட காலத்தை மீண்டும் புதுப்பிக்கும் வகையில் கிளம்பியுள்ள நவீன நாஜிக் கட்சியான, "ஹெய்தர் தலைமையிலான சுதந்திரக் கட்சியை கூட்டணி ஆட்சியில் சேர்க்காதே! பாசிசம் வேரூன்ற அனுமதிக்காதே!" என்று ஆஸ்திரிய உழைக்கும் மக்களும் ஜனநாயக சக்திகளும் பெரும்

www.padippakam.com



சீற்றத்துடன் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர். ஆஸ்திரியாவில் நவீன நாஜிகளுக்கு எதிரான போராட்டத்தை ஆதரித்தும், மீண்டும் பாசிசம் அதிகாரத்துக்கு வரக்கூடாது என்றும், அன்று இட்லரின் பாசிசத்தை வீழ்த்தியதில் முக்கிய பங்காற்றிய ஐரோப்பிய கண்டத்து நாடுகள் கொதித்தெழுந்துள்ளன. ஜனநாயக சக்திகளின் பொதுக் கருத்து மற்றும் உழைக்கும் மக்களின் போராட்ட நிர்பந்தம் காரணமாக, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அனைத்தும் ஆஸ்திரியாவுடன் அரசு ரீதியான உறவுகள் அனைத்தையும் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளன. இதைத் தொடர்ந்து, சுதந்திரக் கட்சியின் தலைவர் பொறுப்பிலிருந்து பாசிச இனவெறியன் ஹெய்தர் விலகிக் கொண்டு வெறும் ஆலோசகராகச் செயல்படப் போவதாக அறிவித்துள்ளான். ஆஸ்திரிய புதிய கூட்டணி ஆட்சியிலிருந்து சுதந்திரக் கட்சி இன்னமும் நீக்கப்படாத போதிலும், மீண்டும் தலைதூக்க முயலும் பாசிசத்துக்கு எதிராக ஆஸ்திரிய - ஐரோப்பா கண்டத்து ஜனநாயக சக்திகளுக்குக் கிடைத்துள்ள முதல் கட்ட வெற்றியாகும் இது!

ஆஸ்திரியாவில் பாசிச சக்திகள் காலூன்றுவதற்கு எதிராகப் போராட்டம் நடந்து வரும் வேளையில், ஜனநாயக நாடாகச் சித்தரிக்கப்படும் இந்தியாவில் இந்து வெறி பாசிசக் கூட்டணி ஆட்சியதிகாரத்தில் இன்னமும் நீடிப்பது, மதச்சார்பற்ற - ஜனநாயக சக்திகளுக்கு விடப்பட்டுள்ள மிகப்பெரிய சவாலாகும்.

## இஸ்லாமிய ஆட்சியா? இருண்ட ஆட்சியா?



ஆப்கானில் இஸ்லாமிய அடிப்படைவாதிகளான "தாலிபான்" 1996-இல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து, இந்தியாவிலுள்ள சில இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புகள் ஆப்கானில் குரான் வழியிலான பொற்கால ஆட்சி நடப்பதாக பிரச்சாரம் செய்து வருகின்றன. ஆனால் தாலிபானின் ஆட்சி, உலகில் இதுவரை கண்டிராத காட்டுமிராண்டித்தனமான ஆட்சியாக, குறிப்பாக இஸ்லாத்தின் பெயரால் பெண்களை வதைக்கும் கொடூர ஆட்சியாக மாறிவிட்டது. கடந்த ஆகஸ்டு மாதத்தில் ஐ.நா. மன்ற ஆய்வுக் குழு, பெண்கள் மீது மிகப் பரவலாகவும் அதிகாரப் பூர்வமாகவும் கொடுமைகள் ஏவப்படுவதைக் குற்றம் சாட்டியது. மனித உரிமை மீறல், போதை மருந்து கடத்தல், பயங்கரவாதிகளுக்குப் புகலிடம் அளித்தல் முதலான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில், தாலிபான் ஆட்சி மீது ஐ.நா. மன்றம் கடந்த ஆண்டு இறுதியில் வர்த்தகத் தடைகளை விதித்துள்ளது. ஆனாலும், தாங்கள் குரான் வழியில் இஸ்லாமிய ஆட்சி நடத்துவதாகக் கூறிக் கொண்டு பெண்கள் மீது கேள்வி முறையின்றி தாலிபான் ஆயுதக் குண்டர்கள் அடக்குமுறையை ஏவி வருகின்றனர்.

ஆப்கானில் தாலிபான் விதித்துள்ள ஒழுக்க விதி கட்டளைப்படி பெண்கள் நடக்கிறார்களா என்பதைக் கண்காணிக்க தலைநகர் காபூல் வீதிகளில் போலீசு ரோந்து சுற்றுகிறது. உடல் முழுவதும் மறைத்து, கண்கள் உள்ள இடத்தில் மட்டும் ஜன்னல் போன்ற திறப்பு உள்ள வகையில் பர்தா அணியாதவர்கள் மட்டுமின்றி, பர்தா சற்றே விலகி கணுக்கால் தெரிந்தால்கூட ஒழுக்க விதிகளை மீறவிட்டதாகக் குற்றம் சாட்டிப் பெண்களைப் பொது இடத்திலேயே போலீசார் வதைக்கின்றனர். பெண்கள் தெருவில் நடமாடும் போது கூட ஆண் உறவினர்களுடன்தான் செல்ல வேண்டும். தனியாகச் சென்றாலோ, குழுவாகப் பெண்கள் சென்றாலோ அது விபச்சாரத்தனம் என்று குற்றம் சாட்டப்பட்டு சவுக்கால் அடிக்கப்படுகின்றனர்.

இரண்டு தலைமுறையாகத் தொடரும் உள்நாட்டுப் போரினால் காபூல் நகரில் மட்டும் ஏறத்தாழ 40,000 பெண்கள் விதவைகளாக உள்ளனர். அவர்களில் பெரும்பாலோர் பிழைக்க வழியின்றிப் பிச்சை எடுக்கின்றனர். தாலிபானின் ஆடை ஒழுக்க விதிகள் அவர்களுக்குப் பொருந்தாது. கிழிந்த ஆடைகளுடன் அலையும் அவர்கள் கட்டாய விபச்சாரத்துக்குத் தள்ளப்படுகின்றனர். காபூல் நகரில் தாலிபான் ஆயுத குண்டர்கள் பல விபச்சார விடுதிகளை நடத்தி வருகின்றனர்.

போல்-இ-சார்கி எனும் காபூல் அருகிலுள்ள பெண்களுக்கான சிறையில் 116 அறைகள் உள்ளன. ஒவ்வொரு சிறிய அறையிலும் 40-50 பெண்கள் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பெரும்பாலோர் தாஜிக் இனத்தவர்கள். தாஜிக் இனத்தினர் தாலிபான் ஆட்சியை எதிர்ப்பதால், எவ்விதக் குற்றச்சாட்டுமின்றி தாஜிக் இனப் பெண்கள் சிறையிலடைக்கப்பட்டுக் கொடூரமாக வதைக்கப் படுகின்றனர். கேள்வி முறையின்றிப் பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆளாகின்றனர். சத்துணவின்றியும் மருத்துவ உதவிகள் இன்றியும் வாரத்திற்கு 3, 4 பேர் வீதம் அவர்கள் மாண்டு போகிறார்கள். சிறையிலுள்ள பெண்களுக்கு 80 கிராம் அளவுக்கு அரிசிக் கஞ்சி மட்டுமே தரப்படுகிறது. ஐ.நா. மன்றம் மூலம் கிடைக்கும் நிவாரண உதவிப் பொருட்களை செஞ்சிலுவைச் சங்க ஊழல் பெருச்சாளிகளும் தாலிபான் ஆயுதக் குண்டர்களும் சூறையாடுகின்றனர்.

ஆப்கானிலிருந்து அகதிகளாக வந்து பாக். எல்லையில் வறுமையில் தவிக்கும் பெண்கள், மகளிர் புரட்சிகரக் கழகம் (RAWA) எனும் அமைப்பைத் தொடங்கியுள்ளனர். தாலிபான் அடிமைத்தனத்தின் அடையாளச் சின்னமாக விளங்கும் பர்தா ஆடையை எதிர்த்தும், இளங்குழந்தைகளை மத அடிப்படைவாத முறையில் பயிற்றுவிக்கும் கல்வி முறையை எதிர்த்தும், ரஷ்யாவில் படித்து மருத்துவப் பணியாற்றுவோரை நீக்கிவிட்டு, இஸ்லாமிய அடிப்படைவாத முறையில் மருத்துவம் செய்வோரை மட்டும் மருத்துவமனைகளில் நியமித்து வருவதை எதிர்த்தும், பெண்கள் மீதான தாலிபான் ஆட்சியின் அக்கிரமங்களுக்கு எதிராகவும் போராடி வருகின்றனர்.

இஸ்லாமிய மார்க்கம்தான் பெண்களுக்கு உண்மையான பாதுகாப்பும் சுதந்திரமும் அளிக்கக் கூடியது என்று இந்திய முஸ்லிம் அடிப்படை வாதிகள் பிரச்சாரம் செய்து வரும் வேளையில், இம்மோசடித்தனத்தை ஆப்கானின் இஸ்லாமிய ஆட்சியில் பெண்கள் மீது தொடரும் அடக்குமுறைகளே அம்பலப்படுத்திக் காட்டுகின்றன.

www.padippakam.com

# இறக்குமதி கட்டுப்பாடு நீக்கம்

# விவசாயிகளின் கழுத்துக்குச் சுருக்கு

கடந்த டிசம்பர் மாத இறுதியில், ஏகாதிபத்திய வல்லரசுகளின் ஆதிக்கக் கருவியான உலக வர்த்தகக் கழகத்தின் (WTO) நிர்பந்தப்படி, இந்திய அரசு பேச்சுவார்த்தை நடத்தி அதனுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இதன்படி வரும் ஏப்ரல் மாதத்திலிருந்து 1,429 பொருட்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகள் அனைத்தும் நீக்கப்படும். நடப்பு ஆண்டில் 715 பொருட்களும் அடுத்த ஆண்டில் 714 பொருட்களும் ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து தாராளமாக இறக்குமதி செய்யப்படும். இந்திய வர்த்தகத் துறை சிறப்புச் செயலாளர் என்.என்.கன்னாவும் உலக வர்த்தகக் கழகத்தின் சூசன் எஸ்ஸர்மனும் கடந்த டிசம்பர் 28 - ந்தேதி இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு உடனடியாகச் செயல்படுத்துமாறு இந்திய அரசுக்கு உத்தரவிட்டுள்ளனர். ஆனால், இந்துவெறி ஆட்சியாளர்களோ இத்துரோக ஒப்பந்தம் பற்றி வாயே திறக்காமல், திட்டமிட்டே மூடி மறைத்தனர். பின்னர், உலக வர்த்தகக் கழகத்தின் செய்திக் குறிப்பு ஒன்று, அமெரிக்கப் பத்திரிகைகளில் மெதுவாகக் கசிந்து இப்போதுதான் முழுவிபரமும் தெரிய வந்துள்ளது.

இந்திய நாட்டின் - மக்களின் தொழில், வர்த்தகம், விவசாயம், நெசவு, கைத்தொழில், பொருளாதாரம் அனைத்தையும் சிதைத்து நாசமாக்கும் இத்தாக்குதல் பற்றி நாட்டு மக்களுக்கே தெரியாமல், நாடாளுமன்றத்தில் பெயரளவுக்கான விவாதம் கூட நடத்தாமல் இரகசியமான முறையில் இந்துவெறி ஆட்சியாளர்கள் இச்சதியை நடத்தியுள்ளனர். உலக வர்த்தகக் கழகம் நிர்பந்தித்த போதிலும், ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் 2003 - ஆம் ஆண்டிலிருந்து இறக்குமதி கட்டுப்பாட்டுகளை இந்தியா நீக்கலாம் என்று ஒப்புக் கொண்டிருந்தன. ஆனால், அமெரிக்காவின் அச்சுறுத்தலுக்குப் பணிந்து, தனது விசுவாசத்தை நிரூபித்துக் காட்டும் வகையில், அதுவும் அமெரிக்க அதிபர் கிளிண்டன் இந்தியாவுக்கு வருகை தருவதற்கு முன்பாக அவசர அவசரமாக இந்த முடிவை பா.ஜ.க.கூட்டணி அரசு அறிவித்துள்ளது.

இந்தப் புதிய தாராளமய ஒப்பந்தப்படி, எந்தப் பொருளும் விட்டு வைக்கப்படவில்லை. அரிசி, கோதுமை, கேழ்வரகு முதலான உணவு தானியங்கள்; எலும்பு இல்லாத கறி வறுவல், வறுத்த மீன், முட்டை வகைகள்; பால், பாலாடைக்கட்டி, வெண்ணெய், நெய், குழந்தைகளுக்கான பால்பவுடர்; செம்பு - சில்வர் பாத்திரங்கள், கரண்டிகள், சமையல் குக்கர், எரிவாயு அடுப்பு; விளையாட்டுச் சாமான்கள், பொம்மை துப்பாக்கிகள்; ஆயத்த ஆடைகள், உள்ளாடைகள், படுக்கை விரிப்புகள்; பேனா, மை, எழுது பொருட்கள், நோட்டுப் புத்தகங்கள்; மிதியடி, துடப்பங்கள்; மாங்காய் ஊறுகாய், தக்காளி சட்னி, உருளைக் கிழங்கு வறுவல், பிஸ்கெட், சாக்லெட், ஐஸ் கிரீம் வகைகள் - என அனைத்துப் பொருட்களுக்கும் இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு விட்டன. அவ்வளவு ஏன், இந்தியாவின் பாரம்பரியமான உப்புத் தொழிலுக்குக் கூட அபாயம் ஏற்பட்டுள்ளது. ஏனெனில், இனி மேலை நாடுகளிலிருந்து பளபளப்பான பைகளில் உப்பு வந்து இறங்கப் போகிறது. குறிப்பாக, ஜவுளித் துறையில் மட்டும் 400-க்கும் மேற்பட்ட பொருட்களுக்குக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளதால், நெசவுத் தொழிலே முடமாக்கப்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

"அதனாலென்ன? இந்திய மக்கள் உலகத் தரம் வாய்ந்த பொருட்களை வாங்கி அனுபவிப்பதில் என்ன தவறு இருக்கிறது? அதுவும் மலிவான விலையில் அவை கிடைப்பதால், இந்திய மக்களுக்கு நல்லதுதானே! இதன் மூலம் அந்நியப் பொருட்களுக்கு இணையாக தரமான பொருட்களைத் தயாரிக்கப் போட்டியும் நிர்பந்தமும் ஏற்படும். அதன் விளைவாக, புதிய தொழில் நுட்பத்துடன் இந்திய விவசாயமும் ஆலைத் தொழிலும் நாலுகால் பாய்ச்சலில் முன்னேறும்" என்று முதலாளித்துவப் பொருளாதாரவாதிகள் இந்தத் துரோகத் தனத்தை நியாயப்படுத்தக் கிளம்பியுள்ளார்கள்.

இந்தியா ஓர் ஏழை நாடு. இந்திய உற்பத்திப் பொருட்கள் பெரு மளவு மனித உழைப்புச் சக்தியைக் கொண்டு தயாரிக்கப்படுபவை. ஆனால், ஏகாதிபத்திய வல்லரசு நாடுகளின் உற்பத்திப் பொருட்களோ குறைவான மனித உழைப்புச் சக்தியைக் கொண்டு

**ஓரிரு மாடுகளைக் கொண்டு பால் உற்பத்தியில் ஈடுபட்டுவரும் குஜராத் விவசாயத் தாய்மார்கள்: நாளை இவர்களது வாழ்வு என்னவாகும்?**



தானியங்கி எந்திரங்களைக் கொண்டு பெருமளவில் குவிக்கப்படுபவை. அதன் காரணமாக காலப் போக்கில் உற்பத்திச் செலவு குறைந்து ஒப்பீட்டளவில் விலை மலிவாக உள்ளன.

மேலும், ஏகாதிபத்திய நாடுகளில் விவசாயம் மற்றும் பால் உற்பத்திக்கும் ஏற்றுமதிக்கும் பெருமளவு மானியங்கள் வழங்கப்படுகின்றன. இதன் காரணமாக அமெரிக்காவில் ஒரு கிலோ பால் பவுடரின் விலை ஏறத்தாழ ரூ. 30 ஆக உள்ளது. இந்தியாவிலோ பால் உற்பத்திக்கு அரசாங்கம் மானியம் எதுவும் தருவதில்லை. சிறு விவசாயிகள் கூட்டுறவு சங்கங்களில் "மாட்டு லோன்" வாங்கவே படாதபாடுபட வேண்டியிருக்கிறது. விவசாயத்திற்கு அரசாங்கம் தரும் மானியம் அற்பமானது. அதுவும் ஆண்டு தோறும் வரவு - செலவு திட்டத்தில் (பட்ஜெட்) குறைக்கப் பட்டு வருகிறது.

இந்திய விவசாயிகள் மாடு வளர்ப்பது அவர்களின் வாழ்க்கைக்கான ஆதாரம். இந்தியாவில் ஆண்டுக்கு 7500 கோடி டன் அளவுக்கு பால் உற்பத்தியாகிறது. எட்டு கோடி விவசாயப் பெண்கள் ஓரிரு மாடுகளை வைத்து பால் உற்பத்தியில் ஈடுபட்டு தமது குடும்பத்தை நடத்தி வருகின்றனர். இதே அளவுக்கான பால் உற்பத்தியை ஏகாதிபத்திய நாடுகள் பெரும் பால் பண்ணைகள் மூலம் ஒரு லட்சம் பேரைக் கொண்டுதான் செய்கின்றன. இதன் காரணமாகவும், பெருமளவு மானியம் கிடைப்பதாலும் அந்நாடுகளின் பால் இந்தியாவை விட மலிவானதாக உள்ளது.


இந்நிலையில் ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து கட்டுப்பாடு ஏதுமின்றி பால் இறக்குமதியானால் இந்தியச் சிறு விவசாயிகளால் அதனுடன் போட்டி போட்டுக் கொண்டு மலிவு விலையில் பாலை விற்பனை செய்ய இயலாது. மாடு வளர்ப்பதும், பால் உற்பத்தியில் ஈடுபடுவதும் யானையைக் கட்டி தீனி போடும் கதையாகிவிடும். விவசாயிகள் படிப்படியாக மாடுகளை விற்று விடுவார்கள்; பால் உற்பத்தியிலும் ஈடுபட முன்வர மாட்டார்கள். இதன் விளைவாக பால் விலை தாறுமாறாக உயரத் தொடங்கும். அதற்கேற்ப ஏகாதிபத்திய நாடுகளும் பால் விலையை உயர்த்தும். இந்தியாவில் சுயசார்புடன் பால் உற்பத்தியே இல்லாத நிலையில், மேலை நாட்டுப் பாலை வாங்குவதைத் தவிர வேறு வழியில்லாமல் போய்விடும். பாலைக் கொண்டு ஏகாதிபத்திய வல்லரசுகள் இந்திய நாட்டையும் மக்களையும் அடிமைப் படுத்திக் கொள்ளையடித்துச் செல்லும்.

அண்டை நாடான இலங்கையில் இத்தகைய வழிமுறைகளின் மூலம் "நெஸ்லே" எனும் பன்னாட்டு ஏகபோக பால் பொருள் நிறுவனம் நீண்ட காலமாக ஆதிக்கம் செலுத்தி வருகிறது. சந்திரிகா அதிபரானதும் இந்த நிலையை மாற்றியமைத்து பால் உற்பத்தியில் இலங்கையைச் சுயசார்பான நாடாக்க விரும்பினார். பால்வளக் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்குவது; விவசாயிகளுக்கு மாடு வளர்க்கக் கடன் தருவது; கூட்டுறவு சங்கங்களே பாலைக் கொள்முதல் செய்வது என்ற திட்டத்தை இந்தியாவின் தேசியப் பால்வள மேம்பாட்டுக் கழகத்தின் உதவியுடன் செயல்படுத்த விழைந்தார். ஆனால், ஏகாதிபத்தியங்களின் அச்சுறுத்தல், நிர்பந்தங்கள் காரணமாக இத்திட்டம் முளைவிடுவதற்கு முன்பாகவே முடக்கப்பட்டது. இலங்கையில் "நெஸ்லே"யின் ஆதிக்கம் கேள்வி முறையின்றித் தொடர்கிறது.

பாலைக் கொண்டே பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள் இவ்வளவு ஆதிக்கம் செலுத்தும் போது, அரிசி, பருப்பிலிருந்து துடப்பம் - தகர டப்பா வரைக் கட்டுப்பாடின்றி இறக்குமதி செய்யப்பட்டால், இந்தியாவின் கதி என்னவாகும் என்று சொல்லத் தேவையில்லை. விவசாயம், நெசவு, கைத்தொழில், பால், மீன் பிடிப்பு முதலானவற்றில் ஈடுபட்டுள்ள கோடானு கோடி விவசாயிகள், தொழிலாளர்களின் வாழ்வைப் பறித்து நாட்டை மீண்டும் காலனியாக்கி, மக்களை மரணப் படுகுழியில் தள்ளும் சதிகாரச் செயல்தான் இது.

இதன் விளைவாக விவசாயிகளும், நெசவாளர்களும், கைத்தொழில் புரிவோரும் பிழைக்க வழியின்றி, கிராமங்களை விட்டு நகர்ப்புற சேரிகளுக்குப் படையெடுப்பதும் நாடோடிகளாக அலையும் அவலமும் தீவிரமாகும். வறுமையும் ஏழ்மையும் பற்றிப் பரவும்.

வலுவான பொருளாதார அடித்தளம் கொண்ட நாடாகச் சித்தரிக்கப்படும் போலி சோசலிச நாடான சீனாவில், இத்தகைய தனியார்மய - தாராளமய நடவடிக்கைகளினால் கோடிக் கணக்கான விவசாயிகள் வாழ்வை இழந்து, அகதிகளைப் போல நகரங்களில் நாளும் குவிகிறார்கள். தலைநகர் பெய்ஜிங்கிலும் ஷாங்காய், காண்டன் முதலான பெரு நகரங்களிலும் அன்றாடம் தொடர்வண்டி நிலையங்களில் ஆயிரக்கணக்கான வாழ்விழந்த விவசாயிகள் கிராமங்களிலிருந்து வெளியேறி வந்து குவியும் அவலத்தை முதலாளித்துவப் பத்திரிகைகளே வேதனையுடன் படம் பிடித்துக் காட்டுகின்றன. ஏழை நாடான இந்தியாவில் இன்னும் சில ஆண்டுகளில் இத்தகைய அவலம் சர்வ சாதாரணமாகத் தொடரும். அதற்கான ஏற்பாட்டை ஆளும் இந்து வெறியர்கள் தொடங்கி வைத்து விட்டார்கள்.




விவசாயம், பால், கைத்தொழில் அனைத்தையும் நாசமாக்கி, பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களின் வேட்டைக்கும், கொள்ளைக்கும் ஆதிக்கத்துக்கும் தாராளமாக அனுமதிக்கும் இக்கேடு கெட்ட கொள்கையை விவசாயிகளும் உழைக்கும் மக்களும் இனியும் அனுமதிக்கலாமா? விவசாய நாடான இந்தியாவை உணவுக்காக ஏகாதிபத்தியங்களிடம் கையேந்த வைக்கும் சதிச்செயலை, நாட்டை மீண்டும் காலனியாக்கும் துரோகத்தனத்தை இனியும் சகித்துக் கொள்ளத்தான் முடியுமா? இந்திய விவசாயிகளும் உழைக்கும் மக்களும் தனியார்மயம் - தாராளமயத்துக்கு எதிரான தமது வீரஞ்செறிந்த போராட்டங்கள் மூலம் இவற்றுக்குப் பதில் சொல்ல வேண்டியதே இன்றைய உடனடித் தேவையாகும்.

● குமார்

www.padippakam.com

# பொதுத்துறை நிறுவனங்கள் விற்பனை

# அடிமடியையே அறுக்கிறார்கள்

கடன் வாங்கியே காலத்தை ஓட்டுபவனை அல்லது கையில் இருக்கும் சொத்துக்களை விற்றுக் குடும்பத்தை நடத்துபவனை யாரும் மனிதனாக மதிக்க மாட்டார்கள். இந்திய அரசோ, தனது காலட்சேபத்திற்கு இந்த இரண்டையும் தான் மலைபோல் நம்பியுள்ளது.

தாராளமயமாக்கலுக்கு முன்பு இந்திய அரசு, தனது 'பட்ஜெட்டில்' விழும் பற்றாக்குறையைக் கடன் வாங்கிச் சமாளித்தது. அதன் பின்பு பற்றாக் குறையைச் சமாளிக்க கடன் வாங்குவதோடு, அரசின் சொத்தான பொதுத்துறை நிறுவனங்களை விற்றும் வருகிறது.

பற்றாக்குறையை இப்படித்தான் சமாளிக்க வேண்டுமா? என்ற கேள்வி ஒருபுறமிருக்கட்டும்; பொதுத்துறை நிறுவனங்களை விற்பதன் நோக்கம், பற்றாக்குறையைச் சமாளிப்பது மட்டும் தானா என்றால், அதுவும் கிடையாது. அரசு நிறுவனங்களைத் தனியார்மயமாக்க வேண்டும் என்ற உலக வங்கியின் உத்தரவையும் இதன் மூலம் நிறைவேற்றி வருகிறது, மைய அரசு. ஒரே கல்லில் இரண்டு மாங்காய்!

பொதுத்துறை நிறுவனங்களை விற்று அரசுக்குக் கிடைத்து வரும் சுண்டைக்காய் பணத்தில் நிதிப் பற்றாக்குறையைச் சமாளித்து விட முடியாது என்ற போதும், பொதுத்துறை நிறுவனங்களைத் தனியாருக்குத் தாரை வார்ப்பதை பொதுமக்கள் மத்தியில் நியாயப்படுத்துவதற்காகவே, ''பற்றாக் குறை'' காரணமாகக் கூறப்படுகிறது.

மேலும், இப்படி பொதுத்துறை நிறுவனங்களை விற்றுக் கிடைக்கும் பணத்தைக் கொண்டு கல்வி, மருத்துவம் போன்ற சமூக நலத் திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்ய முடியும் என்றும் அரசு கூறி வருகிறது. இனி, தொழில்களை முதலாளிகள் கவனித்துக் கொள்வார்கள்; அரசு, மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் அக்கறை காட்டும் என்பது அவர்களின் வாதம்.

பொதுத்துறை நிறுவனங்களைத் தனியாருக்கு விற்பது நரசிம்ம ராவ் ஆட்சியில் தொடங்கப்பட்ட பொழுது, ''எல்லாப் பங்குகளையும் விற்க மாட்டோம்; நிர்வாகம் அரசின் கையில்தான் இருக்கும்'' என்றெல்லாம் சப்பைக் கட்டினார்கள். ஆனால், ''சுதேசி'' பா.ஜ.க.விற்கு இந்தப் பசப்பல்களெல்லாம் தேவையாய் இருக்கவில்லை.

இலாபத்தில் இயங்கி வரும் ''மாடர்ன் ஃபுட்ஸ்'' நிறுவனத்தைத் தனியாருக்கு விற்ற பொழுது, பொதுத் துறை நிறுவனங்களைத் தனியாருக்குத் தாரை வார்ப்பதற்காகவே பா.ஜ.க. அரசால் உருவாக்கப்பட்டுள்ள துறையின் அமைச்சர் அருண் ஜெய்ட்லி, மிகவும் வெளிப்படையாகவே, ''ரொட்டி சுடுவது அரசாங்கத்தின் வேலையில்லை'' என்றார்.

இந்த ஆண்டில் மட்டும் 10,000 கோடி ரூபாய் வருமானம் வருமளவிற்குப் பொதுத்துறை நிறுவனங்களை விற்கத் திட்டமிட்டுள்ள பா.ஜ.க. கூட்டணி அரசு, ''மாடர்ன் ஃபுட்ஸ்'' நிறுவனத்தை விற்ற கையோடு, ''இந்தியன் ஏர்லைன்ஸ்'' நிறுவனத்தையும் தனியாருக்கு விற்றுவிட முன் வந்துள்ளது. இந்த நிறுவனத்தை டாட்டாவுக்கு விற்பதா? மல்லையாவுக்கு விற்பதா? என்ற இரகசிய பேரம் நடந்து வருகிறது. மற்றொரு இலாபகரமான நிறுவனமான ''இந்துஸ்தான் டெலி பிரிண்டர்''ஐத் தனியாருக்கு விற்கும் முடிவு, அந்நிறுவனத் தொழிலாளர்கள் நடத்தி வரும் போராட்டங்களால் ஒத்தி வைக்கப் பட்டுள்ளது. இந்திய இரும்பு ஆணையத் தின் கீழுள்ள சேலம் உருக்காலை உள்ளிட்ட எட்டு நிறுவனங்களையும், தேசிய உரக்கழகத்தின் கீழுள்ள உரத் தொழிற்சாலை களையும் தனியாருக்கு விற்றுவிட மைய அமைச்சரவை கூடி முடிவெடுத்துள்ளது.

***

டான்சி நிலபேர ஊழல் வழக்கில், அந்த நிலத்தைக் குறைந்த விலைக்கு விற்று அரசுக்கு நட்டமேற்படுத்தினார் என்பது ஜெயா மீது உள்ள குற்றச்சாட்டுகளில் ஒன்று. அதன்படி பார்த்தால், ஒவ்வொரு பொதுத் துறை நிறுவன விற்பனையும், டான்சி ஊழல் வழக்கு போன்றதுதான்!

உதாரணத்திற்கு ''மாடர்ன் ஃபுட்ஸ்'' நிறுவனத்தை, ''இந்துஸ்தான் லீவர்'' என்ற பன்னாட்டு நிறுவனத்திற்கு விற்றதை எடுத்துக் கொள்வோம். இந்தியாவிலேயே ரொட்டி (பிரட்) உற்பத்தியில் முதலிடம் வகிப்பது மாடர்ன்ஃபுட்ஸ் நிறுவனம் தான். மில்கா, ராமலிங்கா, ஸ்பென்சர்ஸ் போன்ற பெரும் தனியார் நிறுவனங்கள், உள்ளூர் அளவில் இயங்கி வரும் சிறு ''பேக்கரி'' நிறுவனங்கள் — இவர்களோடு போட்டியிட்டு வளர்ந்துள்ள ''மாடர்ன் ஃபுட்ஸ்'', ரொட்டி விற்பனையில் இந்திய அளவில் 40 சதவீதச் சந்தையைத் தன் கையில் வைத்துள் ளது. அதனின் 1997-98 ஆம் ஆண்டு விற்பனை 167 கோடி ரூபாய்; அந்த ஆண்டு, அந்நிறுவனம் அடைந்த இலாபம் 9 கோடி ரூபாய்.

14 நவீன பேக்கரி தொழிற்சாலைகளையும், ஏழு துணை நிறுவனங்களையும் ''மாடர்ன் ஃபுட்ஸ்'' நிறுவனம் நேரடியாக நடத்தி வருகிறது. இவை தவிர, ''மாடர்ன் பிரெட்'' தயாரித்து வழங்கும் உரிமத்தை இருபது நிறுவனங்களுக்கு (Franchise units) வழங்கியுள்ளது. தனது உற்பத்தியை அதிகரிப்பதற்காக, அடுத்த இரண்டு ஆண்டுகளில் மேலும் 17 தொழிற்சாலைகளைத் திறக்கவும் அந்நிறுவனம் திட்டமிட்டிருந்தது. தில்லி, மும்பாய், கான்பூர், சென்னை - இந்நகரங்களில் உள்ள ''மாடர்ன் ஃபுட்ஸ்'' நிறுவனத்தின் தொழிற்சாலைக்குச் சொந்தமான



''மாடர்ன் ஃபுட்ஸ்'' நிறுவனத்தைத் தனியார்மயமாக்கியதன் மூலம், பொது மக்களுக்குக் குறைந்த விலையில் ரொட்டி கிடைத்து வந்ததற்கு வேட்டு வைத்து விட்டது, பா.ஜ.க. கூட்டணி அரசு. இனி, ரொட்டி தயாரிக்கும் தனியார் நிறுவனங்களின் காட்டில் மழை தான்!


படிப்பகம்

www.padippakam.com

நிலத்தின் மதிப்பு மட்டும் 550 கோடி ரூபாய். அந்நிறுவனத்தின் மொத்த சொத்து மதிப்பு 2,100 கோடி ரூபாய்.

இப்படி, உற்பத்திக்குத் தேவையான நவீன தொழிற்சாலைகளைச் சொந்தமாகக் கொண்ட, விற்பனை வலைப் பின்னலைக் கொண்ட, இரண்டாயிரம் கோடி ரூபாய்க்கு மேல் சொத்து மதிப்பு கொண்ட, உற்பத்தியிலும், விற்பனையிலும், தரத்திலும், வியாபாரப் பெயரிலும் (Brand name) இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கும் மாடர்ன் ஃபுட்ஸ் நிறுவனத்தின் 76 சதவீதப் பங்குகள் வெறும் 104 கோடி ரூபாய்க்கு, அதன் ஓராண்டு விற்பனையை விட மிகவும் குறைவாக, இந்துஸ்தான் லீவர் நிறுவனத்திற்கு விற்கப்பட்டுள்ளது. வெறும் வியாபார நோக்கில் பார்த்தால் கூட, இந்த விற்பனையை மோசடி என்றுதான் கூறமுடியும்.

இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தை எடுத்துக் கொண்டால், அதற்குச் சொந்தமான விமானங்களின் மதிப்பே பல்லாயிரம் கோடி ரூபாய் பெறும். இது தவிர, அந்நிறுவனத்திற்குச் சொந்தமான உள்கட்டுமான வசதிகளின் (விமான நிலையங்கள், அலுவலகங்கள், நவீன தகவல் தொடர்புச் சாதனங்கள், விமானம் பழுது பார்க்கும் நிலையங்கள் போன்றவை) மதிப்பு மட்டும் 10,000 கோடி ரூபாய். இந்நிறுவனத்தின 26 சதவீதப் பங்குகளை வாங்கும் தனியார் முதலாளிகள், இந்நிறுவனத்தையே கட்டுப்படுத்தலாம் என அறிவித்துள்ளது, பா.ஜ.க. கூட்டணி அரசு.

இப்படி கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்த கதையாக, பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார் முதலாளிகளுக்கும், பன்னாட்டு நிறுவனங்களுக்கும் வாரிக் கொடுக்கிறார்களே, இவையெல்லாம் யாருடைய சொத்து? இந்து மதவெறியர்கள் கைபர் - போலன் கணவாய் வழியாகக் கொண்டு வந்ததா? ஊருக்கு ஒதுக்குப்புறமாக உள்ள புறம் போக்கு நிலத்தில் குடிசை போட்டுக் கொள்ளும் ஏழைத் தொழிலாளர் குடும்பங்களை போலீசை விட்டுத் துரத்தியடிக்கும் ஆளும் கும்பல், அரசு நிறுவனங்களை கமுக்கமாகத் தனியார் முதலாளிகளுக்குத் தூக்கிக் கொடுப்பது என்ன வகை நியாயம்?

***

''மாடர்ன் ஃபுட்ஸ்''ஐ விலைக்கு வாங்கியுள்ள லீவர் நிறுவனம், இன்னும் ஒரு வருடம் கழித்து 1300 தொழிலாளர்களை வேலையில் இருந்து நீக்கிவிடுவோம் எனக் கூறிவிட்டது. இந்திய இரும்பு ஆணையத்தின் கீழுள்ள தொழிற்சாலைகளைத் தனியாரிடம் விற்பதற்கு வசதியாக, அத்தொழிற்சாலைகளில் வேலை பார்த்து வரும் தொழிலாளர்களின் எண்ணிக்கையை 1,60,000-லிருந்து 1,00,000 ஆகக் குறைத்துவிடப் போவதாக மைய அரசு அறிவித்துள்ளது. இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனத் தொழிலாளர்களின் தலைக்கு மேலேயும் கத்தி தொங்க ஆரம்பித்து விட்டது. இதனால், அந்தத் தொழிலாளர்கள், தங்களின் வேலையைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில், தங்கள் நிறுவனங்களைத் தனியார்மயமாக்குவதைத் தனித்தனியாக எதிர்த்து வருகிறார்கள். அதே சமயம், நகர்ப்புற நடுத்தர வர்க்கமோ, ''தரமான பொருள் கிடைக்கும்; வேலை ஒழுங்காக நடக்கும்'' என நியாயப்படுத்தி, பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார்மயமாக்குவதை வரவேற்கும் மனோநிலைக்குச் சென்று விட்டது.



**பொதுத்துறை நிறுவனங்களை விற்றுக் கிடைக்கும் 'சுண்டைக் காய்' பணத்தில், அரசின் பற்றாக்குறையை ஈடுகட்ட முடியாது. இதன் விளைவு, பெரும்பாலான பொதுத்துறை நிறுவனங்கள் தனியார் கைக்குப் போய்விடும். அரசுக்கோ பற்றாக்குறை பட்ஜெட் மட்டுமே மிஞ்சும்!**

காஞ்சிபுரம் மாவட்டத்தில், அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனமான பெப்சி கோலாவின் குளிர் பானங்கள் குடிக்க இலாயக்கற்றதாகக் கண்டுபிடிக்கப்பட்டு, அந்நிறுவனத்தின் பல கிட்டங்கிகள் மூடப்பட்டு சீல் வைக்கப்பட்டன. இப்படி தனியார் முதலாளிகள் தயாரித்து விற்கும் பொருட்களின் ''தரம்'' பற்றி ஆயிரம் உதாரணங்களைக் கூறலாம். தனியார் முதலாளிகள் தாங்கள் தயாரிக்கும் பொருட்களின் தரத்திற்குச் செலவழிப்பதை விட, தாங்கள் தயாரிக்கும் பொருள்தான் தரமானது என்ற மாயையை மக்கள் மத்தியில் உருவாக்கும் விளம்பரங்களுக்குதான் அதிகம் செலவிடுகின்றனர்.

பொதுத்துறை நிறுவனங்களைத் தனியாருக்குத் தாரைவார்ப்பதால், அந்தந்த நிறுவனங்களில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் வேண்டுமானால் ஆட்குறைப்பினால் பாதிக்கப்படலாம்; வேறு வகையான பாதிப்புகளோ, அந்த நிறுவனங்களில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் தவிர பிறருக்கோ, பெருவாரியான இந்திய மக்களுக்கோ நேரடியாகவோ / மறைமுகமாகவோ எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது எனக் கூறிவிட முடியுமா?

''மாடர்ன் ஃபுட்ஸ் தயாரிக்கும் சிறிய ரொட்டி பாக்கெட் ஐந்து ரூபாய்க்கு விற்கப்படுகிறது; ராமலிங்கா என்ற தனியார் நிறுவனம் அதே அள்வுள்ள ரொட்டி பாக்கெட்டை ரூ. 6.50-க்கு விற்கிறது. ''மாடர்ன் ஃபுட்ஸ்''இன் சற்றுப் பெரிய ரொட்டி பாக்கெட் எட்டு ரூபாய்க்கு விற்கப்படும்பொழுது, மில்கா, மம்மி, ராமலிங்கா போன்ற தனியார் நிறுவனங்கள் அதே அளவு கொண்ட ரொட்டி பாக்கெட்டுகளை பதினோரு ரூபாய்க்கும், ஸ்பென்சர்ஸ் ரூ. 12.50-க்கும் விற்கின்றன. அரசு நிறுவனமாக இருந்த ''மாடர்ன் ஃபுட்ஸ்'' ஓரளவு மலிவான விலைக்கு ரொட்டியை வழங்கி வந்ததால், தனியார் முதலாளிகள் தாங்கள் தயாரிக்கும் ரொட்டி விலையைத் தாறுமாறாக உயர்த்திக் கொள்ள முடியாத நிலை இருந்து வந்தது.

1992- ஆம் ஆண்டு ''மாடர்ன் ஃபுட்ஸ்''-க்கு இணையாகத் தங்களின் ரொட்டி விலையையும் குறைக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளான இத்தனியார் முதலாளிகள், ''மாடர்ன் ஃபுட்ஸ்'' நிறுவனத்திற்கு ராவ் அரசு மலிவு விலையில் கோதுமை கொடுக்கக் கூடாது; அந்நிறுவனத்தைத் தனியார்மயமாக்க வேண்டும்'' என்றும் கோரி வழக்குத் தொடுத்தனர். தனியார் முதலாளிகள் "நீதி" கேட்டதைப் பச்சையாகச் சொன்னால், பொது மக்களுக்குக் குறைந்த விலையில் ரொட்டி கிடைத்து விடக்கூடாது என்பதுதான்! ''மார்டன் புட்ஸ்'' நிறுவனத்தைத் தனியார் மயமாக்கியதன் மூலம், முதலாளிகள் கேட்ட நீதியை வழங்கிவிட்டது பா.ஜ.க. அரசு.

"மாடர்ன் ஃபுட்ஸ்" வெளிச்சந்தைக்குக் குறைந்த விலையில் ரொட்டி தயாரித்து விற்று வந்தது ஒருபுறமிருக்க, மதிய உணவுத் திட்டம், ஊட்டச்சத்துத் திட்டம் போன்ற சமூகநலத் திட்டங்களுக்குத் தேவைப்படும் ரொட்டிகளையும் தயாரித்து, தினமும் வழங்கி வருகிறது. சமூக நலத் திட்டங்கள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் ஒழித்துக் கட்டி விட வேண்டும் எனக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும்

www.padippakam.com



**சேலம் உருக்காலைத் தனியார்மயமாக்கப்படும் அபாயத்தை எதிர்த்துப் போராடும் தொழிலாளர் குடும்பத்தினர்**

ஏகாதிபத்திய நிறுவனங்களுள் ஒன்றான லீவர் நிறுவனத்தின் கைகளுக்கு "மாடர்ன் ஃபுட்ஸ்" போய்விட்ட பிறகு, இனி, அதனிடமிருந்து இத்தகைய சமூக உதவிகளை எதிர்பார்க்கதான் முடியுமா?

ஏற்கனவே, மேட்டுக் குடியினருக்காக பல்வேறு பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களைத் தயாரித்து விற்று வரும் லீவர், மாடர்ன் ஃபுட்ஸின் பேக்கரி தொழிற்சாலைகளை ரொட்டி தயாரிப்பதற்குதான் பயன்படுத்தும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. ஓரிரு ஆண்டுகள் கழித்து, நட்டக்கணக்குக் காட்டி ஆலையை இழுத்து மூடிவிட்டு, ஆலை நிலங்களை விற்றுக் கூட, லீவர் நிறுவனம், தான் போட்ட மூலதனத்தைவிட பல நூறு கோடி ரூபாய் இலாபம் சம்பாதித்து விடக் கூடும்.

ஒரிசாவில் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உணவுப் பொட்டலங்களைப் போடுவதற்கு இந்தியன் ஏர்லைன்ஸ் விமானங்கள் பயன்படுத்தப்பட்டன. இது போன்று சமூகப் பணிகளுக்கு விமானங்கள் பயன்படுத்தப்படும்பொழுது, அதற்குண்டான செலவை, வரவு - செலவு கணக்கில் சரி செய்து விடுவோம் என இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவன ஊழியர்கள் குறிப்பிடுகிறார்கள். அதே ஒரிசாவில் மின்சார வியாபாரம் செய்து வரும் ஏ.ஈ.எஸ். கார்ப்பரேசன் என்ற அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனம் "புயல் - வெள்ளத்தால் தங்களின் நிறுவனத்திற்கு 300 கோடி நட்ட மேற்பட்டு விட்டது; இந்த நட்டத்தை மாநில அரசு ஈடு செய்யாவிட்டால், மின்கட்டணத்தை மூன்று மடங்கு உயர்த்தி, எங்களின் நட்டத்தை மக்களின் தலையில் ஏற்றி வைத்து விடுவோம்" என எச்சரித்ததை இங்கே ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

பொதுத்துறை நிறுவனத்தில் வேலை பார்க்கும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை வீட்டிற்குத் துரத்தியடித்தப் பின்போ அல்லது அப்படிப்பட்ட விதிகளை ஒப்பந்தத்தில் சேர்த்துக் கொண்டோதான் தனியார் முதலாளிகள், பொதுத்துறை நிறுவனங்களை விலைக்கு வாங்குகிறார்கள். ஏற்கனவே வேலை பார்த்து வரும் தொழிலாளிகளைத் துரத்தியடிக்கும் இத்தனியார் முதலாளிகள், புதிதாக வேலை வாய்ப்புகளை பெருமளவில் உருவாக்கப் போவதில்லை. பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார்மயமாக்குவது வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பன்மடங்கு உயர்த்திவிடும் என்பதோடு, இட ஒதுக்கீடு உரிமையினையும் செல்லாக் காசாக்கி விடும்.

கல்வி, மருத்துவம் தொடங்கி ரோடு போடுவது, குப்பை அள்ளுவது வரை அனைத்துச் சேவைத் துறைகளையும் தனியார்மயமாக்கி வரும் அரசு, பொதுத்துறை நிறுவனத்தை விற்றுக் கிடைக்கும் பணத்தைச் சமூக சேவைத் திட்டங்களுக்குப் பயன்படுத்துவோம் எனக் கூறுவது முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது போன்றது. அரசு இந்தப் பணத்தைச் சமூக சேவைத் திட்டங்களுக்கோ, புதிய தொழில்களைத் தொடங்கவோ பயன்படுத்த வில்லை. இந்தப் பணம், பற்றாக்குறையைச் சமாளிக்கக்கூட அதற்குப் போதவில்லை.

இதன் விளைவு, பெரும்பாலான பொதுத்துறை நிறுவனங்கள் தனியார் கைக்குப் போய்விடும். அரசுக்கோ பற்றாக்குறை பட்ஜெட் மட்டுமே மிஞ்சும். அப்பொழுது பற்றாக்குறையைச் சமாளிக்க இந்திய அரசு என்ன செய்யும்? மேலும் கடன் வாங்கும்; மக்களின் தலைமீது வரிச் சுமைகளைத் தூக்கி வைக்கும். கடன், வரிச்சுமை, வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிப்பதுதான் பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார்மயமாக்குவதின் விளைவாக முடியும்!

● ரஹீம்

## எது நக்சல்பாரி வழி?

"நக்சல்பாரி", "தமிழின விடுதலை" போன்றவற்றைக் கேடாகப் பயன்படுத்திக் கொண்டு அராஜக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் வல்லம் இளவரசன் கும்பலை அம்பலப்படுத்தி, புதிய ஜனநாயகம் இதழில் ஒரு செய்திக் கட்டுரை வெளிவந்தது. இதன் தொடர்ச்சியாக கடந்த பிப்ரவரி 10-ந் தேதி அன்று ஜெயங்கொண்டத்தில், "எது நக்சல்பாரி வழி?" என்ற தலைப்பில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. நக்சல்பாரி போர்வைக்குள் ஒரு கொள்ளைக் கூட்டமாகச் செயல்பட்டு வரும் இளவரசன் கும்பலைக் கண்டித்தும், மக்களுக்காகப் போராடுவதே நக்சல்பாரி பாதை என்று விளக்கியும் தோழர்கள் சீனிவாசன் (ம.க.இ.க.), ஆம்பள்ளி முனிராஜ் (வி.வி.மு.) சேகர் (பு.மா.இ.மு.) ஆகியோர் சிறப்புரையாற்றினர். இளவரசன் கும்பலின் மிரட்டிப் பணம் பறிக்கும் அராஜக நடவடிக்கையால் பீதியுற்று இருந்த ஜெயங்கொண்டம் நகர மக்கள், இப்பொதுக்கூட்டத்தால் புதிய நம்பிக்கையைப் பெற்று, தமது ஆதரவை வழங்கியுள்ளனர்.

— புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, ஜெயங்கொண்டம்.


**"புதிய ஜனநாயகம்" உரிமையாளர் மற்றும் இதர விவரங்கள்**
**படிவம் IV (விதி-8)**

| | | |
|---|---|---|
| 1. வெளியிடும் இடம் | : | 25, அருணாச்சலம் தெரு, ஜோதிராமலிங்க நகர், சென்னை - 600 083 |
| 2. வெளியிடும் காலம் | : | மாதம் இருமுறை |
| 3. அச்சிடுபவர் பெயர் | : | இரா. சன்முகராசு, |
| இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| முகவரி | : | எழில் பிரிண்ட்ஸ், 110, 2-ஆம் தளம், 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024. |
| 4. வெளியிடுபவர் பெயர் | : | இரா. சன்முகராசு, |
| இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| முகவரி | : | 25, அருணாச்சலம் தெரு, ஜோதிராமலிங்க நகர், சென்னை - 600 083. |
| 5. ஆசிரியர் பெயர் | : | இரா. சன்முகராசு |
| இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| முகவரி | : | 25, அருணாச்சலம் தெரு, ஜோதிராமலிங்க நகர், சென்னை - 600 083. |

இரா. சன்முகராசுவாகிய நான், மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்று உறுதியளிக்கின்றேன்.

(ஒ-ம்) இரா. சன்முகராசு,
வெளியிடுபவர்.



படிப்பகம்

www.padippakam.com

# மின்துறை தனியார்மயம்

# யாருக்கு ஆதாயம்?

அரசுத் துறை நிறுவனங்களைத் தனியாருக்குத் தாரை வார்க்கும் உலக வங்கியின் உத்தரவுப்படி, இப்போது தமிழ்நாடு மின்சார வாரியமும் தனியாருக்கு விற்கப்பட உள்ளது. 1957-இல், அதாவது 42 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட தமிழ்நாடு மின்சார வாரியம் தமிழக மக்களுக்கான மிகப்பெரிய சேவைத் துறையாகும். அன்று 212 மெகாவாட் மின் உற்பத்தித் திறனுடன் இருந்த மின் வாரியம் இன்று 7000 மெகாவாட் மின் உற்பத்தித் திறனுடன் ஒரு கோடியே 24 லட்சம் மின் பயனீட்டாளர்களுக்குச் சேவை செய்யும் மிகப் பெரிய அரசுத் துறையாக வளர்ந்துள்ளது. உலக வங்கியின் ஆணைப்படி, தமிழ்நாடு மின்சார வாரியத்தைக் கலைத்து, ஒரிசா, ஆந்திரா, கர்நாடகா, அரியானா வழியில் தனியார் மயமாக்கும் முயற்சியில் தமிழக அரசு ஈடுபட்டு வருகிறது. இதன்படி, அமெரிக்காவின் எர்ன்ஸ்ட் அண்டு யங் என்ற நிறுவனம் ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்டு, அதற்கு ஊதியமாக ரூ. 32 இலட்சமும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மின் துறையில் உள்நாட்டு - வெளிநாட்டு முதலாளிகள் 30% மட்டும் முதலீடு செய்தால் போதும்; மீதி 70% மூலதனத்தை உள்நாட்டு நிதி நிறுவனங்கள் மூலம் பெற்றுக் கொள்ள வசதி; முதலீட்டில் 16% இலாப உத்திரவாதம்; இதுதவிர, முதலீட்டுச் சேவைக் கட்டணம், மின் நிலைய இயக்கக் கட்டணம் ஆகியவற்றையும் மின் கட்டணத்தில் முதலாளிகள் சேர்த்துக் கொள்ள ஏற்பாடு; எரிசக்தி இறக்குமதிக்குத் தாராள சலுகை; அனைத்துலக எரிசக்தி பொருளின் விலைக்கு ஏற்ப, மின் கட்டணத்தை உயர்த்திக் கொள்ள அனுமதி; தனியார் முதலாளிகள் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை எப்போதும் எல்லா நேரத்திலும் மின் வாரியம் கட்டாயமாக பெற்றுக் கொள்ள ஏற்பாடு; இலாபத்தை உள்நாட்டு - வெளிநாட்டு முதலாளிகள் டாலராக எடுத்துச் செல்ல, அதுவும் டாலர் - ரூபாய் நாணய ஏற்றத் தாழ்வுக்கு ஏற்ப எடுத்துச் செல்ல தாராள அனுமதி - முதலான கணக்கற்ற சலுகைகளுடன் முதலாளிகளின் பகற்கொள்ளைக்குப் பட்டுக் கம்பளம் விரித்துள்ளது தமிழக அரசு.

ஒப்பந்தப்படி தனியார் உற்பத்தி செய்யும் மின்சாரம் ஒரு யூனிட்டுக்கு ரூ. 4.50 பைசா; இதுவும் அதிகரித்துக் கொண்டே போகும். ஒப்பந்தப்படி தனியார் - பன்னாட்டு முதலாளிகள் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை வாங்கும் மின்சார வாரியம், அதற்கான கட்டணத்தை குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தாவிடில், வங்கியில் உள்ள மின் வாரியத்தின் 75% தொகையை தனியார் - பன்னாட்டு முதலாளிகள் எடுத்துக் கொள்ளலாம். இது வருமான அடமான ஒப்பந்தம் என்றழைக்கப்படும் சரணாகதி ஒப்பந்தமாகும். இதனால் மின்சார வாரியம் படிப்படியாக திவாலாகி, மின் துறையில் அரசின் பங்கே இல்லாமல் போய்விடும். மின்சார வாரியத்தில் பணியாற்றும் பல்லாயிரக்கணக்கான ஊழியர்கள் வீதியில் வீசியெறியப்படுவார்கள். இவைதான் தனியார்மயத்தின் மகிமை!

இந்நிலையில் கடந்த ஜனவரி 25 அன்று தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூன்று தொழிற் சங்கங்கள் உள்ளிட்டு ஆறு சங்கங்கள் நிர்வாகத்துடன் ஓர் ஒப்பந்தம் போட்டுள்ளன. இதன் மூலம் மறுசீரமைப்பு என்ற பெயரில் ஆந்திரா, ஒரிசா வழியில் மின்வாரியக் கலைப்புக்கும் தனியார் - பன்னாட்டு நிறுவனங்களின் பகற்கொள்ளைக்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.



தனியார்மயமாக்கலை எதிர்த்து தமிழக மின்வாரியத் தொழிலாளர்கள் - ஊழியர்கள் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலம்

இத்துரோக ஒப்பந்தத்தை எதிர்ப்பதாகக் கூறும் போலி கம்யூனிஸ்டுகளின் சி.ஐ.டி.யு. சங்கம், தனியார் மயம் - தாராள மயத்துக்கு எதிராக தொழிலாளி வர்க்கத்தை ஓரணியில் திரட்டிப் போராடுவதற்குப் பதிலாக, பாதிக்கப்படும் தொழிலாளர்களை மட்டும் முன்னிறுத்தி போராட்டத்துக்கு அறைகூவல் விடுத்துள்ளது. இங்கே தனியார் மயத்தை எதிர்ப்பதாக நாடகமாடும் இதே போலி கம்யூனிஸ்டுகள்தான், தாங்கள் ஆளும் கேரள மாநிலத்தில் இதே மறுசீரமைப்புக் கொள்கையை வரும் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து செயல்படுத்த உள்ளனர். மே. வங்கத்தில் உலக வங்கி உத்தரவுப்படி, மாநில மின் வாரியத்திடமிருந்து மின் உற்பத்தியை மட்டும் பிரித்து தனி வாரியமாக்கப்பட்டுள்ளது. மின் வினியோகம், கட்டண வசூல் ஆகியவற்றை மாவட்ட அளவிலான பஞ்சாயத்துகளின் பொறுப்பில் ஒப்படைக்க முயற்சித்து வருகிறது. இதன் மூலம் ஒட்டுமொத்த மின்வாரிய ஊழியர்களை புதிய நிர்வாகத்தின் கீழ் தள்ளிவிட அல்லது வீட்டுக்கு அனுப்பிவிட மே.வங்க 'இடது சாரி' அரசு முயற்சித்து வருகிறது.

தற்போது நடைமுறைப்படுத்தப்படும் மின்துறை 'சீர்திருத்தங்கள்' அனைத்தும் 1996-இல் நடந்த முதலமைச்சர்கள் மாநாட்டில் அங்கீகரிக்கப்பட்டவையாகும். இம்மாநாட்டில் அமைக்கப்பட்ட தேசிய வளர்ச்சிக் கவுன்சில் துணைக் கமிட்டி, மாநில மின் வாரியங்களைப் படிப்படியாகக் கலைத்து, தனியார் மயமாக்கப் பரிந்துரை செய்தது. இத்துணைக் கமிட்டியின் உறுப்பினராக இருந்தவர்தான் மே. வங்க 'இடது சாரி' அரசின் முதல்வர் ஜோதிபாசு!

மாநில மின் வாரியங்களைக் கலைத்து தனியார்மயமாக்க ஒப்புதல் அளித்து, அதை விசுவாசமாக செயல்படுத்தி வரும் இத்துரோகிகள்தான், இப்போது தமிழக மின்வாரிய ஊழியர்களிடம் தனியார் மய எதிர்ப்பு நாடகமாடுகின்றனர். இச்சந்தர்ப்பவாதிகளின் முகத்திரையைக் கிழித்து, தனியார்மயம் - தாராள மயத்துக்கு எதிராக அனைத்துத் தொழிலாளர்களுடன் மின் வாரியத் தொழிலாளர்களும் - ஊழியர்களும் ஐக்கியப்பட்டுப் போராட வேண்டியதே இன்றைய அவசியமாக உள்ளது.

★ சுப்பு

Published and Owned by A. SHANMUGARAJ, 25, Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110 ii Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: A. SHANMUGA RAJ.

படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (TAMIL FORTNIGHTLY) REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPER FOR INDIA UNDER NO. 42648/85 Regd. No. TN/Chief.PMG- 544 / 2000


# இதுதான் இன்றைய இந்தியா



**சா**தி வேறுபாட்டை ஒழிக்கும் புதிய திட்டம் என்று கூறி, தமிழகமெங்கும் சமத்துவபுரங்களைத் திறந்து கொண்டிருந்த தமிழக முதல்வர் கருணாநிதி, இப்பொழுது உழவர் சந்தைகளைத் திறந்து கொண்டிருக்கிறார். உழவர் சந்தைகள், காய்கறி விவசாயிகளை இடைத் தரகர்களின் பிடியில் இருந்து விடுவிக்க வந்துள்ள திட்டமாம்! ஊருக்கொரு உழவர் சந்தையைத் திறந்தாலும், பெரும் காய்கறி வியாபாரிகளையும், தரகர்களையும் ஒழித்துக் கட்டிவிட முடியாது. அதுதான் வர்த்தகச் சுதந்திரத்தின் மகிமை! அப்படியிருக்க, தமிழகமெங்கும் 100 உழவர் சந்தைகளைத் திறந்து, இடைத்தரகர்களை ஒழித்து விடுவோம் என்று கருணாநிதி கூறுவது, அண்டப் புளுகு, ஆகாசப் புளுகு. இந்த உழவர் சந்தைகள் பழைய இடைத் தரகர்களை ஒழிக்காதது மட்டுமல்ல, புதிய இடைத் தரகர்களை உருவாக்கியும் வருகிறது. அந்தப் புதிய இடைத்தரகர்கள்தான், உழவர் சந்தையில் விவசாயிகள் கடை போட அடையாள அட்டை வழங்குவது முதல் காய்கறியை என்ன விலைக்கு விற்க வேண்டும் என்பது வரை அனைத்தையும் தீர்மானிக்கிறார்கள். அதிகார வர்க்கமும், ஆளுங் கட்சியின் குட்டித் தலைவர்களும் தான் அந்தப் புதிய இடைத் தரகர்கள். உழவர் சந்தையில் நுழையும் விவசாயிகளின் நிலைமை பேயிடம் இருந்து தப்பித்துப் பிசாசிடம் மாட்டிக் கொண்ட கதையாகி விட்டது. தமிழக விவசாயிகளை இந்தப் ''பேய்''களும், ''பிசாசு''களும் மட்டும் தான் சுரண்டிக் கொழுக்கின்றனவா?

இதோ, சக்தி சர்க்கரை ஆலையின் முன்னே திரண்டு நின்று போராடுபவர்கள், ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த கரும்பு விவசாயிகள். ஒரு டன் கரும்பிற்கு ரூ. 730 தருவதாகக் கூறி இந்த விவசாயிகளிடமிருந்து கரும்பை வாங்கிச் சென்ற நிர்வாகம், பிறகு, டன்னுக்கு ரூ. 450 தான் கொடுக்க முடியும் என நாணயமின்றி அறிவித்தது. தி.மு.க. அமைச்சர் என்.கே.கே. பெரியசாமி தனது பாக்கெட்டில் இருக்கும் மிதப்பில், ஆலை நிர்வாகம் நியாயமான விலை கேட்டுப் போராடிய விவசாயிகளை போலீசை ஏவி அடித்துத் துரத்த முயன்றது. ஆனாலும், விவசாயிகள் உறுதியாக நின்று போராடியதால், நிர்வாகம் டன்னுக்கு 666 ரூபாய் உடனடியாகக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டு, மீதிப் பணத்தை ஒரு மாதத்தில் பட்டுவாடா செய்வதாகக் கூறியுள்ளது.

சக்தி சர்க்கரை ஆலை மட்டுமல்ல; தமிகத்தில் உள்ள 17 தனியார் சர்க்கரை ஆலைகளும் இப்படித்தான் கரும்பு விவசாயிகளின் வயிற்றில் அடித்து வருகின்றன. ''தமிழக அரசு கரும்புக்கு நிர்ணயித்துள்ள விலையைத் தர முடியாது'' என நீதிமன்றத்தில் தடையுத்தரவு வாங்கியுள்ளன. தமிழக அரசு இந்தத் தடையுத்தரவை எதிர்த்து ஒரு துரும்பைக் கூட அசைக்கவில்லை.



ஒருபுறம், இடைத் தரகர்களை 'ஒழிக்க' உழவர் சந்தைகளைத் திறக்கும் கருணாநிதி தான், இன்னொருபுறம் தனியார் கரும்பாலை அதிபர்கள் கரும்பு விவசாயிகளைச் சுரண்டத் துணை போகிறார்; அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய நாடுகளில் இருந்து அரிசி, கோதுமை, காய்கறிகளைத் தாராளமாக இறக்குமதி செய்ய அனுமதியளிக்கப்பட்டு, விவசாய விளைபொருள்களுக்கான சந்தை பன்னாட்டு நிறுவனங்களுக்கு அனாமத்தாகத் தூக்கிக் கொடுக்கப் பட்டுள்ள வேளையில், கருணாநிதி, உழவர் சந்தைகளைத் திறந்து உழவர் நண்பனாக நடிக்கிறார். இந்த மோசடியை, இந்த இரட்டை வேடத்தை தமிழக உழவர்கள் இனியுமா நம்பி ஏமாற வேண்டும்?

படிப்பகம்